

# தமிழரசு


அக் 1 1972 40 காசு





# செழுமையான விளைச்சலுக்கோர் சீரான சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்







செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசிய மானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.


ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்**
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.

LT-3506



# தமிழரசு




மலர்-3 இதழ்-7

1-10-1972


காந்தியடிகள் துறவு பூண வேண்டும் என்பதற்காகத் துறவு பூண்டவரல்லர். ஈரப் படுக்கையில் தானாக விரும்பி ஒரு தாய் படுக்கமாட்டாள், ஆனால் உலர்ந்த படுக்கையைத் தன் குழந்தைக்கு அளிப்பதற்காக ஈரப் படுக்கையை அவள் மனமகிழ்வுடன் ஏற்றுக் கொள்வாள் – இந்த அடிப்படையில் மக்கள் பணிபுரிவதற்காகவே காந்தியடிகள் துறவு பூண்டார்.

*– சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ்.*

# குறளோவியம்

காதலர் பிரிந்துவிட்டால் காதலியின் மேனியிலே பசலை நிறம் பாய்கிறதாம். பசப்புறு பருவரல் என்னும் அதிகாரத்தில் வள்ளுவனார் அந்தப் பசலை நிறத்திற்கு அடிமையான பாவையரின் வேதனைகளை மிக அருமையாகச் சித்திரித்திருக்கிறார்.

மஞ்சத்திலே கொஞ்சுமொழிகள் உதிரும்; ஆடல் - பாடல் - ஊடல் - கூடல் - எல்லாமே ஒன்றையொன்று போட்டியிடும். காலையிலே எழுந்திருந்து கண்ணாடி பார்க்கும் தலைவி, கண்ணாடியிலிருப்பதும் தன் உருவம்தான் என்பதை மறந்துவிட்டுத், திடீரென்று, தன் கன்னத்தை மூடிக்கொள்வாள். பிறகுதான் அவளுக்கு நினைவுவரும்; எதிரேயிருப்பது கண்ணாடி-அதிலே தெரிவது தன் உருவம் என்று! யாரும் தன் கன்னத்தைப் பார்த்து விட வில்லையென்ற திருப்தி ஏற்படும் அவளுக்கு. ஒவ்வொருநாளும் காலையிலே இப்படி ஒரு நிகழ்ச்சியைச் சமாளித்துத் தீரவேண்டியிருக்கிறது என்று தெரிந்து கூட, இரவு நேரத்திலே அவள் அதைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொள்வதுமில்லை; முன்னெச்சரிக்கையாக இருப்பதுமில்லை. அதனால் கன்னத்திலே பசலை நிறம் பாய்ந்த ஒரு வட்டம் உதயமாகிவிடுகிறது. யாராவது பார்த்துவிடுவார்களே என்ற வெட்கம் இருந்தாலும்கூட, அந்தக் கன்னத்தை அவள் தனக்குள்ளாக ரசிக்கத் தவறுவதில்லை. மெல்லிய விரல்களால் தடவிப் பார்த்து - ஏதோ ஒரு நடந்து போன நிகழ்ச்சியை எண்ணி அவளாகவே சிரித்துக் கொள்கிறாள். யாராவது வந்தால், கன்னத்தைத் தடவுவது போல் மறைத்துக் கொள்கிறாள். வந்தவர் போனதும், கண்ணாடியில் முத்திரை அவள் கண்ணுக்கு விருந்தூட்டிக், கருத்துக்கும் இனிமை சேர்க்கிறது.



# முதல்வர் கலைஞர்

இவளைப் போலவே, ஓர் எழிலரசியைப் பேச வைக்கிறார் திருக்குறளார். காதலன் பிரிந்துவிட்டான் காதலியிடம் விடை பெற்று! நிலவு போனதும் வானத்திற்கு இருள் நிறம் வருகிறதே அதுபோலவே இந்த நேரிழையாளுக்கும் பசலை நிறம் மேனியில் பரவி விடுகிறதாம். இந்தப் பசலை தன் உடலில் ஏறிப் பரவுவதை அவள் காண்கிறாள். காதலரின் பிரிவால் அல்லவா இந்நிறம் ஏற்பட்டது என வருந்துகிறாள். அதேசமயம் அந்த வேதனையிலும் அவளுக்கோர் பெருமிதம் ஏற்படுகிறது.

கன்னத்தில் அடையாளம் பெற்ற காரிகை. வெட்கத்தால் வேதனையுற்றாலும். அது தன் காதலன் தந்த அடையாளம் என எண்ணி மகிழ்கிறாளே; அதுபோலவே இவளும் பிரிவுத்துயரால் என் உடலில் பரவும் இந்த நிறம், என் காதலரால் ஏற்பட்டது என எண்ணுவது பெருமைக்குரியது என்கிறாள்.

அந்தக் குறள் இது—

அவர்தந்தார் என்னும்
தகையால் இவர்தந்துஎன்
மேனிமேல் ஊரும் பசப்பு

# நாட்டுப் பற்று

வீரபாண் டிய மன்னன் விடுதலைப் போருக்கே
   வித்தாகத் தூக்கில் மாண்டான்,
தீரன் சிதம்பரம் தேசத்தை மீட்கவே
   சிறைசென்று செக்கி ழுத்தான்,
ஏறுபோலக் குமரனும் தாய்நாட்டின் கொடிகாக்க
   இன்னுயிரை விலைகொ டுத்தான்,
பேரொன்றும் தெரியாத எண்ணிலா வீரர்கள்
   பெரும்போரில் வாழ்வி ழந்தார்.

ஆருயிர் தந்தேனும் தாய்நாடு காத்ததை
   ஆராய நான்பு குந்தேன்,
அத்தனை பந்தமும் பாசமும் ஏனென்ற
   காரணம் கண்டு ணர்ந்தேன்.
பாரதம் என்பது மண்ணல்ல ; நதியல்ல ;
   பயிர்செய்யும் கழனி யல்ல ;
பாட்டனின் பாட்டனின் பாட்டனின் உடலெலாம்
   ப்ாதுகாக் கின்ற பேழை!

வீரர்கள் ஞானியர் பாவலர் பலகோடி
   விளையாடி நின்ற திண்ணை
விளையாடி வீழ்ந்தவர் மண்ணாகி எருவாகி
   விதையாகி விட்ட பண்ணை !
மாறியே மண்ணான முன்னோர்கள் இந்நாளில்
   மணியாக விளைந்து நின்றார் !
மணிகொண்டு உணவுண்டு வாழ்வோரும் பின்னாளில்
   மண்ணாகி வீழு கின்றார்.

பூக்கின்ற மலரெலாம் நம்முடை முன்னோரின்
   புன்னகை இதழ்க ளன்றோ ?
பார்க்கின்ற தென்னையின் பாளைச் சிரிப்பெலாம்
   பாட்டனின் பற்க ளன்றோ ?
நூற்கின்ற வெண்பஞ்சு நூலெலாம் பாட்டியின்
   நுரைவண்ணக் கூந்த லன்றோ ?
ஆர்க்கின்ற கடலோர மணல்மேடை நம்முடை
   அன்னையின் மடியே யன்றோ ?

அன்னையின் மீதிலே அந்நியன் கால்படல்
   அவமான மாகு மன்றோ ?
ஆயிரம் தலைமுறைப் புதையலிப் பூமியை
   அர்ப்பணம் செய்வ துண்டோ ?
கண்ணிலும் மேலாகத் தாய்நாட்டைக் காப்பதன்
   காரணம் இதைய றிந்தேன் !
கண்மூடித் தனமான மண்ணாசை யல்லெனக்
   கருதியே மதிதெ ளிந்தேன் !

கண்ணகி வள்ளுவன் கம்பனின் உடலெலாம்
   கலந்ததே நமது தேசம் !
கற்புடன் வீரமும் கலைகளின் ஞானமும்
   கருவுடன் வந்த வாசம் !
அன்னையின் மேனியாய் அமைவுற்ற தாய்நாட்டின்
   ஆட்சியில் உரிமை சேர்ப்போம் !
அந்நியர் ஆதிக்கம் அணுவேனும் அணுகாமல்
   ஆண்மையாய் நின்று காப்போம் !



கவிஞர்
குமா. பாலசுப்பிரமணியம்



# கடமையைச் செய்யும் காவல் துறை

நண்பர்கள் என்றால் யார்? வினா எளிது; விடை தருவது எளிதல்ல; ஆனால் வள்ளுவர் இதனைத் தெளிவாக்கியுள்ளார். ''ஆடை நெகிழ்ந்தபோது எப்படிக் கை விரைந்து சென்று அவ்வாடையைச் சரி செய்கிறதோ அதே போலத் துன்பம் என்றதும் விரைந்து வந்து துன்பத்தைத் துடைப்பவன்தான் நண்பன்'' என்கிறார் திருவள்ளுவர். ஆம். அது எத்தனை உண்மை!

இக்கட்டான எந்தச் சூழ்நிலையையும் சமாளித்து, அதனால் தமக்கு வரும் துன்பங்களையும் ஏற்றுக் கொண்டு, துயருக்கு ஆளானவர்களைக் காப்பதே தம் கடமையெனப் பணியாற்றும் காவலர்கள், வள்ளுவர் சொன்னது போலத் துன்பத்தைத் துடைக்கும் நண்பர்களே அல்லவா?

நல்ல சமுதாயமென்னும் வயலில், களை போன்ற சமூக விரோதிகளையெல்லாம் கிள்ளியெடுத்தெறிந்து, அமைதி உண்டாக்கும் காவலர்களைச் சமூகத்தின் உயிர்நாடி என்று கூடச் சொல்லலாம்.

காவலர்களே இல்லாத ஒரு சமூகம், காவலர்களே இல்லாத ஒரு நாடு எப்படி இருக்கும் என்று சிறிது கற்பனை செய்து பார்த்தால், அப்பப்பா! அது கடும் புலி வாழும் காட்டைவிட மிகப் பயங்கரமானதாக இருக்குமே!

காவலர்களே இல்லையென்றால் — எத்தனை பொருள்களுக்குச் சேதம் ஏற்படும்? எத்தனை எத்தனை உயிர்களுக்குத் தீங்கு உண்டாகும்? எத்தனை எத்தனை போக்குவரத்து விபத்துக்கள் நேர்ந்து கொண்டிருக்கும்?

கைப்பொருள் இழந்தவன் துடிதுடிக்கவும், கைப் பொருள் பறித்தவன் துள்ளி மகிழவும் வேண்டிய சூழ்நிலைகள் உருவாகாதா? வாழ வேண்டியவன் உயிர் துறப்பதும், உயிரைக் குடித்தவன் உல்லாசமாக வாழ்வதும் போன்ற நிலைமைகள் வளராதா? வண்டியோடு வண்டி மோதுவதால் ஏற்படும் பொருட் சேதங்களும், உயிர்ச் சேதங்களும் அதிகரித்துக் கொண்டே போகாதா?

ஆம். இவற்றுக்கெல்லாம் ஒரு முடிவு காணவே காவல்

மறைவெய்திய காவல்துறை டி. எஸ். பி. சி. சாமுவேல் அவர்களுக்காக, அவரது மனைவியாரிடம் பதக்கம் தருகிறார் முதல்வர்.



துறை பணியாற்றிக் கொண்டிருக்கிறது; இவை போன்ற அசம்பாவிதங்கள் நிகழா வண்ணம் தடுக்கவே காவல் துறை தன் கடமையைச் செவ்வனே செய்து வருகிறது.

இவை மட்டுமா? கெட்ட வழிகளில் மனத்தைச் செலுத்தத் தூண்டும் தீய பத்திரிகைகளைத் தடுக்கவும், பொய்ப் பிரச்சாரங்களைப் புகுத்தி மக்களைக் குழப்பத்துக்குள்ளாக்குவோரை ஒடுக்கவும், வன்முறைச் செயல்களில் ஈடுபடும் தீயவர்களை அடக்கவும் காவல் துறைக்கு மிகுந்த பொறுப்பு இருக்கிறது.

இத்தகு வலிமை வாய்ந்த காவல் துறையின் காவலர்க்குத் தமிழ்நாடு அரசு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகிறது. தமிழகத்தில் சிறப்பாகப் பணியாற்றிய காவலர்களுக்கும், தீயணைக்கும் படையினருக்கும் ஆண்டுதோறும் மறைந்த மாமேதை அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளின்போது முதல்வர் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு இருபதைந்து பேர் இந்தப் பதக்கங்களையும் பரிசுத் தொகைகளையும் பெற்றுள்ளனர். இதற்கான விழா செப்டம்பர் 13-ஆம் நாள் காஞ்சி மாநகரில் மிகச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. சீரிய தொண்டுக்கும், தீரச் செயலுக்கும் பரிசுகள் பெற்றவர் இவர்கள்தான் :

தலைமைக் காவல் அதிகாரி, முதல்வரை வரவேற்கிறார்.



1. எஸ். இராமரத்தினம் (சி. ஐ. டி., துணை சூபரிண்டெண்ட்)—ரூ. 3,000.

2. ஜோசப் பீட்டர் (டி.எஸ்.பி., தர்மபுரி காவல் துறை),—ரூ. 3,000.

3. வி. எஸ். நடராசன் (கோவை டி. எஸ். பி.)—ரூ. 3,000.

4. சி. சாமுவேல் (மறைவெய்தியவர்) கலால்துறை டி.எஸ்.பி.—ரூ. 3,000.

5. எம். இலட்சுமணன் (போலீஸ் தனிப்பிரிவு டி.எஸ்.பி.)—ரூ. 3,000.

6. எஸ். அமிர்தலிங்கம் (தீயணைப்புப்படை டிவிஷனல் அதிகாரி)—ரூ. 3,000.

7. சி. ஆர். நடராசன் (கோவை போலீஸ் இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000.

8. கே. எத்திராசுலு (சென்னை உணவுப் பிரிவு துப்பறியும் இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000.

9. ஆர். கிருட்டிணமூர்த்தி (சென்னை வேப்பேரி இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000,

10. எல். ஏ. கருப்பையா (சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000.

11. டி. ஆர். சீனுவாசன் (ஆயுதப் போலீஸ் இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000.

12. கே. அருணாசலம் (ஊழல் ஒழிப்புப்பிரிவு இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000.

13. கே. என். விட்டல் கதிரி (ஊழல் ஒழிப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000.

14. டி. டி. வி. இராமன் (ஊழல் ஒழிப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர்)—ரூ. 2,000.

15. ஆர். மாணிக்கம் (தீயணைப்புப் படை நிலைய அதிகாரி)—ரூ. 2,000.

16. ஜி. இராசமாணிக்கம் (சப்-இன்ஸ்பெக்டர், வட ஆர்க்காடு)—ரூ. 2,000.

17. எஸ். எம். அஜீசுதீன் (ஓய்வு பெற்ற தலைமைக் காவலர்)—ரூ. 1,000.

18. வி. சண்முகம் (தலைமைக் காவலர், திருச்சி இரயில்வே)—ரூ. 1,000.

19. டி. சொக்கலிங்கம் (தலைமைக் காவலர், லஞ்ச ஊழல் ஒழிப்புத் துறை)—ரூ. 1,000.

20. எஸ். சூலுடையார் (தலைமைக் காவலர், லஞ்ச ஊழல் ஒழிப்புத் துறை)—ரூ. 1,000.

21. என். பேச்சிமுத்துப் பிள்ளை (ஓய்வுபெற்ற சி.ஐ.டி.) ரூ. 1,000.

22. ஐ. பிச்சை (காவலர், இராமநாதபுரம்)—ரூ. 1,000.

தீரச் செயல் புரிந்ததற்காகக் கீழ்க்காணும் காவல் துறை அதிகாரிகள் பரிசுகள் பெற்றனர்.

1. கே. கோபாலகிருட்டிணன் (நகர போலீஸ் உதவி ஆணையர்)—ரூ. 3,000.

2. ஜி. வி. ஜான்சுந்தர்சிங் (சென்னைப் போலீஸ் இன்ஸ்பெக்டர்)—ரூ. 3,000.

3. எஸ்.சி.சி. கெண்ட் (சென்னைப் போலீஸ் இன்ஸ்பெக்டர்)—ரூ. 3,000.

காவலர்க்கு இத்துறையில் மேலும் ஊக்கம் அளிக்கும் வண்ணம் அமைந்திட்ட இந்த விழா அண்ணா காவல் அரங்கில் நடந்தது. விழா நடைபெறும் அரங்கத்திற்கு முதல்வர் கலைஞர் அவர்கள், காவல் துறையினர் அணிவகுக்கத் திறந்த காரில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்.


சாலையின் இருபுறமும் மக்கள் திரளாக நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கலைஞரை வரவேற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஒவ்வொரு காவலரும் பெருமிதமடைந்த இந்த விழாவுக்கு, மாநிலக் காவல் துறைத் தலைமையாளர் திரு எப். வி. அருள் தலைமைதாங்கி உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :

“ கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் கடமையாற்றக் கூடியவர்கள் காவலர்கள் ; மக்களுக்குப் பணிபுரியக் காத்திருப்பவர்கள் காவலர்கள். இந்தியாவிலேயே தலைசிறந்தவர்கள் என்கிற பேரும் புகழும் பெற்றவர்கள் நமது காவலர்கள்.

“ தமிழகக் காவலர்களைத் தட்டிக் கொடுத்தும், சீரிய பல திட்டங்களை நிறைவேற்றியும் நாடும் ஏடும் புகழ நல்லாட்சி நடத்துபவர் நமது முதல்வர்.

“ ஏழை விவசாயிகளுக்கு நிலப்பட்டா வழங்குவது போல ஓய்வு பெற்ற காவலர்களுக்கும் நிலம் தரவேண்டும். காவலர் பக்கமும் முதல்வர் கண்ணோட்டம் செலுத்த வேண்டும்.



ரகசிய போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு கருப்பையாவுக்கு முதல்வர் பதக்கம் அணிவிக்கிறார்

“ வார விடுப்பில் வேலை செய்யும் காவலர்க்கு ஒரு ரூபாய் ஊதியம் தரப்படுகிறது. இதை இரண்டு ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்”.

ஏற்றமும் தோற்றமும் மிக்க இந்தப் பெருவிழாவில் பரிசுகளை வழங்கி முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார் :

“ இன்று காவல் துறை நண்பர்களின் வரலாற்றில் ஒரு புதிய நாள் ! பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளில் காவல் துறை நண்பர்கள் புரிந்த அரும் செயல்களுக்கான சிறப்புப் பதக்கங்களையும், வீரப் பதக்கங்களையும் பெற வேண்டுமென்ற ஒரு கருத்தை அண்ணா அவர்களுக்குப் பிறகு—அவர்கள் விட்டுச் சென்ற பொறுப்பை ஏற்றுக் கொண்ட நான் வெளியிட்டு, அந்தக் கருத்து உடனடியாகச் செயல்படுத்தப்பட்டு நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

“ 25 காவல் துறை நண்பர்கள் இன்று விருதுகளைப் பெற்றிருக்கிறார்கள். தமிழகத்துக் காவல் துறை தலையாய பெருமை வாய்ந்த துறை என்பது இந்திய நாட்டில் அனைவரும் ஒப்புக் கொள்வார்கள்.

“ இந்தியாவிலேயே தமிழ் நாட்டுக் காவல் துறையினர் ஆற்றியிருக்கிற பணிகள் மெச்சத் தகுந்தவை—போற்றத் தகுந்தவை—புகழத் தகுந்தவை.

“ தலைமை அதிகாரி உருக்கமாக, ‘ நாங்களும் மனிதர்கள் தான், உங்கள் நண்பர்கள்தான் ’ என்று கூறியதைப்போல்—காவல் துறையில் இருப்பவர்கள் புதிதாகச் சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளை நிலைநாட்டத் தருவிக்கப்பட்டவர்களல்ல.

“ நம்மில் ஒரு சாரார்—சமுதாய நலன்களைக் காப்பாற்ற, சட்டம் ஒழுங்கு அமைதி கெடாமல் பாதுகாப்பதற்காக இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்ற நினைவோடு நாட்டு மக்கள் காவல் துறையில் இருப்பவர்களுக்குத் தங்கள் ஒத்துழைப்பினைத் தந்தாக வேண்டும்.



''பொழுதெல்லாம் கடமையாற்றி, அல்லும் பகலும் மிகக் கடுமையான சோதனைகளுக்கிடையே தங்கள் வாழ்க்கையை ஒப்படைத்துப் பணியாற்றி வருகின்ற காவல்துறை நண்பர்களுக்கு மேலும் உற்சாகத்தைத் தர வேண்டுமென்பதற்காகவும், மேலும் அவர்கள் ஊக்கத்தோடு தங்கள் பணியை ஆற்ற வேண்டுமென்பதற்காகவும் இந்தப் பதக்கங்களைப் பரிசளிக்கின்ற விழாவினை நான் தேர்ந்தெடுத்தேன்.

'' விழா நடத்துகின்ற நாளாக நான் தேர்ந்தெடுத்த நாள் எது என்பதும் உங்களுக்குத் தெரியும். கடந்த மூன்றாண்டுகளாகத் தமிழகத்தில் வெவ்வேறு நகரங்களில் செப்டம்பர் 15-ஆம் நாளான அண்ணா பிறந்த நாளில் இந்த விழா நடைபெற்றிருக்கின்றது.

'' இந்த ஆண்டு இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே காஞ்சிபுரத்தில் இந்த விழா நடைபெறுவதற்குக் காரணம் உண்டு. தலைமை அதிகாரி ஒரு முக்கியமான மாநாட்டையொட்டி வெளிநாட்டிற்குச் செல்கிற காரணத்தால் இது இரண்டு நாள் முன்னதாக நடைபெறுகிறது.

'' எல்லா மாவட்டங்களையும் விடச் செங்கற்பட்டு மாவட்டத்தில் எதுவுமே கொஞ்சம் முந்தி நடைபெறும் என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு என்பதைச் செங்கற்பட்டு மாவட்ட மக்களுக்கெல்லாம் அண்ணாவின் பிரதிநிதியாக நின்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

'' பரிசு, பதக்கங்கள் வழங்குவது அவைகளைப் பெற்றவர்களை ஊக்கப்படுத்துவதற்காக மாத்திரமல்ல, பெற வேண்டியவர்கள் இதுபோன்ற நற்பெயர் எடுக்க வேண்டும்; அருஞ் செயல்கள் புரிய வேண்டும் என்ற ஆர்வத்தைப் பெறவும் இந்த நிகழ்ச்சிகள் உதவுகின்றன.

'' மத்தியிலே கூடத் தலை சிறந்த காவல்துறை அதிகாரிகளுக்குப் பதக்கங்கள், விருதுகள் வழங்கப்படுகின்றனவென்றாலும் நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன், தமிழ்நாட்டில் நடைபெறுகிற இந்த விழா ஒன்றில்தான் பதக்கங்கள் பரிசளிப்பது என்று மாத்திரமல்லாமல், அவர்களுக்கு 3,000 ரூபாய், 2,000 ரூபாய் என்ற அளவிற்குப் பண முடிப்பும் தரப்படுகிறது.

'' தலைமை அதிகாரி இரண்டொரு கோரிக்கைகளையும் வைக்கத் தவறவில்லை. நிலங்களைப் பட்டா செய்து காவலர்களுக்குத் தரப்பட வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. நான் உடனடியாக அதை இங்கேயே பரிசீலித்து முடிவெடுக்க இயலாது என்றாலும், அது பரிசீலிக்கப்படும்.

'' காவல்துறையினருக்கு வாரம் ஒருமுறை கட்டாயம் விடுப்பு உண்டு. அந்த நாளில் ஏதோவொரு முக்கியமான காரியத்திற்காக—அவசரத் தேவைக்காக அவர்கள் அந்த விடுப்பிலிருந்து விடுபட்டுப் பணியாற்றுவார்களானால் அவர்களுக்கு அந்த ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் தரப்படுகிறது என்று சொன்னார். அதைக் கேட்டு எனக்கே பரிதாபமாக இருக்கிறது. அதுவும் 20 ஆண்டுக்காலமாக இருந்து வருகிறது என்று சொன்னார். அதை எங்கே அதிகமாகக் கேட்பார்களோ என்று கருதினேன். என்னை உணர்ந்து—நிதி நிலைமையை உணர்ந்து ஒரு ரூபாயை இரண்டு ரூபாயாக ஆக்கித் தாருங்கள் என்று கேட்டார்கள். நான் இப்போதே அந்த ஒரு ரூபாய் இரண்டு ரூபாயாக நிச்சயமாக ஆக்கப்படும் என்று உறுதியை அளிக்கிறேன்.

பரிசும் பதக்கமும் பெற்றவர்கள் மேலும் உற்சாகத்தோடு தங்கள் பணியை நாட்டிற்கு அளிக்க வேண்டும்; பரிசுகளைப் பெற வேண்டியவர்கள் அவைகளைப் பெறும் வகையில் தங்கள் பணியை ஆற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்''.

—முதல்வரின் இந்தக் கருத்துக்கள் காவலர் முன்னேற்றத்துக்குப் பெரிதும் உதவிடும் என்பது உறுதி.

நாட்டுப் பாதுகாப்பில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, அல்லும் பகலும் அயராது பணியாற்றி வரும் தமிழகக் காவல்துறை, உலக அரங்கிலே ஓர் உன்னதமான இடத்தினை விரைவில் எய்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

—பி.வி.ஜி.

# புரட்சி விழா புனித விழா

எங்கும் மகிழ்ச்சி! உவகைப் பெருக்கு!

நெடுநாளைய ஆசை நிறைவேறியதால்!

காலங்காலமாகக் கண்டு வந்த கனவு நனவாகியதால்!

உழைத்து உழைத்து ஓடாய் உருக்குலைந்தவர்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பத்தால்! அவர்கள் எண்ணம் ஈடேறியதால்!

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயத் தொழிலாளர் குடும்பங்களில் மகிழ்ச்சி! தமிழக அரசு அவர்களுடைய ஆசைகளை நிறைவேற்றிவிட்டது.

தாங்கள் குடியிருக்கும் மனைகளைத் தங்களுக்குச் சொந்தமாக்கித்தர வேண்டும் என்பதுதான் அவர்களுடைய நெடுநாள் கோரிக்கை, அது நிறைவேறி, அண்ணா பிறந்தநாளை ஒட்டி 14—9—1972 தஞ்சை மாவட்ட விவசாயிகள் 1,24,351 பேருக்குக் கும்பகோணத்தில் குடிமனைப் பட்டா வழங்கப்பட்டது.

அங்குதான் ஒரே மகிழ்ச்சி! உவகை!

* * *

குடந்தைத் திருநகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. கோட்டை கொத்தளங்கள் போன்று ஒளி விளக்குகளால் அலங்காரம்! கலைமணம் கமழும் எழிற் கோபுரங்களைக் கீற்றுலே அமைப்பதில் தஞ்சை மாவட்டத்துக்காரர்கள் தனிச் சிறப்பு உடையவர்கள் அல்லவா அவர்கள் கை வண்ணம் அனைத்தையும் தாங்கி நின்ற கோபுரங்கள் வளைவுகள் தான் எத்தனை! எத்தனை!

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர் பெருமக்கள் பன்னெடுங் காலமாகத் தாங்கள் குடியிருக்கும் மனைகளைத் தங்களுக்கு உரிமையாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தனர். நூற்றாண்டுக் காலமாகத் தீர்க்கப்படாமலிருந்த இந்தப் பிரச்சினையால் நெஞ்சத்தில்படிந்திருந்த வேதனைகள் அன்றோடு மறைந்ததால்தான் அந்த ஏழைப் பாட்டாளிமக்களிடம் அத்தகைய மகிழ்ச்சி வெள்ளம்!

அந்த மகிழ்ச்சியை உருவாக்கியது நமது தமிழக அரசு.

* * *

தமிழ்நாடு குடியிருப்பு (உடைமையை உரிமையாக்கும்) சட்டம் 1971 என்ற சட்டத்தை 19—6—1971 அன்று தமிழ்நாடு அரசு நிறைவேற்றியது.

இச்சட்டம் 15—1—1972 அன்று செயல்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின்படி 19—6—1971 அன்று ஒரு விவசாயியோ, விவசாயத் தொழிலாளியோ குத்தகைதாரர் என்ற முறையிலோ, உரிமம் பெற்றவர் என்ற நிலையிலோ நிலவுடைமையாளருக்குச் சொந்தமானஎந்த ஓர் இடத்திலும் தான் உபயோகித்துவரும் மனைக்கட்டும் அதன் மேல் உள்ள கட்டடமும் 15—1—1972 முதல் அவரவர் உடைமையாகக் கருதப்படும்.

இச்சட்டம் நிறைவேறுவதற்கு முன்னரே அரசு நிலங்களை வீட்டு மனைகளுக்காகப் பட்டாவாக்கிக் கொடுக்கும் தீவிரத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

1960-ஆம் ஆண்டுமுதல் 1969-ஆம் ஆண்டு வரை வீட்டுமனை 3273 பேருக்கு வழங்கப்பட்டது.

1969—70-ஆம் ஆண்டில் மட்டும் 11,236 பேருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டது.

1970—71-ல் மட்டும் 14,125 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. 1971—72-ல் வீட்டு மனைப்பட்டா 1,685 பேருக்கு வழங்கப்பட்டது.

சட்டம் நிறைவேற்றுவதற்கு முன்னர் அளிக்கப்பட்ட வீட்டு மனைப்பட்டாக்களைத் தொடர்ந்து இந்த ஆண்டிலும் தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது. நிலக்கிழார்கள், தங்கள் பட்டா நிலங்களில் குடியிருந்து வரும் விவசாயிகளின் நலனுக்காக அந்த நிலங்களை இலவசமாக அளித்தனர். அந்தக் குடியிருப்பு மனைகளைத் தஞ்சை மாவட்டம் திருவையாற்றில் 27—2—1972 அன்று நடைபெற்ற விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் 6,764 பேருக்கு வழங்கினார்கள்.

15—6—1972 அன்று திருத்துறைப் பூண்டியில் நடைபெற்ற குடியிருப்பு மனை வழங்கும் விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் 26,150 பேருக்குக் குடியிருப்பு மனைப் பட்டாக்களை வழங்கினார்கள்.

அண்ணா பிறந்த நாளை ஒட்டி 14—9—1972 அன்று குடந்தையில் 1,24,351 பேருக்குக் குடியிருப்பு மனைகளை முதல்வர் கலைஞர் வழங்கினார்.

* * *

ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டவர்களுக்கு வீட்டுமனை வழங்கக் குடந்தை நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில்தான் மகிழ்ச்சி வெள்ளம் பாய்ந்தோடியது.

வீட்டுமனைப் பட்டா வழங்கும் விழாவிற்கு வருகை தந்தவர்


களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு கே. ஏ. நம்பியார் வரவேற்றார். விழாவுக்கு வருவாய்த் துறை அமைச்சர் மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் தலைமை ஏற்றார்கள் குடந்தைத் தொகுதிச் சட்ட மன்ற உறுப்பினர் திரு என். காசிராமன், குடந்தை நகராட்சி மன்றத் தலைவர் திரு பாலகுருமூர்த்தி, ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு பெர்னாட்சா, குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு இராம அரங்கண்ணல், எம். எல். ஏ., உணவு அமைச்சர் மாண்புமிகு மன்னை ப. நாராயணசாமி அவர்கள், வேளாண்மை அமைச்சர் மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் ஆகியோர் உரையாற்றிய பின் முதல்வர் அவர்கள் நிலப்பட்டாக்களை வழங்கினார்கள்.

* * *

தஞ்சை மாவட்டத்தில் வீட்டு மனைப் பட்டாக்களைப் பெற்ற 1,57,265 பேர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 1,00,346 பேர். பிற்பட்ட வகுப்பினர் 47,443 பேர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தஞ்சை மாவட்டத்தில் இப்பொழுது வீட்டுமனைப் பட்டாக்களைப் பெற்றுள்ள விவசாயத் தொழிலாளர்களைத் தவிர, தகராறு இல்லாத புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் 13,298 பேர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்படும்.

தமிழ்நாடு குடியிருப்பு (உடைமை உரிமையாக்கும்) சட்



டத்தின்படி வீட்டுமனை பெறும் விவசாயத் தொழிலாளியிடமிருந்து அந்த மனைக்கு உரிய தொகையைப் பல தவணைகளில் பெற வழி வகுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த விழாவில் பேசிய முதல்வர் அவர்கள் விவசாயிகளிடமிருந்து வீட்டுமனைப் பட்டாவுக்காக எந்தத் தொகையும் வசூலிக்கப்பட மாட்டாது என்றும் தஞ்சாவூர் மாவட்டம் போன்று இந்த ஆண்டிலிருந்து எல்லா மாவட்டங்களிலும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் என்றும் அறிவித்தார்கள்.



முதல்வர் அவர்கள் ஆற்றிய உணர்ச்சி மிகுந்த உரையில் சில பகுதிகள் வருமாறு !

''மகா மகம் நடைபெறுகிற இடம் இந்தக் குடந்தை மாநகரம்.

சப்தஸ்தானம் நடைபெறுகிற இடம் இந்த விழா தொடங்கப் பெற்ற திருவையாறு நகரம்.

ஆகவே இந்த இரண்டு புனிதமான நகர்களிலும் புனிதமான இந்தப் பணி தொடங்கப் பெற்று முடிவடைவது-பக்தர்களுக்கெல்லாம் பரவசத்தை உண்டாக்குகிற நிகழ்ச்சி என்று நான் கருதுகிறேன்.

* * *

ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்குக் குடியிருப்பு மனைகளை வழங்குகின்ற இந்த நிகழ்ச்சி, அப்படி ஒன்றும் சாதாரணமான நிகழ்ச்சி அல்லதான்.

ஆனால் இந்த நிகழ்ச்சியோடு ஏழை எளிய மக்களின் துயரம் தீர்ந்து விடுகிறதா? நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்.

ஒரு நாட்டில் ஒரு பிரஜைக்குத் தேவையானவை உணவு; உடை; உறையுள்.

மூன்று தேவைகளும் நம் நாட்டிலே எல்லா மக்களுக்கும் பூர்த்தி செய்யப்பட்டு விட்டதா என்றால்-இல்லை.

அப்படிச் செய்யப்பட்டிருக்குமேயானால்-'வறுமையை வெல்வோம்' அல்லது வறுமையை

விரட்டுவோம்,' என்கின்ற முழக்கங்கள் எல்லாம் இந்தக்காலத்திலே தேவைப்படாத முழக்கங்களாக ஆகி விட்டிருக்கும்.

அந்த முழக்கங்கள் இன்னும் நம்முடைய செவிகளிலே ரீங்காரம் செய்வதிலிருந்து நாம் இந்த நாட்டுக்கு முழு அளவிலே அவற்றை நிறைவேற்றிவிட்டோம் என்று மன ஆறுதல் கொள்கின்ற சூழ்நிலையிலே இல்லை.

1947-ல் இருந்து 1967 வரை தஞ்சை மாவட்டத்தில் இந்த இருபது ஆண்டுகளில் ஏழை எளியவர்களுக்கு வீட்டு மனைகளை ஒப்படை செய்த வகையில் 3,657பேர்—பயன் பெற்றார்கள்.

இது இருபது ஆண்டுக் காலத்தில்!

ஆனால் 1967-லிருந்து 72 ஆகஸ்டு முடிய ஐந்தாண்டுக் காலத்தில் வீட்டு மனை பெற்றவர்கள் தஞ்சை மாவட்டத்தில் 28,725 பேர்.

அதைப் போலவே சாகுபடிக்கான நிலங்கள் ஒப்படை செய்

> வேறு மக்களிடையில் காணப்படும் தன்மைகளை விடத் தமிழர்களின் தனிப்பெரும் பண்புகள் தான் என்னிடம் பெருமளவு இருப்பதாகக் கருதுகிறேன்.
>
> —அண்ணல் காந்தியடிகள்

யப் பெற்றவர்கள் இருபதாண்டுக் காலத்தில் 2,467 பேர். ஆனால் இந்த ஐந்தாண்டுக் காலத்தில் 1967 முதல் 1972 ஆகஸ்டு முடிய சாகுபடி நிலம் பட்டாப் பெற்றவர்கள் 36,794 பேர்.

* * *

தஞ்சை மாவட்டத்தில் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து ஐம்பத்தேழாயிரம் பேர் குடியிருப்பு மனைகளை மாத்திரம் பெறுகிறார்கள். அந்த உரிமையை அளிக்கத் தமிழ்நாடு சட்டப் பேரவையில் நமது வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், ஒரு மசோதாவைக் கொண்டுவந்து அது சட்டமாக நிறைவேற்றப்பட்டு அந்தச் சட்டம் இன்றைக்கு அமலாக்கப்பட்டு, இங்குக் கண்டீர்களே கருப்பன் என்றும் காத்தான் என்றும் மூக்கன் என்றும் ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்-உழைப்பின் கரங்களால்-நாற்று நட்ட கரங்களால்-நடவுநட்ட கரங்களால்-கழனியைப் பண்படுத்திய கரங்களால் உழுத கரங்களால் பெற்றுக் கொண்டார்களே, அந்தப் பட்டாக்களை அவர்கள் பெறுகின்ற நேரத்தில் நான் புனிதம் அடைந்தேன். நம்முடைய கைகள் புனிதம் அடைந்தன.

கும்பகோணம் மகாமகக் குளத்தில் ஆயிரம் முறை குளித்தால் புனிதம் ஏற்படும் என்று புராணிகர்கள் சொல்வார்கள். அதைவிட அதிகமான புண்ணியத்தைப் பெற்றோம் என்று என்னுடைய நெஞ்சம் பெருமகிழ்ச்சியடைகிறது!

# கல்வித்துறையில் அரசின் சலுகைகள்

"கல்விக்காக அரசு கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து வருகிறது; ஒவ்வொரு மாணவனுக்கும் கல்விக்காக இந்த அரசு எவ்வளவு பணம் செலவழித்து வருகிறது என்பதைச் சொல்கிறேன்.

1 ஆவது வகுப்பிலிருந்து 5 ஆவது வகுப்பு வரை படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் அரசு ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 62 செலவழிக்கிறது.

6 ஆவது முதல் 8 ஆவது வகுப்பு வரை படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 112 செலவு செய்கிறது.

9 ஆவது முதல் 11 ஆவது வகுப்பு வரை படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 245 செலவு செய்கிறது.

கல்லூரியில் படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 660 செலவு செய்கிறது.

பாலிடெக்னிக்கில் படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 3,600 செலவழிக்கிறது.

பொறியியலில் படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 8,400 செலவு செய்கிறது.

டாக்டர் படிப்பு படிக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் ஏறக்குறைய 5 ஆண்டுகட்கு மட்டும் ரூ. 55,000 செலவழிக்கிறது.


இவ்வளவு செலவழிப்பதற்குக் காரணம் எதிர்காலத்தில் இந்த நாடு மிகச் சிறப்புற்றுத் திகழ வேண்டும் என்பதற்காகத்தான்!

கோடிக் கணக்கான ரூபாய்களைக் கல்விக்கு மட்டும்—வேறெந்தத் துறைக்கும் செலவழிப்பதைவிட இந்தத் துறைக்கு அதிகமான அளவில் அரசு செலவு செய்துகொண்டு வருகிறது.

அரசு அளிக்கும் சலுகைகளை மாணவமணிகள் நன்கு பயன்படுத்திக்கொண்டு வாழ்க்கையில் முன்னேற முயற்சிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

[வேட்டவலம் பள்ளித் துணைக் கட்டிடத் திறப்பு விழாவில் கல்வியமைச்சர் மாண்புமிகு நாவலர்.]






# கதர் கிராமத் தொழில்கள்

கதர் கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது
புனிதத் தொண்டு

கதர் கிராமத்
தொழில்களை ஆதரிப்பது
கிராம மக்களுக்குச்
செய்யும் பேருதவி





கதர்- கதர்ப் பட்டு
சோப்பு, தேன்
தோல் பொருள்கள்
பனைவெல்லம்.
பனைப் பொருள்கள்
வார்ப்படங்கள்
மற்றும் பல் வேறு கைநுட்பப்
பொருள்கள் கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில் கிடைக்கும்





## கதர் கிராமத் தொழில் துறை

2. சர் தேசிகாச்சாரி சாலை
சென்னை-4

சந்தர்...



# வன விலங்குகளைக் காப்போம் !

நமது நாட்டுக் காட்டு வளம் தனிச் சிறப்பு வாய்ந்தது. வகைவகையான காடுகள் நமது மாநிலத்தில் பரவிக் கிடக்கின்றன. முட் புதர்களையுடைய பொட்டல் காட்டிலிருந்து, ஓங்கி வானுயர்ந்த மரங்களையுடைய பசுமைக் காடுகளும், கடலைச் சார்ந்த சதுப்பு நிலக் காடுகளும், 8,600 அடி உயரமுள்ள மலையுச்சியில் பரவிக் கிடக்கும் சோலைகளும் நிறைந்தது நமது பூமி. இவ்விதம் பரவிப் பரந்து கிடக்கும் காடுகளைப் போன்று, அங்கு வாழும் உயிரினங்களும் ஒப்பற்றவை.

யானை, மான், புலி, சிறுத்தை, காட்டுமாடு போன்ற பாலூட்டிகளும், வண்ண வண்ணப் பறவைகளும், மலைப் பாம்பு, நாகப்பாம்பு போன்ற ஊர்வனவும், உடும்பு, பறக்கும் ஓணான் போன்றவைகளும், பல ஆயிரக் கணக்கான பட்டாம் பூச்சி வகைகளும் காண்போர் உள்ளம் பரவச மடையச் செய்யும். இந்த ஒப்பற்ற வகைகளுக்கு நமது நாட்டின் மாறுபட்ட நில அமைப்பும் வேறுபட்ட தட்ப வெப்ப நிலைகளும், மாறிவரும் காலநிலையும், வகை வகையான தாவரங்களும் தான் காரணம். ஒவ்வொரு வகை விலங்கும் ஒவ்வொரு வகையான சூழ்நிலையில் கிடைக்கும் உணவு, நீர், பாதுகாப்பு, வெளிச்சம், வெப்பம் முதலிய தேவைகளை வைத்து, அந்தந்தச் சூழலில் தனது வாழ்வை நடத்தித் தனது இனத்தைப் பெருக்கி வளர்ச்சியடைகிறது. மேலே கூறப்பட்டவற்றுள் ஒரு தன்மை அழிக்கப்பட்டால் அந்த வகை இனமே அழிந்து போகும்.

நமது நாட்டு வனங்களையும், வனவிலங்குகளையும் பாதுகாப்பதில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலும், வரலாற்றுக் காலத்திலும் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வந்திருக்கிறது என்பதற்கு நமது நாட்டு இலக்கியங்களிலும், சரித்திர ஏடுகளிலும் சான்றுகள் இன்னும் காணக்கிடைக்கின்றன. பண்டை இலக்கியங்களிலும் சங்க நூல்களிலும் வனவிலங்குகளைப் பற்றி எண்ணற்ற குறிப்புகள் உள்ளன.

பா. இரா. முகம்மது பஷீர்
ஐ. எப். எஸ்.

வேடனால் துரத்திச் செல்லப்பட்ட புறாவைக் காப்பாற்றுவதற்காகச் சிபிச் சக்கரவர்த்தி தனது தொடையிலிருந்துசதையை வெட்டி வேடனுக்களித்து, புறாவைக் காப்பாற்றியதைப் பற்றிப் படித்திருக்கிறோம். முல்லைக்குத் தேர் ஈந்த பாரி வள்ளலைப் பற்றியும் தமிழ் இலக்கியத்தில் படித்து மனத்தைப் பறிகொடுத்திருக்கிறோம். தற்கால பாவலர்களுடையகவிதைகளிலும் தோகை விரித்தாடும் மயிலைப் பற்றியும், இன்னிசை பாடும் குயிலைப் பற்றியும், துள்ளி ஓடும் மானைப் பற்றியும், நவீன நடை பயிலும் பெண்களை அன்னத்திற்கு ஒப்பிட்டிருப்பது பற்றியும் வலிமைக்கு யானையைப் பற்றியும், வீரத்திற்குப் புலியைப் பற்றியும் படிக்கிறோம். அசோகச் சக்கரவர்த்தி, நாட்டிலுள்ள காடுகளையும், விலங்குகளையும் பாதுகாப்பதற்குத் தனிச் சட்டமே இயற்றினார்.

நமது நாட்டில் வாழ்ந்து திரிந்த சீட்டா (சிறுத்தைப் புலி), இரட்டைக் கொம்பு காண்டாமிருகம், சிவப்புத் தலை வாத்து போன்றவை முழுவதும் அழிக்கப்பட்டு இன்று நாம் புத்தகத்தில் படித்துத்தான் அறிய முடிகிறது. அவை எப்படிப்பட்ட மிருகங்கள், பறவைகள் என்று நூல் நிலையங்களிலும், அரும்பொருட்காட்சிச் சாலைகளிலும் உள்ள படங்களைப் பார்த்து அவைகளின் உருவங்களை அறிகிறோம். இப்படிப் பாதுகாக்கப்பட்ட படங்களும் அழிந்து போனால், நமது கற்பனையில் தான் இந்த மிருகங்களும், பறவைகளும் இடம் பெற வேண்டும். குருடர்கள் யானையைத் தொட்டுத் தடவிப் பார்த்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கற்பனை செய்தது போல், நாமும் அழிந்து போன மிருகங்களும் இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று கற்பனை செய்து கொள்ள வேண்டி வரும். இதைத் தவிர்ப்பதற்காவது நாம் நம்முடைய நாட்டின் ஒப்பற்ற இயற்கைச் செல்வங்களைப் பாதுகாப்பது அவசியம்.


அக்டோபர் 2-ஆம் நாள் காந்தியடிகள் பிறந்த நாள் விழாவின் தொடர்பாக அக்டோபர் முதல் வாரம் நாடெங்கும் வனவிலங்குப் பாதுகாப்பு வாரமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. அதையொட்டி தமிழ்நாட்டின் காட்டு விலங்குகளையும் பறவை இனங்களையும் இந்தக் கட்டுரை விளக்குகிறது.

இந்த நேரத்தில் நமது நாட்டில் இன்னும் வாழ்ந்து வரும் உன்னதமான விலங்குகளைப் பற்றி அறிந்து கொள்வது நன்மை பயக்கும். முதலில் யானையைப் பற்றித் தெரிந்து கொள்வோம். உலகத்தில் இப்பொழுது மூன்று வகையான யானை இனங்கள்தான் இருக்கின்றன.

இந்திய யானை, ஆப்பிரிக்க யானை இனம், ஆப்பிரிக்கச் சிறிய காட்டு யானை இனம் என்பவை இவை. இந்த மூன்று இனங்களிலும் ஆப்பிரிக்க யானைதான் அளவிலும், பருமனிலும் பெரியது. பண்டைக் காலந்தொட்டே நமது நாட்டவர்கள் யானையைப் பெரிதும் போற்றி வந்திருக்கின்றனர். அது சக்தி வாய்ந்தது என்றும், நுண்ணறிவுள்ளதென்றும், அதன் வலிமையை விரித்துக் கூறியுள்ளனர். யானையினுடைய பருமனை எண்ணியும், அதற்கு நுண்ணறிவு மிகுதி என்று நினைத்தும் மனிதர்கள் மிகவும் பயப்பட்டனர்.

யானைக்குக் கண்பார்வை குறைவானது. ஆனால் யானை வாசனையை நுகர்ந்து அறிவதில் திறமையும், கூர்மையான செவியையும் உடையது. ஒரு காலத்தில் நமது கானகத்தில் தன்னிச்சையாகப் பெருகிப் பரந்து வாழ்ந்து வந்த யானைக் கூட்டம், உலகப்போர்க் காலத்தில் காடுகளை அழித்ததாலும், பல யானைகளைப் பிடித்து உலகத்திலுள்ள மிருகக் காட்சிச் சாலைகளுக்கு அனுப்பியதாலும் எண்ணிக்கையில் குறைந்தது. ஆனால் குறைந்து வரும் வேகத்தைக் கண்டு திகைத்து, காப்பகங்கள் அமைப்பதன் மூலமும், காப்புச் சட்டங்களைக் கடுமையாக்கியும், இப்பொழுது யானைகளுக்குப் பாதுகாப்பு அளித்து வருகிறோம். யானைகளுடைய தந்தங்களுக்காகத் திருட்டுத்தனமாக யானைகளைச் சுடுவதும் குறைந்திருக்கிறது. மேலும் அவை கூட்டங் கூட்டமாக வாழ்வதனாலும், அடர்ந்த காடுகளில் மட்டுமே வாழ்வதாலும் தங்களை அழிவிலிருந்து காத்துக் கொள்கின்றன.

வனவிலங்குக் காப்பகத்தைச் சுற்றிப்பார்க்கிறார் முதல்வர்




யானைகள் காட்டுத் தழைகளையும், மூங்கிலையும், பசும் புல்லையும் விரும்பிச் சாப்பிடுகின்றன. மாலை வேளையில் தண்ணீர் குடித்துத் தாகம் தணிக்கின்றன. நீர் நிலைகளிலோ ஆற்றிலோ நீந்தி விளையாடும்போது துதிக்கை மூலம் நீரை வாரி இறைத்துப் பிளிறிக்கொண்டு குளிப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

யானை கருவுற்றுப் பத்தொன்பது மாதங்களுக்குப் பிறகு பெண் குட்டியையும், இருபத்தொரு மாதங்களுக்குப் பிறகு ஆண் குட்டியையும் ஈனுகிறது. வனத்துறையில் யானைகளைப் பிடித்துப் பழக்கி, காட்டு வேலைகளுக்காக நிருவகிக்கப்படும் யானைக் கோட்டங்களில் வைத்திருக்கும்போது அங்குள்ள யானைகளும் அங்கேயே உள்ள ஆண் யானையுடன் சேர்க்கை செய்து குட்டி போடுகின்றன.

ஆண் யானைகளுக்குச் சில சமயங்களில் ‘மதம்’ பிடித்துவிடுகிறது. ‘மதம்’ கொள்ளும் யானைகளுக்குக் கண்ணிற்கும் காதுக்கும் இடையிலுள்ள பகுதியில் ஒரு ‘‘சுரப்பி’’ சாதாரண காலத்திலுள்ளதை விடச் சற்றுப் பெரிதாக வீங்கி, அதிலிருந்து திரவம் வடிய ஆரம்பிக்கிறது. இத்தகைய நேரத்தில் யானை மிகவும் எரிச்சல் அடைகிறது. ஆதலால் அதன் அருகில் செல்வது அபாயகரமானதாக முடியும். மதம் ஏன் பிடிக்கிறது என்பதற்கு அறுதியிட்டு எந்தக் காரணத்தையும் சொல்ல முடியாத நிலையிலிருக்கிறோம். இனச் சேர்க்கைக்காகப் பால் உணர்வு ஏற்படும் காலங்களில் யானை மதம் கொள்ளும் என்றும் சிலர் கருதுகின்றனர். சாதாரணமாக ஆண் யானைகளுக்குத்தான் மதம் பிடிக்கிறது. ஆனால் ஒரு சில பெண் யானைகளுக்கும் மதம் பிடித்ததற்கு ஆதாரக் குறிப்புகள் காணக்கிடக்கின்றன. மதப் பிடிப்பு ஒரு சில வாரங்கள் வரை நீடிக்கிறது. வருடத்தில் எந்தக் காலத்தில் குறிப்பாக மதம் பிடிக்கிறது என்றும் திட்டமாகச் சொல்ல முடியாது.

யானையுடைய தந்தத்தை ஆடம்பரப் பொருளாக உலக மக்கள் கருதுகின்றனர். பர்மிய யானைகளுக்குள்ள தந்தம் நீளத்திலும், நிறைவிலும் குறைவானதாக இருக்கும். பெண் யானைகளுக்குத் தந்தம் மிகமிகச் சிறிதாகவே இருக்கும். இலங்கையிலுள்ள ஆண் யானைகளில் பெருவாரியானவற்றிற்குத் தந்தங்களே கிடையாது. இப்படிப்பட்ட யானைகள் நமது நாட்டிலும் சில இருக்கின்றன. தந்தமில்லாத யானைகளை 'மக்னா' என அழைக்கிறோம்.



முதல்வர் கலைஞர் முதுமலை வனவிலங்குக் காப்பகத்தில் ஒரு யானைக்குக் கரும்பு வழங்குகிறார்


நமது நாட்டு மலைக் காடுகளில் காணப்படும் மற்றுமொரு உன்னத மிருகம் 'கவுர்' என்று சொல்லப்படும் காட்டு மாடுகள் (காட்டெருமை என்றும் சொல்வார்கள்). இவை தென் மாநிலங்களில் மைசூர், கேரளம் ஆனமலை, முதுமலைக் காடுகளிலும் மந்தை மந்தையாகத் திரிகின்றன. நன்கு வளர்ந்து வயதான காளைகள் மினுமினுவென்று கருநிறமாக இருக்கும். கால்களில் குளம்பிலிருந்து முட்டு வரை, வெள்ளைக் காலுறை அணிந்தது போன்று வெண்மையாக இருக்கும். அவைகளுடைய கொம்புகள் வளைந்து கூர்மையாகவும், மிக உறுதி வாய்ந்ததாகவும் இருக்கும். மூங்கில் அதிகமுள்ளக் காடுகளில் மூங்கிலின் இளந் தாளைத் தின்று வாழும். வேட்டைப்பிரியர்கள் அதிகமாக இந்த மாடுகளை வேட்டையாடி அடியோடு அழிக்கும் நிலை வந்துவிட்டது. ஆனால் இப்பொழுது காட்டு மாடுகளை வேட்டையாடுவதற்குக் கடுமையான விதிமுறைகள் கடைப்பிடிப்பதால் இம்மிருகங்கள் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கின்றன. மேலும் முதுமலை, பந்திப்பூர் காப்பகங்களில் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருப்பதால் வெகுவாகப் பெருகி வாழ்ந்து வருகின்றன. நமது நாட்டு மாடுகளுக்கு ஏற்படும் தொத்து நோய்களும், இந்தக் காட்டு மாடுகளுக்குப் பரவி விடுகின்றன. வனவிலங்குக் காப்பகங்களில் அதைச் சுற்றியுள்ள கிராமத்து மாடுகள் உள்ளே வந்து மேய்வது தடுக்கப்படாமலிருப்பதால் பல நோய்கள் காட்டு மாடுகளுக்கும் பரவி அநேகம் மாடுகள் செத்து மடிகின்றன. இந்த நோய் பரவியது காரணமாக 1968-ஆம் ஆண்டு முதுமலையில் மட்டும் சுமார் 70–80 காட்டு மாடுகள் செத்து மடிந்தது மிகவும் வேதனைக்குரியதாகும். நாட்டு மாடுகள் காப்பகங்களில் மேய்வதைத் தடை செய்யாமல் விட்டோமானால், காட்டு மாடுகளும் மான்களும் அடியோடு அழிந்து போகும்.

நமது நாட்டில் தனிச் சிறப்பு வாய்ந்தது வெளிமான் என்று சொல்லப்படும் மான் வகையாகும். இந்த மான் இனம் நமது நாடு முழுவதும் உள்ள காடுகளில் மந்தை மந்தையாகப் பல ஆயிரக் கணக்கில் துள்ளித் திரிந்தன. ஆனால் இவைகளைக் கண்மூடித்தனமாக வேட்டையாடியதால் இப்போது ஒரு சில இடங்களில் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. தமிழ் நாட்டில் இப்பொழுது பாதுகாப்பளிக்கப்பட்ட கோடிக்கரை வனவிலங்குக் காப்பகத்திலும் கிண்டி மான்கள் பூங்காவிலும் மட்டுமே இந்த வெளிமான்கள் காணப்படுகின்றன. இந்த மான்கள் வெள்ளாடு போன்ற தோற்றமும் அமைப்பும் உள்ளவை என்றாலும் ஆண் வெளிமான்களுடையக் கொம்புகள் நீண்டு முறுக்கு முறுக்காக இருக்கும். அவை மிகவும் வேகமாக ஓடக்கூடியவை.

ஆண்மான்கள் காப்பி நிறமுள்ளதாக இருக்கும். பெண் மான்கள் செம்மை கலந்த தவிட்டு நிறமுள்ளவை. (பில்லாய்மான் என்றும் இவற்றைச் சொல்வார்கள்). இவை பெரும்பாலும் அடர்த்தியில்லாத திறந்த வெளிக்காட்டில் விரும்பித் திரியும். காட்டில் உள்ள வெளியிடங்களில் கூட்டங் கூட்டமாக மேய்ந்து திரியும். தமிழ் நாட்டு வனவிலங்குக் குழுவின் சின்னமாக வெளிமானும் மயிலும் இடம் பெற்றுள்ளன.

அடுத்தபடியாக நமது சிந்தனையைக் கவருவது வேங்கைப் புலி. ஒரு காலத்தில் இந்தியா முழுவதும் புலிகள் பல்கிப் பெருகி நாடெங்கிலும் திரிந்தன. மனிதனைவிடப் புலிகள் நாட்டை ஆக்கிரமித்துக் கொள்ளுமோ என்ற ஒரு கவலைகூட இருந்தது. ஆனால் இன்றைய நிலை காடுகளில் புலிகளைப் பார்க்க முடியுமா என்ற ஐயம் ஏற்படுமளவிற்கு அவை சுடப்பட்டும் துன்புறுத்தப்பட்டும் மிகவும் அரிதாகி விட்டன. இந்தியா என்றவுடன் புலியை இணைத்து எண்ணத் தூண்டும் அளவிற்கு நமது நாட்டில் புலிகள் மலிந்துகிடந்தன.

ஆனால் புலியினுடைய பூர்வீகம் இந்தியா இல்லை என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? என்றாலும் அதுதான் உண்மை. வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்ட காலத்தில் வடஆசியப் பகுதியான சைபீரியா மஞ்சூரியா போன்ற பகுதிகளிலிருந்து இந்தியாவிற்குக் குடிபெயர்ந்து வந்து காலப் போக்கில் பிந்திய இடத்தில் நிலையாகி விட்டன. இன்றைய உத்தேசக் கணக்குப்படி சுமார் 3,000 புலிகள்தாம் இந்தியாவின் காடுகளில் இருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது என்றாலும் எதிர்காலம் அவ்வ



எவு ஒளிமயமாக இல்லை என்று தான்கூறவேண்டும்.

ரேவா வட்டாரத்தில் வெள்ளைப் புலிகள் வாழ்கின்றன. வெள்ளைப் புலியைத் தனி இனம் என்று கூற முடியாது. புலியின் உடல் கரு மஞ்சள் நிறமும், மூங்கில் இலை போன்ற கரு நிற வரிகளும் அவை காட்டுப் புதர்களுக்கிடையில் செல்லும் போதும், பதுங்கி இருக்கும் போதும் பிறருக்கு எளிதில் பார்வையில் படாதபடி ''மறைக்கும் நிறமாக'' உதவுகிறது. சிறுத்தைப் புலியைப் (சீட்டா) போல வேகமாக ஓடித் துரத்தித் தனது இரையை அடிக்காமல், புலி பதுங்கியிருந்து, மானோ, மாடோ அருகில் வந்ததும் வேகமாகக் குறி தவறாது கழுத்திலும் தோள்பட்டையிலும் தாவிப் பாய்ந்து கீழே சாய்த்து உதிரத்தை உறிஞ்சிக் குடித்துவிட்டுத் தோளின்மேல் போட்டு மறைவிடத்திற்கு எடுத்துச் செல்லும்.

புலி மிகவும் புத்திக் கூர்மையும், சூழ்ச்சியும் உள்ள மிருகம் என்று கூறப்பட்டாலும் சில நேரங்களில் தேவையற்ற பிடிவாதக் குணத்தினால் முட்டாள்தனமாகவும் நடந்து கொள்கிறது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. ஆனால் குட்டியுடன் உள்ள பெண்புலி சாகும் வரைக்கும் போராடும். குட்டியுடன் இருக்கும் புலியை நெருங்குவது பேரபாயத்தை விளைவிக்கும். சிறுத்தையுடன் ஒப்பிடும் போது வேட்டையாடிக் கொன்ற இரையைப் புலி மிகவும் சுத்தமான முறையில் தின்னும். முதலில் குடல் அசுத்தங்களை அகற்றி வெகு தூரத்திற்கப்பால் மறைத்துப் போட்டு விட்டு, இறைச்சியை மட்டும் உண்ணும். ஆனால் சிறுத்தை எல்லாவற்றையும் குழப்பிச் சிதற அடித்து அசுத்தமான வகையில் தின்னும் இயல்புடையது.

ஆண் புலியும் பெண் புலியும் சாதாரணமாகத் தனித்தே வாழ்கின்றன. இனச் சேர்க்கைக் காலத்தில் மட்டும் கூடி வாழ்கின்றன. இந்தக் கூட்டு வாழ்க்கையும் மிகக் குறுகிய காலத்திற்குத்தான். அதன்பிறகு மறுபடியும் தனித்து வாழ ஆரம்பிக்கின்றன. ஆண் புலி, வேறொரு ஆண் புலியைத் தனது பிரதேசத்திற்குள் வர அனுமதிப்பதில்லை.

புலிக்கு இனச் சேர்க்கைக்கான குறிப்பிட்ட காலம் ஏதும் இல்லை. இனச் சேர்க்கை ஒரு சில நாட்களிலோ அல்லது ஓரிரு வாரங்களிலோ முடிந்தவுடன் ஆணும் பெண்ணும் தனித்தனியாகச் சென்றுவிடுகின்றன. கருத்தரித்த 4 மாதங்களுக்குள் குட்டியை ஈனுகின்றது. சாதாரணமாக ஒரு ஈத்தில் 3 அல்லது 4 குட்டிகளைப் போடும். ஆறுகுட்டிகள்வரை ஈன்றதற்கும் குறிப்புகள் உள்ளன. குட்டிகள் மிகச் சீக்கிரத்தில் நல்ல வளர்ச்சி அடைகின்றன என்றாலும் பிறந்து இரண்டு வருடங்கள் வரை தாய்ப் புலியுடன் வாழ்கின்றன.

புலிகளைக் கண்மூடித்தனமாக வேட்டையாடி அவை அடியோடு அழிந்து போவதைத் தடைசெய்யும் நோக்குடன் அரசு விதி முறைகளைக் கடுமையாக்கியுள்ளது. புலித் தோல்களை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதும் எடுத்துச் செல்வதும் அறவே தடை செய்யப்பட்டிருக்கிறது.

பறவை இனத்தில் நமது கவனத்தை அதிகமாக ஈர்ப்பது நமது தேசியப் பறவையான மயில்தான். நீண்ட தோகையும், வானவில்லின் அத்தனை வண்ணங்களும் ஒளிர்கின்ற இறகுகளும், தோகையை விரித்தாடும் போது சிதறித் தெறிக்கும் வண்ண ஜாலமும் நமது பார்வையை மட்டுமல்லாது உள்ளத்தையும் கவரக்கூடியது. மயில் நமது நாட்டில் எல்லாப் பகுதியிலும் வாழ்கிறது. மற்ற விலங்குகளுக்கு மனிதனால் ஏற்படும் அபாயத்தை போன்று மயிலுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அதன் வண்ண இறகுகளை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்காகவும், மயில் எண்ணெய் எடுப்பதற்காகவும் குறவர்கள் மயிலைப் பிடித்து அழித்து வந்தனர். ஆனால் மயில் தேசீயப் பறவையாக அறிவிக்கப்பட்டு அதனை வேட்டையாடுவது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் (Flamingo) என்றும், தமிழில் பூநாரை என்றும் அழைக்கப்படும் கொக்கு வகை நீர்ப்பறவை வட மேற்கு எல்லையில் உள்ள கட்ச் பகுதியில் கோடைக்காலத்தில் சதுப்புக் கழி நிலத்திலிருந்து ஆயிரக் கணக்கான மைல் தூரம் பறந்து வந்து தஞ்சை மாவட்டத்தில் உள்ள கோடிக்கரை முத்துப் பேட்டை சதுப்பு நிலப் பகுதியில் தங்கி வாழ்கின்றது. நீண்ட கால்களையும், நீண்ட கழுத்தையும் உடைய இந்தப் பறவையின் இரண்டு இறக்கைகளும் ரோஜா மலர் போன்ற செம்மை நிறமுடையவை. அவை மேலே பறக்கும்போது, செந்தழல் பறப்பது போன்று வானத்தையே செவ்வண்ணமாக்கிவிடும். அவை ஆழமில்லாத நீர்ப்பிடிப்பில் நின்று கொண்டு கழுத்தை வளைத்து நீருக்குள் தலையை முழுமையும் அமிழ்த்தி நீரிலுள்ள நுண் உயிரினங்களை வடித்தெடுத்து இரையாக உட்கொள்ளும். குளிர்காலம் முடிந்து கோடை காலம் ஆரம்பிக்கும் போது மறுபடியும் கட்ச் பகுதிக்குப் பறந்து சென்று விடுகின்றன.

கூழைக்கடா, செரவி, உள்ளான் போன்ற நீர்ப்பறவைகளும் குளிர் காலத்தில் வடக்கே பல ஆயிரக்கணக்கான மைல் தூரத்திலுள்ள சைபீரியா ஆப்கனிஸ்தான் முதலிய நாடுகளிலிருந்து பறந்து வந்து நமது நாட்டிலுள்ள நீர் நிலைகளில் தங்கி வாழ்ந்து விட்டு, கோடை ஆரம்பித்தவுடன் மறுபடியும் திரும்பி விடுகின்றன.

சட்டதிட்டங்களைப் கடைப்பிடிப்பதாலும் காப்பகங்களை ஏற்படுத்துவதாலும் மட்டும் நமது நாட்டில் ஒப்பற்ற விலங்குச் செல்வங்களையும், பறவைகளையும் காப்பாற்றிவிட முடியாது. நாம் ஒவ்வொருவரும் அச் செல்வங்களை அழிவிலிருந்து காப்பாற்றுவோம் என்று உறுதி எடுத்துக் கொள்வது முக்கியமாகும்.



வேண்டுகின்றேன்.

—எஸ். வெற்றிவேலன்,
ஆலங்குடி, புதுக்கோட்டை.

சம்பாவின் பின்பட்டத்தில் 'கோ. 25' நெல்லிற்குப் பதிலாகப் 'பொன்னி' பயிரிடலாம். கோ. 25 ரகத்தின் வயது 180 நாட்கள். ஆனால்'பொன்னி' ரகத்தின் வயது 140 நாட்களே. எனவே, குறுகிய காலத்தில் அறுவடை செய்ய விரும்பினால் பொன்னி ரகத்தைப் பின் சம்பாப் பட்டத்தில் பயிரிடலாம்.



# கேளுங்கள் கொடுக்கப்படும்!

**கோ.** 8 அவரையின் விதையை வாங்கி, காவல் கிணறு மகளிர் விவாதக் குழு அங்கத்தினர்கள் வீட்டுத் தோட்டம் அமைக்க விரும்புகிறார்கள். விதை எங்கு வாங்கலாம் ?

—மகளிர் விவாதக் குழு,
காவல் கிணறு,
திருநெல்வேலி மாவட்டம்.

கோ. 8 அவரை விதை அண்மையில்தான் வெளியிடப்பட்டுள்ளது. எல்லா வேளாண்மைக் கிடங்குகளிலும் அதற்குள் இப்புதிய ரக அவரையின் விதைகள் விற்பனைக்கு வந்திருக்க முடியாது. எனவே, இப்புதிய ரக அவரையின் விதைகளைப் பெறக் கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதுங்கள்.

பயிர் நிபுணர் (பயறு வகைகள்),
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

* * *

1-4-72 தமிழரசு இதழில் காளான் பயிர் செய்வதைப் பற்றிய விவரம் கண்டேன். தொட்டி எப்படி அமைப்பது? அடியில் பலகையோடு பெட்டி மாதிரியா? சைடு பலகை மட்டுமா? வைக்கோல் மேல் மண் போட வேண்டுமா? ஸ்பான் என்னும் காளான் விதை எங்குக் கிடைக்கும்? என்பன போன்ற விவரங்களைத் தெரிவிக்கவும்.

—ஆர். கே. பெத்தணசாமி,
38, கே.ஆர்.பி. நாயுடு தெரு,
பெரியகுளம்.

தாங்கள் கேட்டுள்ள கேள்விகளுக்குரிய விடைகள் 1—4—1972-ஆம் தேதிய 'தமிழரசு' இதழிலேயே கொடுக்கப்பட்டுள்ளன. தாங்கள் அக் கட்டுரையைக் கவனமாகப் படித்தால் விளங்கக்கூடும். இருப்பினும் தாங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க மீண்டும் கீழ்க் கண்ட விளக்கத்தை அளிக்கின்றோம்.

காளான் படுக்கை அமைக்கத் தொட்டி அமைக்க வேண்டியதில்லை. சைடு பலகையும் தேவையில்லை. தரையில் செங்கற்களை வைத்து, அதன் மேல், பலகைகளை வைத்தாலே போதுமானது. அப்பலகைகளின் மேல் தாள் கற்றைகளைக் கட்டுரையில் கூறியபடி அடுக்க வேண்டும். 2 பெஞ்சுகளை இணைத்துக்கூட அதன் மேல் தாள் கற்றைகளை அடுக்கலாம். ஆனால், தண்ணீரினால் பெஞ்சு கெட்டுவிடக் கூடும். எனவேதான் தரைக்கு மேல் சற்று உயரமாக பலகை அல்லது மூங்கில் தட்டி அல்லது செங்கற்களைக் கொண்டு மேடை அமைக்குமாறு கூறப்பட்டுள்ளது. வைக்கோல் மேல் மண் போடக்கூடாது. 'ஸ்பான்' என்னும் காளான் விதைப் பாட்டில் 2 வாங்க, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுவதுடன், ரூபாய் 2·00 முன் பணம் அனுப்பி வைக்கவேண்டும். காளான் விதைப் பாட்டிலை பார்சலில் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

பயிர் நோய் நிபுணர்,
பயிர் நோய்த் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-3.

* * *

எங்களுடைய ஒரு போக நன்செய் நிலத்தில் இந்நாள் வரை கோ. 25 நெல் சாகுபடி செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறோம். நெல் மகசூலும் பரவாயில்லை என்று சொல்லத்தக்க அளவில் இருந்து வருகிறது. எனினும் இவ்வாண்டு சம்பாவில் கோ. 25 ரகத்திற்குப் பதிலாகப் 'பொன்னி' நெல் சாகுபடி செய்யலாம் என்று எண்ணுகிறோம். நெல் மற்றும் வைக்கோல் மகசூல் திறனிலும், பூச்சி மற்றும் பூஞ்சாள நோய்களை எதிர்க்கும் சக்தியிலும் கோ. 25 நெல்லை விடப் பொன்னி உயர்வான ரகமா எனத் தெரிவிக்க வேண்டுகின்றேன். கோ. 25 சாகுபடி செய்யப்படும் மண் வகைகளே பொன்னிக்கும் ஏற்றதா எனவும் தெரிவிக்க

கோ. 25 நெல்லின் வயது அதிகம் என்ற ஒரு குறையைத் தவிர, அதிக நெல் மற்றும் அதிக வைக்கோல் அளிக்கும் திறன் வாய்ந்தது. நெல் விளைச்சல் போட்டிகளில்பெரும்பாலும் கோ. 25 நெல் மகசூலுக்கே மாநில முதற் பரிசு கிடைத்துள்ளது. 1966-67-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநில நெல் மகசூல் போட்டியில் கோ. 25 நெல் ரகமே ஏக்கருக்கு 4,544 கிலோ மகசூல்கொடுத்து முதல் பரிசைப் பெற்றுள்ளது. வேளாண்மைத் துறை பரிந்துரைக்கும் முறையில் சாகுபடி செய்தால், பொன்னியைவிட, கோ. 25 ரகம் அதிக மகசூல் கொடுக்கும் என்பது திண்ணம். தஞ்சை மாவட்டத்தில் சம்பாவில் கோ. 25 நெல் சராசரியாக ஏக்கருக்கு 75 கலம் நெல் கொடுக்கிறது. கோ. 25 நெல்லின் தண்டு பருமனாக இருப்பதால் குருத்துப் பூச்சியின் தாக்குதலுக்கு இலக்காகும். கோ. 25 ரகம் 'கொள்ளை' அல்லது 'குலைநோய்' (Blast) தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது. வைக்கோல் முரடானது.

ஆனால், 'பொன்னி' ரகத்தின் வயது குறைவாக இருப்பினும், கோ. 25 நெல் ரகத்தைப்போல் அதிக அளவு மகசூல் அளிக்கும் என்று நம்பமுடியாது. ஆயினும் சராசரியாக ஏக்கருக்கு 60 கலம் நெல் மகசூல் வீதம் தஞ்சை மாவட்டத்தில் பொன்னி ரகம் விளைந்துள்ளது. நீர் தேங்கும் பகுதிகளுக்குப்பொன்னி ஏற்றது. கோ. 25 ரக அரிசியை விட, 'பொன்னி' ரகத்தின் அரிசி சன்னமானது. இதன் வைக்கோல், கோ. 25 வைக்கோலை விட மென்மையானது.

எனவே, வயதைப் பொருட்படுத்தாமல், மகசூலைப் பற்றியே கருதுவதாக இருந்தால், நீங்கள்

கோ. 25 ரகத்தைப் பயிரிடுவதே சிறந்தது. குறுகிய கால ரகமே தேவை என்றால், தாங்கள் 'பொன்னி' ரகத்தைப் பயிரிடுவதே சிறந்தது. பொன்னி ரகம் குறைந்த காலத்தில் ஏக்கருக்கு 60 கலத்திற்குக் குறையாமல் மகசூல் அளிக்கும் என்பது உறுதி. கோ. 25 நெல்லிற்கு முறையான பயிர்ப்பாதுகாப்பு செய்யாவிட்டால் மகசூல் மிகவும் குறைந்துவிடும் என்பதும் உறுதி. எனவே, இவைகளை மனத்திற் கொண்டு நீங்கள் விரும்பும் ரகத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்

* * *

1972, ஜூலை 1-ஆம் நாள் வெளிவந்த 'தமிழரசு' இதழில் குறுவைச் சாகுபடி குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. அதில் கண்டபடி 'கருணா' ரகத்தை 26-ஆம் நாள் 6×4 அங்குல இடைவெளி விட்டு 8-8-72-இல் நடவு நட்டு இருக்கிறோம். முதல் தடவையாக யூரியா இடுவது, களை எடுப்பது, பூச்சி மருந்து அடிப்பது எல்லாம் 15-ஆம் நாள் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். ஒரே தினத்தில்தான் செய்ய வேண்டுமா? அப்படிச் செய்தாலும் களை எடுத்து உரமிட்டுப் பூச்சி மருந்து அடிக்கலாமா?

—து. ஆபிராசு,
கன்வீனர், மகளிர் மன்றம்,
காரிக்கோட்டை,
தஞ்சை மாவட்டம்.

கருணாரக நெல்லிற்கு நடவு செய்த 15-ஆம் நாளிலேயே, முதல் தடவை களையெடுத்தல், மேலுரமிடுதல், மருந்து தெளித்தல் ஆகியவை களைச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யாமல் காலந்தாழ்த்தினால் மகசூல் கணிசமாகக் குறைந்துவிடும்.

பிலிப்பைன்சு நாட்டிலுள்ள அனைத்து நாட்டு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றுள்ள ஆராய்ச்சியின்படி குறிப்பிட்ட நாளில் களை எடுக்காமல் விட்டு விட்டு, பிறகு காலங் கடந்து களை எடுத்தால், காலந்தாழ்த்தும் ஒவ்வொரு நாளும் ஏக்கருக்கு 12 முதல் 28 கிலோ அளவுக்கு மகசூல் குறைந்துவிடுகிறது என்பது தெரிய வருகிறது. எனவே குறிப்பிட்ட நாளில் களை எடுப்பதும், மேல் உரமிடுவதும், பயிர்ப்பாதுகாப்பு செய்வதும் மிக மிக அவசியமாகும்.

மேலுரமிட்டு விட்டு, பின்பு களை எடுத்துக், கடைசியாக மருந்து தெளிப்பது மிகவும் சிறந்தது. வயலில் உள்ள தண்ணீரை இலேசாக வடித்துவிட்டு, மேலுரமிட்டு, பின்பு களை எடுப்பதுடன், பயிர் வரிசைகளுக்கிடையில் உள்ள மண்ணை இலேசாகக்கிளறிவிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வாறு செய்வதால் நெற்பயிரின் வேர் வளர்ச்சி தூண்டப்படுவதுடன், கிளைப்பும் அதிகமாகும். அத்துடன் மேலுரம் மண்ணுடன் கலப்பதால், இரசாயன உரம் பயிருக்கு விரைவில் கிடைப்பதுடன், சேதமாவதும் தவிர்க்கப்படுகிறது. எனவே மேலுரமிட்டுக் களை எடுத்து, மருந்து தெளிப்பதே சிறந்தது.

* * *

எனது நிலத்தில் ஒரு அடி அல்லது இரண்டு அடி மணலும், கீழே செம்மண்ணும் உள்ளது. நிலக்கடலையோ அல்லது சவுக்கோ போட்டால் நிறையப் பட்டுப் போகிறது. வேலி ஓரங்களில் நிறையப் புற்றுகள் வளர்ந்துவிடுகின்றன. குப்பையைக் கொட்டினால் அதைச் செல் அரித்துச் செம்மண்ணால் மூடிவிடுகிறது. வீட்டுச் சுவற்றுக்கும், கூரைக்கும் மரத் தொடர்பு இல்லை. என்றாலும் கறையான் செல் இரவில் சென்று வேலையை முடித்துக்கொண்டு, விடியற்காலையில் எங்கேயோ போய் மறைந்து விடுகிறது. அடுத்த மழைக்கு வீடெல்லாம் ஒழுக்காகி விடுகிறது. உயிராக இருக்கும் மரத்தின் மேலேயே அடையாகச் செல் அரித்துப் புற்று கட்டுகிறது. எறும்பு மருந்து (Gammexene) தெளித்தேன். ஒரு மழை தாங்குகிறது. இதற்கு என்ன செய்யலாம்?

—எஸ். பெரியநாயகம்,
அறந்தாங்கி,
சிதம்பரம் வட்டம்.

உங்கள் நிலத்தில் கறையான் இருக்கிறது என்பது உங்கள் விளக்கத்திலிருந்தே தெளிவாகிறது. நீங்கள் சவுக்கு அல்லது நிலக்கடலை பயிரிட, முதலில் உழவு செய்யும்போதே படைச்சாலில் ஏக்கருக்கு 20 கிலோ அளவுக்கு பி. எச். சி. 10 சதத் தூளைத் தூவ வேண்டும். மீண்டும் 15 நாள் கழித்து மறுமுறை நிலத்தை உழுதுவிட்டு ஏக்கருக்கு 20 கிலோ அளவுக்கு பி. எச். சி. 10 சதத் தூளைத் தூவுங்கள். இவ்வாறு இரு முறைத் தூவினாலே கறையான் அழிந்துவிடும். தேவையானால் மூன்றாம் முறையும் தூவுதல் நல்லது.

வீட்டுச் சுவற்றின் ஓரத்தில் பி.எச். சி. 10 சதத் தூளை இலேசாகத் தூவி வைத்தால் கறையான் சுவற்றில் ஏறாது. ஆனால் தூவியுள்ள மருந்து தூளைக் குழந்தைகளோ, ஆடு மாடுகளோமுகர்ந்தால் ஆபத்தானது. எனவே பி. எச். சி. தூளைத்தூவி மண்ணைக் கொத்திவிட்டு கலந்து விட வேண்டும். அல்லது சுவற்றின் ஓரத்தில் பி. எச். சி. 50 சத மருந்தைத் தண்ணீரில் கரைத்துச் சுவற்றின் ஓரத்தில் தெளித்து வைக்கலாம். அது போலவே கூரையின் மேலும் தெளிப்பது நல்லது.

உயிராக இருக்கும் மரத்தின் மேலும் பி. எச். சி. 50 சத மருந்தை தண்ணீரில் பசைபோல் கலந்து கொண்டு, மரத்தின் அடிப்பகுதியைச் சுற்றிலும் தடவி வைக்கலாம்; அல்லது அடி மரத்தின் மேல் தார் பூசி விட்டாலும் கறையான் தாக்காது.

'கெமாக்சின்' என்கின்ற மருந்து, பி. எச். சி. 10 சதம், பி. எச். சி. 50 சதம் மருந்துகளைவிட வீரியம் குறைந்தது. எனவே பி. எச். சி. 10 சதத் தூளையும், பி. எச். சி. 50 சத மருந்தையும் மேற்கண்டவாறு உபயோகிக்கலாம்.

பி. எச். சி. மருந்து கிடைக்காவிட்டால் 'ஹெப்டோகுளோர்' என்ற மருந்தை வாங்கிப் பயன் படுத்துதல் நல்லது.

## கோழி வளர்ப்பு

நான் கோழிப் பண்ணை ஒன்று அமைத்திட விழைகின்றேன். கோழிப்பண்ணை நடத்துதல் பற்றிய



ஏறத்தாழ 37 ஆண்டுகளுக்கு முன்பாகவே, இந்தியாவின் தந்தை, அகிம்சா மூர்த்தி என்றெல்லாம் புகழப்படும் காந்தியடிகள் அவர்கள், ஏழை எளிய, சாமான்ய மக்களின் நல்வாழ்வை முன்னிட்டு, இந்திய உணவில் சோயா மொச்சையை அறிமுகப் படுத்துமாறு இந்திய உணவுச் சீர்திருத்தத்தில் ஆர்வம் கொண்டுள்ளவர்களையும், இந்திய மக்களையும் வற்புறுத்தியுள்ளார். அவர் வற்புறுத்தியுள்ளதை மனத்திற் கொண்டு, இனிமேலாவது, அவரவர் உணவில் சோயா மொச்சையைச் சேர்த்துக் கொள்வதும், சோயா மொச்சை உணவை மக்களிடையே புகுத்துவதும் அண்ணலின் கொள்கையைப் பின்பற்றி நடக்கும் அனைவருடைய கடமையுமாகும்.

நூல்கள் ஏதாவது இருப்பின், அவற்றை எங்குப் பெறலாம் என்பதைக் கூறவும்.

—சி. இராசமாணிக்கம்,
கருப்பூர் கேட்,
ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம்.

கோழிப் பண்ணையை அமைத்திடுவது பற்றிய முழு விவரமும் அடங்கிய நூல்கள் தமிழ்நாடு கால்நடைத் துறையின் உதவி இயக்குநர்கள் அலுவலகங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவ்விரண்டு நூல்களும் (தமிழ்) விற்கப்படுகின்றன. இந் நூல்களுக்கு நீங்கள் கொடுக்கும் ஒரு ரூபாயும் ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியில் (யூனிசெப்) சேர்ந்து விடுகின்றன. இந் நூல்களை வாங்கினால் நீங்கள் பயனடைவதுடன் நிதியும் கொடுத்தவர்களாக ஆகின்றீர்கள். எனவே கீழ்க் கண்ட இரு நூல்களையும் வாங்கும்படிக் கேட்டுக் கொள்கின்றோம்.

1. கோழிப் பண்ணைத் துணை நூல்.
2. கிராமவாசி கோழி வளர்க்க ஓர் வழிகாட்டி.

* * *

உயர் ரகக் கோழிகள் வாங்கிக் கோழிப்பண்ணை அமைக்க விரும்புகின்றேன். உயர் இன கோழிக் குஞ்சுகள் விலைக்குக் கொடுக்கும் அரசுப் பண்ணைகளையும், தனியார் பண்ணைகளையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

—பி. ராமசாமி,
வேதாசலம் நகர்,
செங்கல்பட்டு.

உயர் ரகக் கோழிக் குஞ்சுகளை காட்டுப் பாக்கத்தில் (சென்னை—செங்கற்பட்டு நெடுநெடுஞ்சாலையில் உள்ளது) உள்ள அரசினர் கோழிப்பண்ணையிலிருந்தும், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, வேப்பேரி, சென்னை-7 என்ற முகவரியிலிருந்தும் பெறலாம்.

சென்னை நகரிலும், சென்னை நகரைச்சுற்றிலும் பல தனியார் கோழிப் பண்ணைகள் உள்ளன. அவைகளின் அனைத்தினுடைய முகவரியும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. கிடைத்த சில தனியார் கோழிப் பண்ணைகளின் முகவரியைமட்டும் கீழே கொடுத்துள்ளோம்:—

1. அண்ணா கோழிப் பண்ணை உழவர்கள் கூட்டுறவுச் சங்கம்,
சீனிவாச நகர் அஞ்சல்,
சென்னை-63.

2. ராமு பிரதர்ஸ்,
கோழிப்பண்ணை பிரிவு,
42, வெள்ளனூர்,
ஆவடி,
சென்னை-54.

3. ஐவரி பார்ம்,
18-ஏ, சுத்தானந்த பாரதி தெரு,
கணபதி புரம்,
தாம்பரம்,
சென்னை-59.

மேற்கண்ட முகவரிக்கு எழுதி கிடைக்கும் இனங்கள், விலை விவரம் ஆகியவைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

## சிறு தொழில் வளர்ச்சி

தற்சமயம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பல விவசாயிகள் முசுக் கொட்டைச் செடி பயிர் செய்து, பட்டுப் புழு வளர்ப்பதாகத் தெரிய வருகிறது. முசுக்கொட்டைப் பதியங்கள் எங்குக் கிடைக்கும்? விலை என்ன? அதை வளர்ப்பது எப்படி? என்ற விவரத்தையும் பட்டுப் பூச்சி முட்டை எங்கு என்ன விலைக்குக் கிடைக்கும்? அதை எப்படி எவ்வளவு நாள் வளர்த்து கூடு எடுப்பது, அதை விற்பனை செய்வது ஆகிய முழு விவரமும் தெரிவிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கின்றேன்.

—எஸ். ஜம்புலிங்கம்,
தாயம்பாளையம் (அஞ்சல்),
(வழி) ஊதியூர்,
கோவை மாவட்டம்.

கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பைப் பெருக்கும் நோக்கத்துடன், முசுக்கொட்டைச் செடி நடுவதற்காகப் பதியன்களை இலவசமாகப் பட்டுப்புழு வளர்ப்பவர்களுக்கு வழங்கப்படுகிறது. முசுக்கொட்டைச் செடி வளர்க்க கிணறுகள் வெட்டவும் கடன் கொடுக்கப்படுகிறது. பட்டுப்புழு வளர்ப்புக் கொட்டகை கட்டுதல், விசையேற்றங்கள் வழங்குதல், பாதி விலையில் பட்டுப் புழு வளர்ப்பதற்கான கருவிகளை வழங்குதல் போன்ற திட்டங்களும் தமிழ் நாட்டில் நடைமுறையில் உள்ளன. இத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசின் தொழில் வணிகத்துறை செயல் படுத்தி வருகிறது.

முசுக் கொட்டைச் செடிகளை வளர்த்தல், பட்டுப்புழுக்களை வளர்த்தல்போன்றவை குறித்துப் புதிதாகத் தொழிலில் ஈடுபட முனைவோருக்குக் கற்றுக் கொடுப்பதற்காகத் தமிழ்நாட்டில்10 கட்புல விளக்கப் பட்டுப் பண்ணைகள் உள்ளன. அத்தகைய பண்ணை ஒன்று கோவை மாவட்டத்தில் ஹாசனூர் என்ற இடத்தில் உள்ளது. நேரில் அங்குச் சென்று முசுக்கொட்டைச் செடி, பட்டுப் புழு வளர்ப்பது பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளுங்கள்.

பட்டுப் புழு வளர்ப்பவர்களுக்கு சிறு புழுக்களை வழங்குவதற்காக, கோவை மாவட்டத்தில் தாளவாடி என்ற இடத்தில் பட்டுப்புழு பண்ணை அமைக்கப் பட்டுள்ளது. மேலும் கோவை மாவட்டத்தில் மதஹள்ளி, ஜெர்மலம் ஆகிய இடங்களிலும் அரசினர் பட்டுப்புழு வளர்ப்புப் பண்ணைகள் உள்ளன. இப்பண்ணைகளுக்குச் சென்று, அங்குள்ள அலுவலர்களை அணுகி விவரம் தெரிந்துகொள்வதே நல்லது.

முசுக் கொட்டைச் செடிகள் வளர்ப்பதற்காக, தமிழ்நாடு அரசு, அரசு நிலங்களைக் குத்தகைக்கும் விடுகிறது. மற்றும் பல்வேறு உதவிகளையும், கடன்களையும் தமிழ்நாடு அரசு பட்டுப் புழு வளர்ப்பவர்களுக்குச் செய்து வருகிறது. இதுபற்றிய முழு விவரமும் அறிய, தங்கள் மாவட்டத்தில் உள்ள உதவி தொழில் வணிக இயக்குநர் அவர்களைச் சந்திப்பது நல்லது. பட்டுப்

### சோயா மொச்சையில் பெருமகசூல் காண . . .

'திபா' (Tiba) என்னும் ஒரு புதிய இரசாயன மருந்தைச் சோயா மொச்சைச் செடியில் தெளித்தால், ஒரு ஹெக்டேர் நிலத்திலிருந்துகூடுதலாகஅரைடன் அளவு சோயா மொச்சை விதை மகசூல்பெறலாம் என்று, பந்த் நகர் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளிவரும் 'இந்தியன் பார்மர்ஸ் டைஜெஸ்ட்' என்ற ஏடு குறிப்பிட்டுள்ளது. இப்புதிய இரசாயனக் கலவையைத் தெளிப்பதால், சோயா மொச்சைச் செடிகள் குட்டையாகவும், அதிக அளவு சூரிய ஒளியைப் பெறுவதற்கு ஏற்ற வகையில் கூம்பு வடிவமாகவும் காணப்படுகின்றன. அமெரிக்காவில் இந்த இரசாயன மருந்து 10 முதல் 20 சத அளவுக்கு அதிக மகசூல் கொடுத்துள்ளதாகக் கூறுகிறார்கள்.

பூச்சி வளர்ப்பது பற்றிய வெளியீடுகள் பெற மேற்கூறிய அலுவலரை நாடுங்கள் அல்லது கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:—

இயக்குநர்,
தொழில் வணிகத்துறை,
சேப்பாக்கம்,
சென்னை-5.

• • •

## வேலை வாய்ப்பு

தமிழ்நாட்டில் படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்கள், ஏதேனும் சிறுதொழில்கள் நடத்த விரும்பினால் அதற்கு அரசு உதவி செய்கிறதா? அவ்வாறு உதவி செய்யுமானால், அரசின் உதவி பெற யாருக்கு எழுத வேண்டும்?

—எஸ். பாப்பு,

மே/பா ஆர். ஜெபமாலைமேரி,
தோளூர்பட்டி (அஞ்சல்),
(வழி) தொட்டியம்,
திருச்சி மாவட்டம்.

படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்கள் சிறுதொழில்கள் நடத்த விரும்பினால், அவர்களுக்கு 'சிட்கோ' எனப்படும் தமிழ் நாடு சிறு தொழில் மேம்பாட்டுக் கழகம் (Tamil Nadu Small Industries Development Corporation Limited). தொழிற்பேட்டைகளை நிறுவி வருவதுடன் கீழ்க்கண்டவாறு பல்வேறுவகையிலும் உதவி செய்கிறது.

1. சொந்த மனையில் தொழிற்கூடம் நிறுவ உதவி.

2. இயந்திரங்கள் பெற 'சிட்கோ'வின் உதவி.

3. மூலப் பொருட்கள் பெற 'சிட்கோ'வின் உதவி.

தனிப்பட்ட ஒருவருக்கு 'சிட்கோ' ரூபாய் 3 இலட்சம் வரை கடன் கொடுத்து உதவுகிறது. தவணை முறையில் கடனைத் திருப்பி அடைக்க வேண்டும். இதுபற்றிய முழு விவரங்களையும் அறிய கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்.

நிருவாக இயக்குநர்,
தமிழ்நாடு சிறுதொழில்
மேம்பாட்டுக் கழகம்,
தமிழ்நாடு சிறு தொழில் மேம்பாட்டுக் கழக அலுவலகம்,
112, அண்ணாசாலை,
சென்னை-6,

தாங்கள் திருச்சியில் உள்ள 'சிட்கோ' கிளை அலுவலகத்திலும் விவரங்களைப் பெறலாம். அந்த அலுவலகம் '1-ஏ, ஈ.வெ.ரா. சாலை, புத்தூர், திருச்சி' என்ற முகவரியில் உள்ளது.

படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கும் இளைஞர்களுக்காகத் தமிழ்நாடு அரசு ஒரு தனி திட்டத்தைச் செயல்படுத்துகிறது. அண்மையில் கூட இது பற்றி செய்தித்தாள்களில் செய்தி வெளிவாகி இருந்தது.

**கண்ணொளி வழங்க ..**

கடந்த ஆண்டில் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தைக் கொண்டு வந்த இந்த அரசு, இந்த ஆண்டில் விழிஇழந்த ஏழைகட்குக் கண்ணொளி வழங்கி வாழ்வில் ஒளிகாட்ட, மாவட்டங்களில் இலவச கண்ணொளி வழங்கும் திட்ட முகாம்களை நடத்தி வருகின்றது. இலவசக் கண் சிகிச்சை முகாம்களை நடத்துவதற்காகத் தேவையான பணியாளர்களுடனும் சாதனங்களுடனும் இயங்கும் கண் சிகிச்சைப் பிரிவுகள் ஐந்தினை ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது. இதற்காக ரூ. 71.5 இலட்சம் தொடரா இனச் செலவும் ரூ. 8.6 இலட்சம் தொடர் இனச் செலவும் ஆகும். இது குறித்துத் தொடக்கத்தில் ஆகும் ரூ. 45·4 இலட்சம் செலவிற்கு "மானியம் 14" வகை செய்கிறது. இத் தொகை நாளடைவில் கண் ஒளி வழங்கும் திட்ட நிதியிலிருந்து நேர் செய்யப்படும்.

*(1972 - 73-ஆம் ஆண்டு துணை மதிப்பீட்டின் அறிக்கையிலிருந்து)*

தாங்கள் பட்டதாரியா இல்லையா என்பதைத் தெரிவிக்கவில்லை. தொழில் நுணுக்க பட்டம் பெற்றிருந்தாலும், தொழில் நுணுக்கப்பயிப்பில் 'டிப்ளமா' பெற்றிருந்தாலும், கைத்தொழில் பயிற்சி பெற்றிருந்தாலும் அவர்களுக்கு 2 ஆண்டுக் காலத்திற்குப் பயிற்சி அளிக்கப்படும். அக்காலத்திற்கு பின்கண்டவாறு ஊதியம் வழங்கப்படும்.

பட்டதாரிகளுக்கு மாதம் ரூபாய் 250.

'டிப்ளமா' பெற்றவர்களுக்கு மாதம் ரூபாய் 150.

கைத்தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கு மாதம் ரூபாய் 80 முதல் 100.

(சென்னை நகரில் உள்ளவர்களுக்கு மட்டும் மாதம் ரூபாய் 90 முதல் 110 வரை கொடுக்கப்படும்).

இத்திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் 600 பட்டதாரிகளுக்கும், 1,000 'டிப்ளமா' பெற்றவர்களுக்கும், 800 கைத்தொழில் பயிற்சி பெற்றவர்களுக்கும் மேற்கண்ட பயிற்சி அளிக்கப்படும். இரண்டு ஆண்டுக் காலத்திற்குப் பிறகுஇவர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி இல்லை யெனினும், அதற்குள் பயிற்சியாளர்களுக்குத் தனியார் துறைகளிலோ, அல்லது அரசுத் துறைகளிலோ வேலை கொடுக்க ஆவன செய்யப்படும். இளநிலைப் பொறியாளர் போன்ற பதவிகளுக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் பொழுது, இவ்வாறு பயிற்சி பெற்றவர்களையே தேர்ந்தெடுக்கப்படும்.

இப்பயிற்சியில் சேர விரும்பினால் சென்னையில் உள்ள வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அலுவலகத்தில் உள்ள வேலை வாய்ப்பு சிறப்புப் பிரிவில் (Employment Special cell) பதிவு செய்து கொள்ள வேண்டும்.

தாங்கள் தொழில் நுணுக்கப் படிப்புப் பட்டதாரி இல்லையென்றால், அடுத்த ஆண்டு இளைஞர் அணியில் சேர முயற்சிக்கலாம். அதற்கும்தாங்கள் பட்டதாரியாக இருந்தால் தான் முடியும்.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகமும் பொறியியல் பட்ட தாரிகளுக்கும், வேளாண்மைப் பட்டதாரிகளுக்கும் பயிற்சி அளித்துத் தொழிற்கூடம் துவங்க உதவி செய்கிறது. இதுபற்றிய விவரம் அறிய கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள் :

மேலாண்மை இயக்குநர்,
வேளாண்மைத் தொழில்
இயக்ககம்,
தொழிற்பேட்டை,
கிண்டி,
சென்னை-32.

இது தவிர மைய அரசுத்திட்டத்தின் கீழும் தாங்கள் சிறு தொழில் தொடங்கப் பயிற்சி பெறலாம். நாளேடுகளைப் பார்த்துக் கொண்டிருந்தால், இதுபற்றிய விவரங்கள் உங்களுக்குத் தெரியவரும்.

—ஆர். எம்.

# உண்மையின் சந்நிதி

சோம. மகாதேவன்.

## 10. ஆசியளிப்பது யாரோ?

எங்காவது நேரிட்டாலன்றிச் சிவகாமியம்மாள் வாசற்படியைத் தாண்டுவதே அரிது.

ஊருக்குள்ளே, திண்ணைகளிலும் தெருவோரங்களிலும் கும்பல் கும்பலாகக் கூடி இதே பேச்சாகப் பேசிக் கொண்டிருக்கும் நேரத்தில் கண்டவர்களெல்லாம் பேசுவதை நிறுத்தி வியப்போடு பார்த்துக் கொண்டிருக்க உந்தித் தள்ளும் திகிலோடு, குனிந்த தலை நிமிராமல், இரண்டு தெருக்களையும் கடந்து, சிவகாமியம்மாள் ஊராட்சிக் கட்டடத்திற்குள் நுழைந்த போது, அங்கேயும் கூட்டம் நிறைந்திருந்தது.

அம்மாளைக் கண்டதும், சந்தடியின்றி, வெளியே போய் நின்று விட்டார்கள் கூடி இருந்தவர்கள். அத்தனைப் பேரும் வெளியூர்க்காரர்கள்.

அப்போதைக்குச் செய்வதின்னதென்றறியாது, கன்னையாவை மகனை அழைத்து வர அனுப்பிவிட்டு, நிலைகுலைந்து போய் உட்கார்ந்து விட்டாள் மீனாட்சியம்மாள்.

பெற்ற மனம் தவித்தது.

'கூடிக் குலாவி இருக்கவில்லை என்றாலும், பெற்றவை இரண்டும் கண்ணுக்கு முன்னால் இருந்தால் போதும்' என்ற ஆறுதலோடு இருக்கும்போது, இடையிலே இப்படியொரு தீவினைவந்து நிற்கிறதே !

என்ன நடந்ததோ ? இன்னும் என்ன நடக்குமோ ?

பாண்டியனே இப்படியும் அடித்திருப்பானா ?

வேலைக்காரனை அதட்டிப் பேசினால் கூடப் பிடிக்காதே அவனுக்கு. எளிதில் அவனுக்குக் கோபமும் வராதே.

இப்படித் தாயொரு பக்கம் பிள்ளையொரு பக்கமாகத் தவிக்க வைத்திருக்கும் போது, என்ன இருந்து என்ன செய்ய ? அவரிடம் இவனைப் பற்றிப் பேச முடியாது. இவனிடம் அவரைப் பற்றிப் பேச முடியாது. இனியும், இந்தப் பிறவியில், தகப்பனும் பிள்ளையும் கட்டித் தழுவிக் கொள்ளப் போகிறார்களா ?

அவரிடமும் சொல்லவில்லை. எப்படியோ நாலுபேர் நின்று பார்க்க, புறப்பட்டு இங்கே வந்தாகி விட்டது. இனித் திரும்பிப்போய் நிற்கும் போது, வாசலில் நின்று, அவர் என்ன சொல்லக் காத்திருக்கிறாரோ ?

சிவகாமியம்மாள் குனிந்து கண்களைத் துடைத்து விட்டுக்கொண்ட போது, வாசலிலே சலசலப்புக் கேட்டது.

பாண்டியன் வந்து விட்டான்.

''ஐயா மகராசா ! மாட்டை அடிச்சாலும் பொறுக்காதே சாமி. உனக்கா இந்தப் பழி வந்து சேர்ந்திருக்கு'' என்று வாசலில் நின்று கொண்டிருந்த கிழவி யொருத்தி, அழுகையும் குமுறலுமாகச் சொன்னது உள்ளேயும் கேட்டது.

சிவகாமியம்மாள் பதட்டத்துடன் எழுந்த போது, ''அம்மா'' என்றவாறு வேகமாக உள்ளே வந்தான் பாண்டியன்.

பாசவெள்ளம் பெருக்கெடுக்க, மகனைக் கட்டித் தழுவிக் கொண்ட சிவகாமியம்மாளுக்கு, உள்ளுக்குள்ளே குமுறிக் கொண்டிருக்கும் துயரமெல்லாம் பொங்கித்தட்ட, அழுகையே முன்னால் வந்தது.

எது எப்படியோ போகட்டும். உள்ளமெல்லாம் உருக, அம்மா இப்படி அணைத்துக் கொள்ளும் பேறு கிடைத்ததே! இது ஒன்று போதுமே.

''அம்மா'' என்றழைத்தான் பாண்டியன் அந்த அன்புப் பிடியிலிருந்து விடுபடாமலே.

சிவகாமியம்மாளுக்குப் பேச முடியவில்லை.

''அப்பாவே அனுப்பி வச்சாங்களா?'' என்று கேட்டான் பாண்டியன்.

விலகி, தலைக்குமேல் வளர்ந்து விட்ட மகனைப் பார்த்த சிவகாமியம்மாளின் கண்களில் நீர் திரையிட்டது.

''அவரோட வைராக்கியத்துக்கும், உன் துணிவுக்கும்



மத்தியிலே காலமெல்லாம் தவிக்க வச்சிட்டியேடா? கண்ணாமூலாவது நிம்மதியா இருந்தாலே போதும்ன்னு இருந்தேனே'' என்றபோது, பாண்டியன் குறுக்கிட்டு, உங்க மகன் இந்தத் தவறைச் செய்திருக்க மாட்டான்னு உங்களுக்கு நிச்சயமாத் தெரியும் இல்லையாம்மா?'' என்று கேட்டான்.

மகனை ஏறிட்டுப் பார்த்தாள் தாய்.

'அதே புன்னகை; அமைதி; இவன் செய்திருப்பானா? செய்திருக்க முடியுமா?

''எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியலையே. எதுலே போய் முடியப் போகுதோ?'' என்றாள் சஞ்சலத்தோடு.

''முடிவு அப்பாவுக்குத்தான் தெரியும். என்னைப்பற்றி நான் எப்பவும் கவலைப்படலே. ஆனா, கட்டுப்பாடு, சம்பிரதாயம்ங்கிறதையெல்லாம் கடந்து, இருளடைஞ்சு போன நம்ம வீட்டிலே விளக்கேத்தி வச்சானே லிங்கம், அவனுக்கு நாம செய்யுற நன்றியாம்மா இது? பிறந்த வீட்டிலேயிருந்து, தகப்பன் மகளுக்குக் கொடுக்கிற சீதனமா?'' என்று கேட்டான் பாண்டியன்.

''என்னைக் கேட்குறியேடா. நான் என்ன செய்யப் போறேன்?'' என்றாள், சிவகாமியம்மாள் கண்களில் நீர் வழிய.

''ஒண்ணு செய்யுங்க''.

''என்னடா?''

''என்னோடவே இருங்க, அப்பா என்ன செய்யப் போறார்ன்னு பார்க்கலாம்.'' என்றான் பாண்டியன்.

சிவகாமியம்மாள் விம்மலுடன் மகனை ஏறிட்டுப் பார்த்தாள்.

''உன்நெஞ்சு கல்லாகிப் போச்சாடா? டே பாண்டி, அவரைப் பிரிஞ்சு எனக்குன்னு தனியா ஒரு வாழ்வு இருக்குன்னு நினைக்கிறியா?'' என்று உதடுகள் துடிக்கக் கேட்டவள், ''என் கூடவே வாடா, இது என் வீடுன்னு சொல்லி இரு.'' என்றாள் உத்தரவிடுவது போல.

''பாகம்ன்னு பிரிச்சுக் கொடுத்துச் சொந்த பந்தமே இல்லைன்னு எழுதி வாங்கிட்டு அனுப்பிச்சிருக்காங்க. பெரியவங்க முடிவுக்குக் குறுக்கே வரலாமா?'' என்று கேட்டான் பாண்டியன்.

''கொஞ்ச நாளையிலே உன் சித்தப்பன் எல்லாத்தையும் சுருட்டிக்கிட்டுப் போவான். அதுக்குத்தான் அடியெடுத்து வச்சிருக்கான்.''

'' சுருட்டிக்கிட்டு வேறே எங்கே போக முடியும். இங்கே தானே இருக்கப் போறாரு. இருக்கட்டும். இப்ப விழுந்திருக்கிற முடிச்சை அத்து எறியும்போது தான், இவ்வளவு காலம் வாழ்ந்த வாழ்வுக்கு ஒரு எல்லைக் கோடாகவும், எடுத்துக் காட்டாகவும் இருக்கப் போகுது. அப்பத்தான் அப்பாவுக்குச் சித்தப்பனைப் பத்தி எல்லாமே தெரியப் போகுது '' என்றான் பாண்டியன் அமைதியாக.

சிவகாமியம்மாள் கண்களைத் துடைத்துக் கொண்டு மகனை இமைக்காது பார்த்தாள்.

செய்தி காதில் விழுந்த பொழுதிலிருந்து, ஒரு வாய்த் தண்ணீரும் குடிக்காமல் அலமந்து போய் வந்து நின்றாலும், மகனைப் பார்த்துப் பேசியதில் சற்றே நிம்மதி பிறக்கிறது.

வரப்போவதை நினைத்துச்சிறிதேனும் கவலை இருக்கிறதா இவனுக்கு? இன்றைக்கும் விளையாட்டுப் பிள்ளையா?

'' நிறையச் செலவாகுமாமேடா பாண்டி?'' என்று கேட்ட சிவகாமியம்மாள், மடியிலிருந்து துணியால் சுற்றப்பட்ட நோட்டுக் கற்றையை எடுத்து, '' இப்ப இதை வச்சுக்கோ— தேவைப் படுறப்போ ஐயனுக்கிட்டக் கொடுத்தனுப்புறேன்'' என்றாள்.

பாண்டியன் சிரித்தான்.

''அம்மா—நான் தனியாநிக்கறதா நீங்க கலங்குறீங்க, ஆனா, அப்பாவும், சித்தப்பாவும் எனக்குப் பின்னாலே பெரிய படையே இருக்கிறதா நினைச்சுப் பயப்படுறாங்க. நியாயம்ங்கிறதை பணத்தை வச்சு மட்டும் பெற முடியும்ன்னு நினைக்கிறீங்களா? நானும் பாகம் பிரிச்சுக்கிட்ட பங்காளி இல்லையாம்மா? நீங்க எதை நினைச்சும் கவலைப் படாதீங்க. அப்பாகிட்டேயும், எதுக்கும் கவலைப்பட்டு உடம்பைக் கெடுத்துக்க வேண்டாம்னு சொல்லுங்க '' என்றான்.

இப்படியொரு பிள்ளையைப் பெற்றதில், அழுவதா—சிரிப்பதா— என்பது தோன்றாமல், மகனைப் பார்த்தபடியே நின்ற சிவகாமியம்மாள், —தகப்பனுக்கும் பிள்ளைக்கும் மத்தியிலே நான்தான் சீக்கிரம் போய்ச் சேரணும். அதான் நான் தெய்வத்தை வேண்டிக்கிறது '' என்றாள் கண்களைத் துடைத்துக்கொண்டே.



தாயைப் பார்த்த பாண்டியனுக்கும் கண்கள் பனித்தன.

அம்மாவுக்குக் கெட்டதையே நினைக்கத் தெரியாது. நல்லது எதையும் அப்பாவுக்கு எதிராகச் சொல்லும் துணிவும் எப்போதும் ஏற்பட்டதில்லை. எதற்கும் 'உன் பாடு—அவர் பாடு ' என்று ஒதுங்கிக் கொள்வார்கள்.

'' என்னடா பாண்டி?'' என்று கேட்டாள் சிவகாமியம்மாள்.

'' என்னம்மா?''

சற்றுத் தயங்கி, அரசி எப்படிடா இருக்கு? என்று கேட்டாள் பெற்றவள்.

'' கேட்கிறதுக்காவது உங்களுக்குத் துணிவு வருதான்னு எதிர்பார்த்துக்கிட்டே இருந்தேன். கேட்டுட்டீங்க. அரசி எப்படி இருக்கணும்ன்னு நீங்க நினைக்கிறீங்க?''

'' என்னையே கேட்கிறீயா?''

'' அரசிக்கு எந்தக் குறையும் எப்போதும் வராது. அரசி நிறைவோட வாழப் பிறந்த பெண்ணம்மா '' என்றான் பாண்டியன்.

'' அந்த மீனம்மா கிழவி கொடுமைப்படுத்துறதா சொன்னாங்களே '' என்று கவலையோடு தான் கேட்டாள் மீனாட்சியம்மாள்.

பாண்டியன் சற்று நிதானித்து, உணர்ச்சிப் பெருக்குடன் சொன்னான்.

''கண்ணில்லாதவங்க, காதும் கேட்காதவங்க, பேச மட்டும் தெரிஞ்சவங்க அப்படித்தான் சொல்லி இருப்பாங்க. பிறந்த மகளுக்கு இனியும் ஒரு வாழ்வு இருக்குன்னு, பெற்றவங்களே நம்ப முடியாம இருந்தப்ப, உற்றம் சுற்றம் எல்லாம் அவனேன்னு நிக்கிற ஒரே பேரனுக்கு மனம் ஒப்பி, அமங்கலியா நின்ன உங்க மகளை மணம் முடிக்கச் சம்மதிச்சு, மாலை போட்டு ஏத்துக்கிட்டாங்களே, அந்தப் பாட்டியைக் கோயில்லே வச்சுக் கும்பிடணுமம்மா! அவங்க காலடியிலே அரசி மகிழ்ச்சியோடவே இருக்கு. எப்பவும் இருக்கும்'' என்றான்.

"கைக்குள்ளே இருக்கிற மகளைக் காணக்கொடுத்து வைக்கலையே'' என்று சொல்லிக் கண்களைத் துடைத்துக்கொண்டாள் சிவகாமியம்மாள்.

''இப்பக்கூட வந்து பார்க்கலாமே. ஆனா, அதுக்கும் துணிவு வேண்டியிருக்கு. இல்லையாம்மா?'' என்று கேட்டுச் சிரித்த பாண்டியனின் கவனம், அறையின் வாசலில் தயங்கியது.

சுவரோரமாக யாரோ நின்று கொண்டிருக்கும் நிழல் தெரிந்தது.

''யாரையும் உள்ளே அனுப்ப வேண்டாம்'' என்று கன்னையாவிடம் சொல்லி விட்டு வந்திருக்கும் போது, யார் இங்கே வந்து நிற்பது.

'யாரது' என்று கேட்டு வெளியே எட்டிப் பார்த்தபோது, பாண்டியனுக்கு வியப்பாகவே இருந்தது. இந்த நேரத்தில் இங்கே, டெய்சியை எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்.

சுற்றி இருப்பவர்கள் பேசப் பேச, மனத்திலே நிறைந்து விட்ட திகிலோடு, பாண்டியனைப் பார்த்துப் பேசினால் அல்லாது, மனது நிலை கொள்ளாது ஓடி வந்து நின்றபோது, கன்னையாவும் வழிவிட, உள்ளே நுழைந்து சிவகாமியம்மாள் இருப்பதைத் தெரிந்து திகைத்துப் போனாலும், பாண்டியனின் பேச்சிலே மெய்ம்மறந்து நின்று கொண்டிருந்தாள் டெய்சி.

பாண்டியன் பின்வாங்கி, தாயைத்திரும்பிப் பார்த்தவன், தயங்காமலே, ''உள்ளே வரலாமே டெய்சி'' என்று குரல் கொடுத்தான்.

டெய்சியின் நெஞ்சு படபடத்தது. உள்ளே நுழைந்து திகைப்புடன் தலைகுனிந்து நின்றாள்.

சிவகாமியம்மாள் அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அன்றைக்கு அவர் சொன்னது நினைவிற்கு வந்தது. சின்ன வயதிலெல்லாம் அங்கே வந்து, அரசியோடு விளையாடிக் கொண்டிருப்பாள் டெய்சி. வீட்டு வாசலிலே கை கட்டி நிற்பவன் மைக்கேல். இவள் இவனிடம் வந்து நிற்கிறாளே.

''அம்மா'' என்றான் பாண்டியன்.

''என்னடா?''

''டெய்சி சமத்துப் பொண்ணுன்னு நீங்களே சொல்லி இருக்கீங்க. அதான் இப்ப நினைவுக்கு வருது'' என்றான் பாண்டியன்.

சிவகாமியம்மாள் ஒன்றும் பேசவில்லை.

எதற்கோ சொன்னால், இவன் அதையே பிடித்துக் கொண்டிருக்கானே. இதிலும் இவனுக்கு இப்படியொரு துணிச்சலா?

தாயின் முகம் பார்த்த பாண்டியன் மேலும் சொன்னான்.

'' நாளை — பொன்னையா செத்துப்போய், இதுவே கொலை வழக்காகி, எனக்கு மரண தண்டனை கிடைக்கலாமில்லையா? இதை நினைச்சுத் தானே துடிச்சுப்போய், அப்பாகிட்டே கேட்காமலே மகனைப் பார்க்க வந்திருக்கீங்க. அதே துடிப்போடத்தான் டெய்சியும் வந்திருக்கு. இந்தப் பாச உணர்வு என்றைக்கும் நிலைக்க, நீங்க தானம்மா ஆசியளிக்கணும்'' என்றான்.

டெய்சியின் மெய்சிலிர்த்தது. பாண்டியனை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் கண்களால் என்ன சொன்னானோ?

முன்னால் வந்து, மண்டியிட்டு, சிவகாமியம்மாளின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள் டெய்சி.

சிவகாமியம்மாள், பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, வாய் திறந்து, ஏதோ சொல்ல வந்தபோது, வெளியே பலர் பெருங்குரலெடுத்துப் பேசுவது உள்ளேயும் வந்து மோதியது.

பாண்டியன் திகைப்புடன், திரும்பி, வெளியே செல்லக் காலடியெடுத்து வைத்த போது எதிரே ஆவேசத்தோடு வந்து நின்றான் மைக்கேல் கிழவன்.

''என்னங்க?'' என்று அமைதியாகவே கேட்டான் பாண்டியன்.

''நீங்க நினைக்கிறது ஒருக்காலும் நடக்காதுங்க. எங்க பிழைப்பிலே மண்ணைப் போடாதீங்க.'' என்று குமுறலோடு சொன்ன மைக்கேல், மகளின் பக்கமாகத் திரும்பி ''பாவி மகளே போகாதேன்னு சொல்லியிருந்தும் இங்கே வந்து நிக்கிறீயா? வீட்டுக்கு வா. உன்னை வெட்டிப் போட்டாத்தான் மனசு ஆறும்'' என்றான், கோபத்தினால் உடல் பதற. '' பொறுமையா பேசுங்க. உங்க விருப்பத்துக்கு விரோதமா எதுவுமே நடக்காது'' என்று அமைதியாகவே சொன்னான் பாண்டியன்.

மைக்கேல், கோபம் குறையாமலே திரும்பினான்.

'' பேசுறதுக்கு எதுவுமே இல்லீங்க. மலைக்கும் மடுவுக்கும் போல, உங்களுக்கும், எங்களுக்கும் ஒத்து வராதுங்க. அடுத்த வாரம் இவளுக்குக் கல்யாணம் நடக்கப் போகுது. அதை நிம்மதியா நடக்க விடுங்க. நான் பிள்ளை குட்டிக்காரன்.'' என்றவன் மகளின் பக்கமாகத் திரும்பி, '' வா, வீட்டுக்கு '' என்றான் கொதிப்போடு.

டெய்சி, கண்களில் நீர் வழியப் பாண்டியனை ஏறிட்டுப் பார்த்தாள். சொல்ல நினைத்தது, உதடுகளின் துடிப்போடு உள்ளடங்கி விட்டது. தலைகுனிந்து, தகப்பனைத் தொடர்ந்து நடந்தாள்.

அழுவதா—அல்லது சிரிப்பதா என்பது புரியாமல், மகனையே பார்த்துக் கொண்டிருந்த சிவகாமியம்மாள், '' என்னடா மகனே?'' என்று கேட்டாள்.

'' அம்மா, போராடிப் பெறுவதுதான் நிலைச்சிருக்கும். இதுவும் பெரிய வீட்டிலேயிருந்து தான் தொடங்கியிருக்கு''. என்றான் பாண்டியன் அதே புன்னகையோடு.

அப்போது, கண்கள் இரத்தம் போல் சிவந்திருக்கப் பரபரப்போடு, உள்ளே வந்துகொண்டிருந்தான் ஐயனு.

(வளரும்)

# சிறுவர் சோலையிலே!



'பூங்கொடி'

ஒரு குழந்தை வருகிறது.

வயது நான்கு அல்லது ஐந்து இருக்கும்.

தன் பிஞ்சு இதழ்களைத் திறந்து மணிமணியாகச் சில சொற்களை உதிர்த்து அழகாய்ப் பாடுகிறது. அந்த மழலையின் அமுதம் நம் செவிகளில் அமுதமாய் இனிக்கிறது.

இந்த இனிய அமுதத்தை வழங்குபவர் யார் தெரியுமா?

சென்னை வானொலி நிலையத்தினர்தான்! ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலை 9·04 மணி அளவில் இந்த 'மழலை அமுத'த்தை நாம் பருகி மகிழலாம். உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டல்லவா? இந்த மயக்கத்தைப் போக்க ஓர் அழகான சோலையும் இங்கிருக்கிறது. அதுதான் 'சிறுவர் சோலை' ஞாயிறு பிற்பகல் 2-10 மணிக்கு ஒலிபரப்பாகும் இந்தச் சிறுவர் சோலை சிந்தைக்கு விருந்தூட்டும் வண்ணம் ஒலிக்கிறது.

சிறுவர்களைக் கொண்டு சிறுவர்களுக்காக நடத்தப்படும் இந்த மழலை அமுதம், சிறுவர் சோலை நிகழ்ச்சிகள் எப்படித் தயாரிக்கப்படுகின்றன?

அது ஒரு கதை!

கதையென்றால்தான் உங்களுக்கு மிகவும் பிடிக்குமே! இதோ, கேளுங்கள்!

மழலை அமுதம், சிறுவர் சோலை ஆகிய நிகழ்ச்சிகளைச் சென்னையிலுள்ள ஆறு இலட்சம் குழந்தைகளோடு பிற மாநிலங்களிலுள்ள குழந்தைகளும் விரும்பிக் கேட்கின்றன. கடல் கடந்து வாழும் தமிழ்க் குடும்பத்தினரும் இதனை வெகுவாக வரவேற்கின்றனர். நிகழ்ச்சிக்குப் பிறகு அவர்கள் எழுதுகின்ற கடிதங்கள் எல்லாம் மலைபோல் குவிந்து "வானொலி அண்ணாவை" மலைக்க வைக்கின்றன.

ஆம். இந்நிகழ்ச்சிகளைத் தயாரித்தளிப்பவர் 'வானொலி அண்ணா' என்ற பெயருக்குள் மறைந்திருக்கும் திரு வெ. நல்லதம்பி ஆவார். இவர் வாசிங்டனில் வாய்ஸ் ஆ·ப் அமெரிக்கா என்னும் வானொலியில் பணியாற்றியவர். நிகழ்ச்சிகளில் அவ்வப்போது பங்குபெறும் எம். எஸ். பாலசுப்புலட்சுமி, சி. வசந்தா ஆகியோர் நிகழ்ச்சி மேலும் சிறப்படைய உதவுகிறார்கள். இந்த நிகழ்ச்சிகளின் நிருவாகியாகத் திரு மு. கிருட்டிணமூர்த்தி பணியாற்றுகிறார்.

'மழலை அமுதம்' நிகழ்ச்சியில் எட்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் பங்கு பெறுகின்றன; 'சிறுவர் சோலை'யில் 9 முதல் 15 வயது வரையிலுள்ளவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

சென்னை வானொலியில் 'மழலை அமுதம்' 'சிறுவர் சோலை' ஆகிய நிகழ்ச்சிகளை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? இந்த நிகழ்ச்சிகள் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன? இவற்றில் நீங்களெல்லாம் கலந்து கொள்ள முடியுமா? மற்ற நிகழ்ச்சிகளுக்கும் இந்த நிகழ்ச்சிகளுக்குமுள்ள வேறுபாடு என்ன? இவை போன்ற வினாக்களுக்கு விடை அளிக்கிறது இந்தக் கட்டுரை.

குழந்தைகளிடமுள்ள கலைத்திறனை வெளிக்கொணரும் நோக்கோடு இந்த நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் இந்தச் சிறுவர்க்கான நிகழ்ச்சிகள், புகழ்பெற்ற குழந்தை எழுத்தாளர்களால் எழுதப்பட்டு நடத்தப்படுகின்றன.


'மழலை அமுதம்' நிகழ்ச்சியில் பிஞ்சுக் குழந்தைகளின் பாட்டு, கதையோடு அவர்களே பேசக்கூடிய கிள்ளை மொழியினையும் கேட்டு மகிழலாம். 'சிறுவர் சோலை'யில், கதைப் பாடல், நாடகம், சொல்லோவியம், விஞ்ஞானப் புதிர்கள், வினாடி வினா, விடுகதை ஆகியவை ஒலிபரப்பாகின்றன. இதோடு குழந்தைகளின் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் கடிதக் கொத்தும் அவ்வப்போது நிகழ்கின்றன.

வழக்கமான நிகழ்ச்சிகள் தவிர சிறுவர், சிறுமியரின் சிந்தையைக் கவரக் கூடிய சிறப்பான இடங்களுக்குக் குழந்தைகளையே நேரில் அழைத்துச் சென்று சுவையான உரையாடல் மூலம் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படுகின்றன. இவை கேட்போருக்கு நேரில் காண்பது போன்ற உணர்வை ஊட்டுகின்றன.

இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் முழுக்க முழுக்கப் பொழுதுபோக்கு நிகழ்ச்சியே யாகும். இது கல்வி ஒலிபரப்புப் போன்ற கற்பிக்கும் நிகழ்ச்சி அல்ல என்றாலும், இடையிடையே கருத்தறிவிக்கும் நிகழ்ச்சிகளும் இதில் இல்லாமல் இல்லை.


இந்தப் பகுதியில் சில சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. ஆண்டுதோறும் குழந்தைகள் நாளன்று ஒரு பொது அரங்கில் குழந்தைகளைக்கொண்டு நாடகம், இசை, நடனம் முதலான கலை நிகழ்ச்சிகள் பொது மக்கள் முன்னிலையிலேயே நடத்தப்படுகின்றன. புத்தாண்டு, பொங்கல், சுதந்தர நாள் ஆகிய நாட்களிலும் இது போன்ற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பிறகு வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன.


மூன்று மாதங்களுக்கு நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளை எல்லாம் முன்னதாகவே திட்டமிட்டுத் தயாரிக்கப்படுகின்றன என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். குழந்தைகளிடமுள்ள திறமைகளை வெளிப்படுத்தி அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகிறது வானொலி நிலையம் என்றால் அது மிகையல்ல. குழந்தைகளின்





# கதர் கைத்தொழில் அங்காடி

## குறளகம்
சென்னை-1










**கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்**

வெளிநாட்டார் போற்றும்
**ஹயன் பொருள் கலைக்கூடம்**

20461
20462 20463
20464 20465






சந்தர்

அறிவு வளர்ச்சியில் குன்றாத ஆர்வமுடைய இந்நிலையை இயக்குநர் திரு வி. கிருட்டிணசாமி, உதவி இயக்குநர் திரு ஆர். சேதுராமன் இந்த இரு நிகழ்ச்சிகள் மேலும் மேலும் வளர்ந்திடத் துணையாக விளங்குகிறார்கள்.

வானொலியில் பங்கு பெறும் சிறுவர்களுக்காக ஒரு சங்கம் இருக்கிறது. இதற்கு 'வானொலி சிறுவர் சங்கம்' என்று பெயர். இந்தச் சங்கங்கள் சென்னை நகரில் நாற்பதுக்கு மேல் இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் தலைமைச் சங்கமாகச் 'சென்னை வானொலிச் சிறுவர் சங்கப் பேரவை' பதினோறு ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இதன் தலைவர் புலவர் தணிகை உலகநாதன். இந்தச் சங்கக் குழந்தைகள் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதோடு மட்டும் நின்றுவிடவில்லை. பொது நலப் பணியிலும் ஆர்வம் செலுத்துகிறார்கள் என்றால் அவர்கள் பிஞ்சு உள்ளத்தை நெஞ்சார வாழ்த்த வேண்டாமா?

1961-ஆம் ஆண்டு தஞ்சை மாவட்ட வெள்ள நிவாரண நிதிக்குக் கலைவாணர் அரங்கில் நடந்த கலை நிகழ்ச்சிகள் மூலமாக இந்தக் குழந்தைகள் ஆயிரம் ரூபாயை அள்ளி வழங்கினர். பாகிஸ்தான் படையெடுப்பின் போது, இந்தக் குழந்தைகளால் நடத்தப் பெற்ற நவமணிமாலை நிகழ்ச்சிகள் மூலமாகக் கிடைத்த நாலாயிரம் ரூபாய் தேசியப் பாதுகாப்பு நிதியில் சேர்த்தது அரிய செயலல்லவா?

சென்னை வானொலியில் பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. மகளிர், மாணவர், தொழிலாளர் போன்றோருக்கென தனி நிகழ்ச்சிகள் உண்டு. குழந்தைகளுக்காக ஒலிபரப்பப்படும் இந்த நிகழ்ச்சி ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. காரணம், இதில் 75 சத விகிதம் ஒலிப்பதிவு செய்யாமல் நேரிலேயே நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

மழலை அமுதம், சிறுவர் சோலை ஆகிய நிகழ்ச்சிகளைக் கேட்கும் எண்ணற்ற குழந்தைகளுக்கு ஓர் ஆவல் எழுவதுண்டு. அது, 'நாமும் இதில் கலந்து கொள்ள முடியுமா?' என்பது தான்.

இதற்குப் பதில், சென்னை நகரைச் சுற்றியுள்ள குழந்தைகள், செங்கற்பட்டு மாவட்டம், வேலூரில் உள்ள குழந்தைகள் மட்டுமே இவற்றில் கலந்து கொள்ள முடியும் என்கிறார் வானொலி அண்ணா. ஏனைய பகுதிகளில் உள்ளவர்கள், அவர்களுக்கு அண்மையில் உள்ள திருச்சி, பாண்டிச்சேரி நிலையங்களில் கலந்து கொள்ளலாம்.

சென்னையில் கூட, எல்லாக் குழந்தைகளுக்கும் இந்த வாய்ப்பு ஏற்படும் என்று சொல்லிவிட முடியாது. முதலில் அவர்களுக்குக் குரல் நன்றாக இருக்க வேண்டும். இது மிகவும் முக்கியம். குரல் தேர்வுக்குப் பிறகுதான் அவர்கள் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளத் தகுதி பெறுகிறார்கள். நிகழ்ச்சிகளுக்கு முன் குழந்தைகளுக்குப் போதுமான அளவு பயிற்சி அளிக்கப்படுகிறது.

நிலையத்துக்கு வந்ததும் சில குழந்தைகள் பாடுவதற்குப் பதில் தேம்பி அழுவதுமுண்டு! சில குழந்தைகள் பயத்தினால் அரைகுறையாகச் சொல்லிவிட்டு ஓடிவிடுவதுமுண்டு! இன்னும் சில குழந்தைகள் வாயே திறப்பதில்லை! இந்தச் சமயத்தில் இவர்களைச் சாமர்த்தியமாகச் சரிப்படுத்தத் தயாரிப்பாளர் தயாராக இருக்க வேண்டும்!

நாளையத் தலைமுறையினரை, வருங்காலச் செல்வங்களைக் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாகத் உருவாக்கும் சாதனங்களில் வானொலிக்குச் சிறப்பான இடமுண்டு. குழந்தை இலக்கியத்துக்கு அது புரியும் தொண்டு போற்றத் தக்கதாகும். குழந்தைகளையும், பெரியவர்களையும் குதுகலப்படுத்தும் இந்தக் குழந்தைப் பகுதி, குன்றிலிட்ட விளக்காய்த் திகழ்கிறது என்றால் அது வெறும் புகழ்ச்சியில்லை. உண்மை.



### அறுவைச் சிகிச்சைக்கு அற்புத ஒளிக் கதிர்

இஸ்ரேல் நாட்டில் பெட்டா திக்வா என்னும் இடத்தில் உள்ள பெல்லின்சன் மருத்துவ மனையில் வழக்கம் போலச் செய்யப்படுகின்ற அறுவைச் சிகிச்சை முறைக்கு மாறாகப் புதிய அற்புதமான ஒளிக் கதிர் முறையைக் கையாளுகின்றனர். இதற்கென இம்முறையில் நான்கு இயந்திரங்கள் அமெரிக்காவில் பயன்படுத்தப் படுகின்றன; ஆனால் இவைகள் விலங்கினங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

இந்த மருத்துவமனையில் 33 நோயாளிகளுக்கு இப்புதிய முறை பயன்படுத்தப் பட்டது; ஏற்கெனவே இந்த முறையினால் ஏற்படுகிற விளைவுகள் திருப்திகரமாக உள்ளன. இப்புதிய முறையின் மூலம் நோயாளிக்கு அறுவைச் சிகிச்சையின் மூலம் வீணாகும் இரத்தமும் தடுக்கப்படுகிறது; நரம்புகளும், இரத்தக் குழாய்களும் பாதிக்கப்படுவதில்லை. மூளை அறுவைச் சிகிச்சை முதல், தோல் புற்று நோய் வரை இப்புதிய முறையில் மருத்துவம் செய்யப்பட்டுள்ளது இந்த முறைச் சிகிச்சையின் மூலம் புண் சீக்கிரம் ஆறாமல் இருக்கும். இதையும் சரி செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படும்.

# BHEL OFFERS

## MEDIUM AND HIGH PRESSURE VALVES FOR OIL, STEAM & NON AGGRESSIVE FLUIDS

Quality-built from high class pore-free, fine and uniform grained cast/forged/carbon alloy and stainless steel. All valves are subjected to hydraulic, air, steam and radiographic (X-ray) tests besides exhaustive manufacturing stage inspections.

Standardised spares for minimum and economical stocking.


| | |
|---|---|
| Pressure ranges: | 10—250 kg./sq. cm. |
| Temperature ranges: | Upto 550°C. |
| Sizes: | 10—800 mm |

Also to A.P.I. Standards in 150, 300, 600 and 800 lbs. ratings


BHEL valves conform to Indian Boiler Regulations and are certified by the Chief Inspector of Boilers or by Lloyds Surveyor, on special request.

BHEL assures prompt deliveries of supplies. BHEL valves are backed by efficient after-sales service by their highly trained engineers and technicians.


SLIDE VALVES



NON-RETURN VALVES (Piston lift and Swing check)



GLOBE VALVES



**BHEL VALVES**

**Foremost in fluid flow control**

*For Complete details, Contact:*
Commercial Manager,
BHARAT HEAVY ELECTRICALS LTD.,
(A Govt. of India Undertaking)
**Unit:** High Pressure Boiler Plant, TIRUCHIRAPALLI-14.
*Regd. Office:* 5, Parliament St., New Delhi-1



# வீரமகன் செண்பகராமன்

சுத்தானந்த பாரதியார்

இந்திய விடுதலை, புகழ்ப் பின் னணி படைத்தது. அந்த விடு தலைப் போரில் தமிழகம் முன்ன ணியில் நிற்பது. வட நாட்டில் நானாசாகிபு விடுதலைப்போர் முரசு கொட்டு முன்பே தென் னாட்டில் விடுதலைக் கொடி உயர்த்தி, நமது வீரர் ஆட்சி செலுத்தினர். முத்துவடுக நாதர், வேலு நாச்சியார், வீரத் தேவன், பெரியமருது, சின்னமருது, கட்டபொம்மு, ஊமைத்துரை, நீலமேகம், சுப்பிர மணியபிள்ளை, வேலுத்தம்பி முதலிய வீரரை நாம் மறக்க முடியாது. இவருள் வேலுத் தம்பி பத்மநாதபுரத்தருகே வேணாட்டிற் பிறந்த நாயர்; தமிழ் கற்றவர்; முருக பக்தர்; வாள் வீரர்; போர்ப்புலி; அவர் மக்கள் தலைவர்; அவர் நாவ சைத்தால் நாடசையும். அவரது திறமைகளைப் போற்றிப் பால ராம வர்மா அவரைத் தமது திவானாக ஏற்றார். வேலுத் தம்பி திருவாங்கூர் அரசின் உரிமையைப் பாதுகாத்து, நமது நாட்டை நயவஞ்சகச் சூழ்ச்சி யால் அடிமை செய்த கும்பினி வெள்ளையரைக் குமைக்கத் துள்ளி யெழுந்தான். தன்னைக் கொல்ல வந்த வெள்ளையரைக் கொட் புற்றெழுந்து வீழ்த்தினான். இறு தியில் ஒரு துரோகி அவனைக் காட்டிக் கொடுத்தான்.

வெள்ளையர் கையில் சிக்கிய பிறகும் வேலுத்தம்பி தப்பி யோடி ஒரு கோயில் மண்டபத் தில் ஒளிந்தான். அங்கும் பிரிட் டிஷ் படை சூழ்ந்தது, மிடுக் கான இடர்நிலையில் தனது கத்தியை எடுத்துத் தற்கொலை புரிந்து கொண்டான். தனது தம்பியை வெட்டச் சொல்லி இறந்தான்.

அந்தக் கத்தி திருவாங்கூர் ஆயுதக்காட்சிசாலையில் உள்ளது. அதை ஒரு போலீஸ்காரர் கையில் எடுத்துக் கண்ணில் ஒற்றி முத்தங் கொஞ்சி ''வேலுத்தம்பி, உன்போலஎனக் கொரு வீரன் உண்டாக அருள வேண்டும்'' என்று கண்ணை மூடிக் கருதுகிறார். தம் மனை விக்கு வேலுத்தம்பியின் வீர வரிசைகளைச் சொல்லுகிறார். அந்த அம்மாள் வேலுத்தம்பி மரபில் வந்தவள். இந்த இரு வரின் கருத்துருவம் ஒரு மகனாக உருவெடுத்தது. அந்த வீர மகனே செண்பகராமர்.

செண்பகராமர் 15–9–1891-ல் திருவனந்தபுரத்தில் பிறந் தார். மூன்று வயதிலேயே நன் றாகப் பேசினார். தந்தை சின்ன சாமி அவருக்கு வேலுத்தம்பி யின் வீர வரலாற்றைச் சொல் வதுண்டு. தாய்ப்பாலுடன் வீரக்கனலும் அவருட் புகுந்து இரத்தத்திற் கலந்தது. தாய் நாகம்மை தமிழிற் பயிற்சியுள்ள வள். வீர மறவர் கதைகளைச் சொல்லி மகனை வீறுபடுத்து வாள். செண்பகராமரின் ஐந்து வயதில் அவருக்கு ஒரு தமி ழாசிரியர் அமைந்தார். அவர் பள்ளிப் புலவர். திருக்குறளை ஒவ்வொரு நாளும் ஓதிச் சிந்திப் பவர். திருக்குறட் கருத்துக்களை நண்பருக்குத் தெளிவாக விளக்கு கிறவர். அவர் பேச்சைக் கேட்டுக் கேட்டுச் செண்பகராமர் மனம் குறளமுதில் ஊறித் திளைத்தது.

'' எண்ணித் துணிக கருமம்; உள்ளத்தனையது உயர்வு; எண் ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்'' என்ற கருத்துக்கள் அவரது மனத்திட்பத்தையும், வினைத் திட்பத்தையும் வளர்த் தன. செண்பகராமர் தமிழ்ப் பள்ளியில் இரண்டாண்டுகள் படித்தபிறகு, அரசர் உயர் நிலைப் பள்ளியிலே பயின்றார். அவருக்குக் கணக்கில் கருத்தி ருந்தது. சிறு வயதி லேயே கடைக் கணக்கு வைத்தல், வீட்டுத் தேவைகளை வாங்கி வருதல், தாய்தந்தை யர் கட்டளையை நிறைவேற் றல்—ஆகிய அலுவல்களைத் திறம்பட ஆற்றினார். அத்துடன் தகப்பனார் நடத்தும் கபாத்து, வாள் வீச்சு, துப்பாக்கி சுடுதல் முதலிய வீரப் பயிற்சிகளில் ஊக்கங் கொண்டார். பள்ளித் தோழரைப் படை திரட்டி ''வலது, இட்து'' போட்டு வழிநடைப் பயிற்சியளிப்ப துண்டு. அவர் இருந்த தெருவில் ஒரு பயில்வான் உண்டு; அவர் குஸ்தி, சிலம்பம் முதலிய வீர வேலைகள் பயிற்றினார். அங்கே செண்பகராமரும் சென்று பயின்றார்.

* * *

இந்தச் சமயம் பம்பாயில் திலகரும், பஞ்சாபில் லாலா லஜபதிராயும், வங்கத்தில் விபின் சந்திரபால், அரவிந்தர் போன் றோரும், தெற்கே சிவா, சிதம் பரம்பிள்ளை, பாரதி முதலியோ ரும் செய்த நாட்டுப் பணியில் அவரது கவனம் சென்றது. செய்தித் தாள்களை வாங்கிப் படித்துச் சிறுவயதிலேயே அவர் நாட்டன்பு மிகுந்தார். நாட் டன்பைச் செயலிற் காட்டவும் முனைந்தார்.

அரவிந்தரை அலிபூர் சிறையி லிட்டதும், திலகரை மாந்தலைக்கு அனுப்பியதும், சிதம்பரம் பிள்ளை கண்ணனூர்ச் சிறையில் செக் கிழுத்ததும்—லாலாஜீயை நாடு கடத்தியதும் அவருக்கு ஆத்திர மளித்தன. பாரத நாட்டு விடுத லையே அவரது இளங்கனவானது. இத்துடன் நமது நாடு சாதி சமய வேறுபாடுகளால் ஊறுபட்டுழ லும் மாமூல் மூடப்பிடிவாதங் களும் அவர் கண்களை உறுத்தின.

அகில பாரதத்தில் உள்ள
யாவரும் சமானமே!
அனைவரும் சுதந்தரம்
அடைவது தன்மானமே!

என்ற கருத்து அவர் உள்ளத் துடிப்பானது. இந்த வாலிபன் பள்ளிப் பிள்ளைகளைக் கூட்டித் திலகரின் தேசபக்தியைப் பற்றிப் பேசி வந்தான். தகப்பனார் ஆங்கில அரசாங்க ஊழியரா



உரிமையைத் தருவதற்குத் தியாக உணர்ச்சியும் தீரமும் அதிகம் தேவை.

யிருப்பதுகூட அவனுக்குப் பிடிக்கவில்லை. போலீஸ் தந்தை மகனைக் கண்டிப்பதுண்டு; மகனின் மனத் திட்பம் மாறவில்லை.

* * *

பதினைந்து வயதுப் பிள்ளை படிப்பை விட்டான்; அரசினர் பள்ளியில் படிப்பதும் தன்மான உணர்விற்குத் தகவில்லை எனக் கருதினான். சுதேசி இயக்கத்தில் அவன் உள்ளம் ஊக்கங் கொண்டது. ஆனால் நமது நாட்டின் சாதிமதப் பிரிவினையும், வறுமை மடமைகளும், ஒருப்படா வெறுப்புகளும் அவன் மனத்தை உறுத்தின. பழைய குட்டத்திலேயே ஊறிப் பதங் கெட்டுத் தவிக்கும் சமுதாயத்திற்குப் புதிய வாழ்வை அவன் வேண்டினான். தீண்டாமை, தீயர் குலத்துயரங்களை ஒழிக்க முற்பட்டான்.

* * *

அவன் எண்ணங்கள் எதையோ தேடித் திரியும்போது வால்டர் வில்லியம் என்ற ஜெர்மானியர் இந்த வாலிபனைக் கண்டுபிடித்தார். திருவாங்கூரில் இவர் மாணவரிடையே உரிமை வேட்கையைக் கிளப்பினார். அந்தக்காலம் வில்லியம் தலைமையில் ஜெர்மனி ஓர் உலகப் போருக்கே ஆயத்தம் செய்து கொண்டிருந்தது. கெய்சரின் ஒற்றர் உலகெங்கும் சென்று ஜெர்மனிக்கு ஆதரவு தேடினர். அப்போது பெர்லினிலும் ஹாம்பர்க்கிலும் இந்தியச் சுதந்தர வீரர் புகலடைந்து புரட்சி இயக்கத்தை நடத்தினர். அவர்கள் வாழ்ந்த இடத்தை நான் நேரே பார்த்திருக்கிறேன். வால்டர் வில்லியம் செண்பகராமர் உள்ளத்தில் விடுதலை வேட்கையைப் பலமாகத் தூண்டினான். மலையாளத்தில் தீயர்கள் படும்பாடும், வைதிகப் பித்தரின் சாதிவெறியும் நேரே கண்ட வில்லியம் இந்திய நாட்டுக்கு இரண்டு விடுதலை இயக்கத்தை வேண்டினான். 1. பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை, 2. சமூகக் கொடுமையிலிருந்து விடுதலை. இந்த இரண்டும் செண்பகராமர் உள்ளத்தில் அழுத்தமாகப் பதிந்தன. வால்டர் வில்லியத்திடம் அவருக்குப் பற்று முற்றியது. உறவினர் கட்டுப்பாடு பிடிக்கவில்லை. மேலும் அவருக்குமேனாடுசென்று நல்ல கல்வி கற்க வேண்டும்என்ற அவா இருந்தது. ஒரு நாள் திருவனந்தபுரத்தில் கப்பலேறி இருவரும் கொழும்புக்கு வந்து சேர்ந்தனர். செண்பகராமனுக்கு வில்லியம் ஜெர்மன் மொழி பயிற்றி வந்தார். கொழும்பிலிருந்து இருவரும் ரோமுக்கு வந்தனர். அங்கே செண்பகராமன் இத்தாலிய மொழியைக் கற்றுத் தொழிற் கல்விக் கல்லூரியிற் சேர்ந்து பொறியியல் வகுப்பிற் படித்தார். இயந்திரக் கலையுடன் பீரங்கிகள் குண்டு செய்யும் வகையும் பயின்றார். ரோமில் படிப்பு முடிந்ததும் செண்பகராமர் பெர்லின் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி நடத்தி டாக்டர் பட்டம் பெற்றார்.





* * *

அப்போது இலண்டனில் ஒரு புரட்சி இயக்கம் உருவானது. சாவர்க்கார், வ.வே.சு. ஐயர், திருமலாசாரியார், வீரேந்திரர் மாதாம் காமா, சாமாஜி கிருஷ்ணவர்மா ஆகிய பல வீரப் புலிகள் இலண்டனிலும், பாரிசிலும் பெர்லினிலும் பாசறை அமைத்துப் புரட்சிக்கு எழுச்சி யளித்தனர். இலண்டன் இந்திய விடுதலையில் சாவர்கார், ஐயர், திங்கிரா ஆகிய தீவிர வாலிபர் விடுதலைப் புரட்சி நடத்தத் தம்மைப் பயிற்றினர். இவர்கள் ஜெர்மனிக்கும் ரஷ்யாவிற்கும் தமது ஆட்களை அனுப்பி வெடி குண்டு செய்யக் கற்றனர். அவர்கள் இயக்கம் வங்காளம், பஞ்சாப், மராட்டியம், தமிழகம், ஆந்திரம் நியூயார்க் ஆகிய இடங்களுக்கெல்லாம் பரவியது. இந்த இயக்கத்திற்குச் செண்பகராமர் உறுதுணையானார். அவர் பெர்லினில் அனைத்து நாட்டு இந்தியக் குழு (India International Committee) நாட்டினார். பெர்லினில் அனைத்து நாட்டு அரங்கு நடந்தது. அதில் மாதாம்காமா தயாரித்த இந்தியக் கொடி பறந்தது. அந்தக் கொடியை மாக்ஸிம்கோர்க்கியும் பார்த்துப் போற்றினர். லெனினும் இந்திய விடுதலை இயக்கத்தை ஆதரித்தார். இலண்டனில் டிங்கிராகர்சான் வில்லியைச் சுட்டான். அவன் புன்னகையுடன் தூக்குமேடை ஏறி ''நாட்டுக்காக உயிர்கொடுத்து மகிழ்கிறேன்! எந்தாய் வாழ்க!'' என்று இறந்தான். இதன் பிறகு ஐயர் பாரிஸ் சென்றுமாதாம்காமாவுடன் தங்கி போர்ப் பயிற்சி பெற்றுப் புதுச்சேரி வந்து புரட்சி இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தினர். பாரிசில் செண்பகராமர் ஐயரைப் பார்த்தார். திருமலாசாரியார் பெர்லினில் வசித்தார். செண்பகராமரைச் சுற்றி இந்திய சுதந்தர வீரர் கூடினர்.

* * *

1914-ஆம் ஆண்டு உலகப் போர் உறுமி எழுந்தது. செண்பகராமர், சுபாஷ் போசின் முன்னோடியாக, ஜெர்மன் துணைக் கொண்டு, இந்திய விடுதலைக்குப் பாடுபட்டார். கைசர் வில்லியம் இவரைக் கப்பல் போருக்குப் பயிற்றினார். முன்பே துப்பறிந்த ஒற்றர் வால்டர் வில்லியம் இந்தியச் சுதந்தர வீரருடன் இரகசிய உறவு கொண்டு, வழி துலக்கினர். பெர்லினில் குடியேறிய ஆசாரியார் போன்ற வீரர், இங்கே வ.வே.சு. ஐயர் போன்ற தீரருடன் இரகசியமான வட்ட எழுத்தில் செய்திகளை அறிவித்தனர். சீன வீரர் சன்யத்சன்னுடனும் உறவு கொண்டனர். எம்டன் கப்பல் புறப்பட்டது. அதன் தலைவர் வான்முல்லர்; துணைத் தலைவர் (Vice Admiral) நமது செண்பகராமர்.

* * *

மிகச் சுறுசுறுப்பானவனை ''நீ எம்டன்டா'' என்பதுண்டு. எம்டன் நீர்மூழ்கிக் கப்பல் மின் வேகத்தில் கடலை உழுது செல்லும். யாரும் காணமுடியாமல் குறித்த இடத்தில் இருந்து குறித்த பேருக்குச் செய்தியனுப்பும். அதை யாரும் தாக்கமுடியவில்லை.

எம்டன் அட்லாண்டிக் கடலைத் தாண்டி, தென்னாப்பிரிக்கா

வைத் தாண்டிப், பம்பாயைத் தாண்டி, திருவனந்தபுரம் வந்து, கன்னியாகுமரியைச் சுற்றிச் சென்னை வந்து குண்டு போட்டது. நம்மவர் அஞ்சி நடுங்கினர். இதனிடையே கைசர் கிருஷ்ணுவதாரம், நமது நாட்டு விடுதலைக்கு வந்தார் என்றும் பொதுமக்களிடையே பேச்சுப் பரவியது. எம்டன் புதுச்சேரியிலிருந்து மூன்று மைல் தொலைவில் நங்கூரம் போட்டு மறைந்திருந்தது. ஐயருக்குச் செய்தி எட்டியது. ஐயர் மாடசாமியுடன் என்னை அனுப்பினர்.

மாடசாமி, அசகாய வாள் வீரர். வாள் கத்தி வீச்சில் சூரப்புலி. அலெக்சாண்டர் டூமாஸ் நாவலில் வரும் அர்த்தாங்கன் போல் வீரவரிசைகளை வியன்பெறக் காட்டும் வித்தகர். அவரே ஐயரின் வலது கை. ஐயர் அவரையே இந்தியப் புரட்சிக்காரரிடமும், செல்வரிடமும், தூதனுப்பினர். புரட்சி அறிக்கைகளைப் பரப்பி அங்கங்கே தலைமறைவாயிருந்து வேலை செய்தார் மாடசாமி. நானும் ஐயருக்கு உட்கையாயிருந்து ஆசிரியராகவும், பண்டாரமாகவும் நம்மவரிடையே புகுந்து வேலை செய்தேன். மாடசாமி, நிலம் உழுது பயிரிடுவார். வாள்பிடித்துக் களங்காண்பார். பெரிய கோட்டை கொத்தளங்களைத் தாவிச் செல்வார். படகோட்டுவார். மீன் பிடிப்பது போலத் துறைமுகங்களில் அரசியல் வலையை வீசுவார். அவருக்கு மனைவி, மக்கள், வீடு, சொத்து எதிலும் பற்றுதலில்லை. குகனைப் போல ஐயர்பணி செய்வதே அவர் இன்பம். ஐயர் கடிதம் தந்தார். மாடசாமி மீன் படகோட்ட, இரவு ஒரு மணிக்கு நானும் இன்னொருவரும் எம்டனை அடைந்து செண்பக ராமரைப் பார்த்தோம்.

ஆள் மாநிறம், கட்டுமஸ்தான கம்பீரத் தோற்றம். ஐரோப்பிய உடை, தொப்பியைக் கையில் ஏந்தி நின்று எங்களை உள்ளே ஏற்றி உடனே கடிதத்தைப் படித்து, "சிங்கப்பூர் சென்று திரும்புவோம்; தயாராயிருங்கள்" என்று வட்ட எழுத்தில் பதில் தந்து, ஒரு பெட்டியும் அளித்தார். அதில் பணம் இருந்தது எனத் தெரிந்தது.

மாடசாமி படகோட்டி ஒரு மைல் வந்தபோதே எம்டன் முப்பது மைல் தாவிச் சென்று விட்டது.

* * *

ஐயர் எங்களைத் தட்டிக் கொடுத்து மெச்சினர். சண்பகராமர் உதவியால் தமிழகமெங்கும் சுதந்தர உணர்ச்சி பறந்து பரவியது. புரட்சி அறிக்கைகள் வரும்; எங்கிருந்து. எப்படி என்று யாரும் அறியார்.

* * *

**எ**ம்டன் எத்தனையோ இடங்களைத் தாண்டி அந்தமான் வழியாகச் சென்று, அங்கிருந்த சாவர்க்கார் முதலிய வீரர்களுடன் உறவு கொண்டு, சிங்கப்பூர் அருகே பாய்ந்தபோது, பிரிட்டிஷ் கடல் வீரர் அதைச் சுட்டனர். கப்பல் மூழ்கியது; செண்பகராமர் கடலுள் ஆழ்ந்து, முக்குளித்து நீந்தித் தப்பி, மாறுவேடம் பூண்டு, நாடெல்லாம் சுற்றித் தமது மனைவி இலட்சுமியைக் கண்ட பிறகு, பல விடுதலை வீரரையும் கண்டு,



ஜெர்மன் ஒற்றர் துணையாலே காபூல் சென்றார்.

* * *

**கா**பூலில் எனது நண்பர் ராசாமஹேந்திரப் பிரதாவுடன் கூடி ஒரு தனி-இந்திய அரசை நாட்டினர். மகேந்திரர் ஜப்பானில் என்னுடன் சுற்றுப் பயணம் செய்தபோது பல அரிய நிகழ்ச்சிகளைச் சொன்னர். மகேந்திரர் செண்பகராமருடன் மாஸ்கோ சென்று லெனினைக் கண்டு பேசி இந்திய விடுதலைக்கு ஆக்கந் தேடினர். லெனின் அப்போது ஜாரை வீழ்த்தி உலகுக்கு ஒரு புதுமையான பொதுவுடைமையை நாட்டினன். அந்த வகையில் இந்தியா விடுதலை பெறவே செண்பக


என்னும் மந்திரநாதம் அவர் உள்ளத்திலிருந்தே புறப்பட்டது.

* * *

செண்பகராமர் சுபாஷ்சந்திர போசின் நெருங்கிய நண்பர். இருவரும் ஜெர்மன் உதவியால் விடுதலைப் புரட்சி நடத்த முனைந்தனர். இதற்கு இட்லர் உறுதுணையானர். இரண்டாவது உலகப் போர் மூண்டது. சுபாஷ், வீட்டுக் கைதியாயிருந்து, தாடி வளர்த்துக் கொண்டு தப்பிச் சென்று, காபூல் வழியே, மாஸ்கோ புகுந்து பெர்லினையடைந்து, செண்பகராமருடன் கூடினர். அப்போது அவர் வயது ஐம்பது. இருவரும் இட்லர்-நட்பைப் பெற்று இந்தியப்படை சேர்த்து (Indian National Army) போர் முரசு கொட்டியெழுந்தனர். அப்போது இங்கே கிரிப்ஸ் தூது வந்தது. இட்லர் சுபாஷை இந்திய நாட்டுத் தலைவராக்கினர். அவரை நீர் மூழ்கியில் நேராகச் சிங்கப்பூருக்கு அனுப்பினர். இதற்குள் ஜப்பான் டம்டமார் குண்டு போட்டுச் சீனத்தை வென்று உலகம் கிடுகிடுக்க இந்தியாவின் மீதும் பாய்ந்தது. சுபாஷ் போஸ் நேதாஜியாகி அங்கே வந்து இந்தியப் படையை நடத்தினர். பர்மாவிலும் மலேயாவிலும் வெற்றி பெற்று ஜப்பான் துணையால் அந்தமானில் அரசு நாட்டினர்.

இங்கே காந்தியின் "இந்தியாவை விட்டுப் போ" (Quit India) இயக்கம் பலமானது. சுபாஷின் நெஞ்சுரத்தால் இந்தியாவுக்குப் புதிய பலம் வந்தது. வைசிராய் வாவெல் கலங்கிப் போனர். கிரிப்ஸ் தூதும் வந்தது . . . 26—5—1934-ல் செண்பகராமர் "இந்தியா விடுதலை பெறும், பெற்றுவிட்டது; என் வாழ்வின் குறிக்கோள் வென்றது. ஜெய்-ஹிந்த்" என்று கூவி மாரடைப்பினல் இறந்தார். சுபாஷ்போஸ், "இறுதி மூச்சுள்ள மட்டும் இந்தியாவுக்கே உயிர்த்த வீரர்" என்று செண்பகராமரை வாழ்த்தினர். செண்பகராமர் இந்து மதப் பற்றுடையவர். பெர்லினில் இருந்து அவரது சாம்பலை, அவர் மனைவி இலட்சுமிஅம்மாள் 1966ல் நாஞ்சில்நாட்டிற்குக்கொணர்ந்து ஈமக் கடன்களை முடித்தார்.

செண்பகராமர்நிரம்பக்கற்றார்; நிரம்பப் பாடுபட்டார். இந்திய விடுதலைக்கே இறுதி மூச்சுள்ள வரையில் தொண்டு செய்துநிறைவான மனத்துடன் உடலை நீத்து, உலகுள்ள மட்டும் வாழும் புகழ் பெற்றுலாவுகிறார். "தோன்றிற்



# காந்தி இல்லம் காணவாரீர்!



சென்னை அண்ணாசாலையிலுள்ள அரசினர் தோட்டம்.

அங்கே அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவில் தமிழ்நாடு அரசு அமைத்த நினைவுச் சின்னம்தான் காந்தி இல்லம்.

வெள்ளையர் காலத்திலிருந்து விருந்தினர் மாளிகையாக இருந்த 'லாட்ஜ்' என்ற மாளிகையே இப்பொழுது காந்தி இல்லமாக மாறியுள்ளது.

இப்பொழுது குடியரசுத் தலைவராக உள்ள திரு வி. வி. கிரி, முன்பு இந்த மாளிகையில் குடியிருந்திருக்கிறார். இதுபோன்ற பல முக்கியப்பிரமுகர்களின் குடியிருப்பாகத் திகழ்ந்த 'லாட்ஜ்' 1969—ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாள் காந்தி இல்லமாக மாறியது.

இராஜாஜி ஹாலின் வாயிற் பக்கம் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள காந்தி இல்லம் சென்னைக்குச் சுற்றுலா வருவோர் காண வேண்டிய இடமாக— அண்ணல் பற்றிய அரும்பொருட் காட்சியகமாகத் திகழ்கிறது.

காந்தி இல்லத்தைத்தமிழ்நாடு அரசு ஒரு லட்சம் ரூபாய் செலவில் அமைத்துள்ளது. அண்ணல் காந்தியடிகள் தமிழகத்திற்கு வருகை தந்த நிகழ்ச்சிகளையும், அண்ணலின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை விளக்கும் படங்களையும் இங்குக் காணலாம்.

காந்தி இல்லத்தில் நுழைந்தவுடன் காந்தியடிகளின் மார்பளவு வெண்கலச்சிலை ஒன்று உள்ளது. ராய்சவுத்திரி செய்துள்ள இந்தச் சிலையைப் பார்க்கும் அயல் நாட்டவர்கள் அனைவரும் புகழ்கின்றனர்.

இளமைக் காலந்தொட்டுக் காந்தியடிகள் வாழ்க்கை நிகழ்ச்சியை விளக்கும் புகைப்படங்கள் ஏராளமாக உள்ளன.

வாழ்க்கை வரலாற்று வண்ண ஓவியங்கள் ஏராளமாக அமைந்துள்ளன.

தமிழகத்திலுள்ள நண்பர்களுக்குக் காந்தியடிகள் எழுதிய கடிதங்களும், அவர்கள் அண்ணலுக்கு எழுதிய கடிதங்களின் நகல்களும் இங்கு வைக்கப்பட்டுள்ளன.

நீலகிரியைச் சேர்ந்த மேரிபார் அம்மையார் என்பவர் காந்தியடிகளுக்கு அளித்துக் காந்தியடிகள் பயன்படுத்திய மூங்கில் பேனாவும் காந்தி இல்லத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டிற்குக் காந்தியடிகள் வருகை தந்தபொழுது, அவர் பழனி முருகன் ஆலயத்திற்கு ஏறிச் சென்ற பல்லக்கும் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

காந்தியடிகளுடன் தென்னாப்பிரிக்காவில் அறப்போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்நீத்த தமிழர்களான தில்லையாடி வள்ளியம்மை நாகப்பன், நாராயணசாமி ஆகியோரைப் பற்றி அண்ணல் எழுதியவைகளும் இங்குக் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டுள்ளன.

சபர்மதி ஆசிரமம் மாதிரி வடிவம் போன்ற பல அரிய பொருள்களைக் காந்தி இல்லத்தில் காணலாம். குஜராத் மாநில ஆளுநரான மேதகு நாராயணன் போன்றவர்களும், வட இந்திய மாநிலங்களைச்



சேர்ந்த ஆன்றோர்களும் காந்தி இல்லத்தைக் கண்டு மகிழ்ந்திருக்கின்றனர். அவர்களில் சிலர் பார்வையாளர் குறிப்பேடுகளில் எழுதியுள்ளவைகளில் சில செய்திகள் வருமாறு :

"நேபாளம், காஷ்மீர் ஆகிய இரு பகுதிகளைச் சார்ந்த இரண்டு உயர் காவல்துறை அதிகாரிகளுடன் இந்த இடத்தைப் (காந்தி இல்லம்) பார்வையிட்டேன். நிழற்படங்களைக் கண்டு களித்தோம். அவை மிகவும் நன்றாகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. படத்திற்கான விளக்கங்களை ஆங்கிலத்திலும் எழுதினால் வட இந்தியருக்கும், வெளி நாட்டினருக்கும் உதவியாக இருக்கும். நாள் முழுவதும், இடையில் நண்பகல் உணவுக்காக மட்டும் ஒரு மணி நேரம் இடைவெளி விட்டுத் திறந்து வைக்கப்பட்டால் பார்வையாளர்கள் அதிக நேரம் கண்டு களிக்க முடியும். நாங்கள் 11·50-க்கு வந்தோம். நேரம் நெருங்கிவிட்டதால், அவசர அவசரமாகப் பார்த்துவிட்டு வெளியேற வேண்டியதாகிவிட்டது."

சி. தினகர், எம்.எஸ்.வி.,
ஐ.பி.எஸ்.,
போலீஸ் சூப்பிரண்ட்,
மைசூர் மாநிலம்.
21—12—1971,
சென்னை.

* * *

உடன் வந்தவர்கள் :

திரு ஆர். பி. சந்த் (நேபாளம்). திரு கோன் சாக் சோஸ்பெயில்.

"இன்று நான் காந்தி இல்லத்தைப் பார்த்தேன்; பெரிதும் மகிழ்ந்தேன். தமிழ்நாடு அரசு உண்மையிலேயே மிகவும் சிறப்பாக இதைச் செய்திருக்கிறது. தமிழ் தெரியாத பிறர் தெரிந்து கொள்ளும் வகையில் படங்களுக்கு விளக்கம் ஆங்கிலத்திலும் எழுதவேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோளும் கருத்துமாகும்.

பகல் 12 முதல் 3 மணி வரை இடைவெளி இருக்கிறது. அந்த இடைவெளி இல்லாமல் தொடர்ந்து திறந்து வைக்கப்பட்டால் நல்லது."

—எஸ். பி. பாசு,
கால்நடை மருத்துவத் துறையின் இணைச் செயலாளர்,
மத்தியப் பிரதேசம்.
சென்னை,

"காந்தி இல்லத்தைத் திரு ஜெயசீலனுடன் சென்று பார்த்தேன். எங்கள் வாழ்நாளில் என்றுமே காணக் கிடைக்காத அழகுமிக்க படங்களைக் கண்டு களிக்கும் வாய்ப்புக் கிடைத்தது எனக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது."

சென்னை, கே. உபநீஸ்வரன்,
16—12—1971. மலேசியா.

காந்தி இல்லத்தைக் கண்டது ஓர் இனிய வாய்ப்பு ; எதிர்பாராதது. எனவே வியப்பும் மகிழ்ச்சியும் ஆட்கொண்டன. காந்தி இல்லக் காப்பாளர் எங்களுக்கு மிகுந்த கனிவு காட்டினார் ; பெரிதும் உதவினார். அவருக்கு நன்றி.

ஜாண், வெரு உட்,
லண்டன்—டபிள்யூ-1.

* * *



"காந்தி இல்லத்தைப் பார்ப்பது மிக்க மகிழ்ச்சிக்குரியதாகும். சென்னையில் தி.மு.க. அரசு தேசத் தந்தையின் நினைவாக இக்காட்சியரங்கை அமைத்துள்ளது. காந்தியடிகளின் வாழ்க்கையைப் புதிய தலைமுறை அறிந்து கொள்வதற்கு ஏற்ற அமைப்பு இது. ஏழைகளின் தொண்டர் அவர். அவரது வாழ்க்கை வரலாற்றை எழிலுற அமைத்தவர்களுக்கு எனது நன்றி."

—ஏ. கரன்,
(உத்திரப் பிரதேசம்) செயலாளர், காந்தி—நினைவு நிதி.
சென்னை, 11—5—1970.

* * *

"காந்தியின் வாழ்க்கை வரலாறு

றதும் பார்க்கும் ஆவலோடு நுழைந்தோம். இதனுள் நுழைந்ததும் எதிரில் சிரித்த முகத்துடன் எங்களை வரவேற்றுக் கொண்டிருக்கும் எங்கள் தந்தையைக் கண்டதும் அளவிலா ஆனந்தம் கொண்டோம். மேலும் உள்ளே சென்று அவருடைய பல வகையான புகைப் படங்களைக் கண்டதும் அவரையே நேரில் கண்டு அளவளாவிய மகிழ்ச்சியுடன் திரும்பினோம். பழைய நினைவுகளுக்கு ஒரு இருப்பிடமாக இதை அமைத்த நம் தமிழக அரசுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றோம்.''

(மாணவர்களும், ஆசிரியர்களும்).

—என். சாரதா,
குமாரி காந்தா ராஜி, அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி, பொன்னேரி.
சென்னை, 21—8—1970.

* * *

நாள்தோறும் ஏராளமான மாணவர்கள் காந்தி இல்லம் நோக்கிச் சுற்றுலா வந்த வண்ணமிருக்கிறார்கள்.

இளைய தலைமுறையினருக்கு அண்ணலைப் பற்றி அறிவூட்டும் திருக்கோயிலாகக் காந்தி இல்லம் திகழ்கிறது.

காந்தி இல்லத்தின் அமைதியான சூழ்நிலையே இங்கு வருவோரின் நெஞ்சத்தில் ஒரு நிறைவை உருவாக்கி விடுகிறது.

காந்தி இல்லத்தில் அமைந்துள்ள ஒளி அமைப்புக் கூட ஓர் இனிய நிறைவை—எழிலைக் கொடுக்கிறது.

காந்தி இல்லத்திற்கு எந்த நாளும் விடுமுறை கிடையாது.

* * *

"காந்தி இல்லத்தின் காட்சியகம் கண்ணுக்கு விருந்து என்றால் காந்தியகத்தில் அமைந்துள்ள காந்தி நூலகம் அறிவுக்குப் பெரும் விருந்தாகும்.

காந்தீய நூல்களும், காந்தியடிகள் பற்றிய நூல்களும், காந்தியடிகளின் நூல்களும் இங்கு நிரம்பியுள்ளன. காண்போரைக் கற்கத் தூண்டும் நூல் வரிசைகளும் காந்தி இல்லத்திற்குப் பெருமை சேர்ப்பன.

அண்ணலின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் தொகுத்து வைக்கப்பட்டுள்ள காந்தி இல்லம் தமிழகத்தின் புகழ்மிக்க வரலாற்றில் ஒருசின்னமாகத் திகழ்வதில் வியப்பில்லையே !




நெஞ்சிலே கொந்தளிப்பு இருந்தாலும் வெளியே புன்னகை செய்ய என் மனத்தைப் பழக்கியிருக்கிறேன்.

* * *

சிறுபான்மையோரைப் பாதுகாக்க நான் உறுதி பூண்டிருக்கிறேன் ; இயலாவிடில் அம் முயற்சியிலேயே நான் உயிர் துறப்பேன்.

* * *

என்னுடைய வழியைத் தவிர வேறு வழியோ நல்ல வழியோ இருக்க முடியாது என்று தருக்குக் கொள்பவனல்ல நான். ஆனால் எந்த வழியைப் பின் பற்றினாலும் மக்கள் கோழைகளாகிவிடாமல் இருந்தால் போதுமானது.

* * *

தாய்நாட்டின் தொண்டுக்காக என் வாழ்வு அனைத்தையும் நான் ஒப்படைத்திருக்கிறேன். இந்தத் தொண்டு இல்லாவிடில் என் வாழ்க்கையே எனக்குத் தாங்க முடியாத சுமையாகிவிடும்.

* * *

இதயம் மட்டும் தூய்மையானதாயிருந்தால் ஆபத்து நேரும் போது அதனுடன் போராடுவதற்குப் படைக்கலன்களும் மனிதர்களும் தாமே வந்து சேர்வர் என்பது எனது நம்பிக்கை.

* * *

அகத் தூய்மையைப் பக்குவமாகப் பண்படுத்த வேண்டும். அதை வளர்ப்பதற்குத்தான் கல்வி பயன்பட வேண்டும்.

* * *

ஆண்மைக்கு அழகு அகிம்சை. அதைப் பற்றிக் கோழை அறியமாட்டான்.

* * *

நோயால் செத்துப் போகிறவர்களை விட அச்சத்தால் செத்துப் போகிறவர்களின் எண்ணிக்கைதான் அதிகம். ஆகையால் யாரும் அஞ்சக் கூடாது.

உண்மைக் குள்ளேயே அழகைக் காண்கிறேன். உண்மையின் வாயிலாகவும் அழகைக் காண்கிறேன்.

* * *

எதைக் கைக் கொள்வது எதைப் புறக்கணிப்பது என்று தானாகவே தெரிந்து கொள்ளும் பகுத்தறிவு பெற்றால் மட்டும் மாணவர்களுக்குப் போதுமானது. அவர்களுக்கு அந்தப் பகுத்தறிவு வளர்ச்சியை ஊட்டுவது ஒன்றுதான் ஆசிரியர்களின் கடமையாகும்.

* * *

உண்மையான அன்பை வெறும் வாய்ப் புகழ்ச்சியின் வாயிலாக மட்டும் காட்டிவிட முடியாது. செயலின் வாயிலாகவே அதைக் காட்ட முடியும்.

* * *

பெண்களின் நிலை உயரும் போது ஆண்களின் நிலையும் உயரும். இவ்விருவரின் நிலையும் உயரும் போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்து விடும்.

* * *

எந்தப் பெரிய இலட்சியத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்வோம். அதைச் சாதிப்பதற்கு எத்தனை பேர் முன் வருகிறார்கள் என்ற எண்ணிக்கை முக்கியமல்ல. அதற்காக முன் வருபவர்கள் எத்தகைய மானப்பாங்குடையவர்கள் என்பதே வெற்றியை அறுதியிட்டுக் கூறும் அம்சமாகும் !

* * *

நாட்டின் மூலப் பொருள்களை வெளிநாடுகளுக்குஅனுப்பிவிட்டு அங்குத் தயாரித்து அனுப்பப்படும் வேறு பொருள்களை அதிக விலை கொடுத்து இறக்குமதி செய்வது வறுமைக்கு உரமிடுவதாகும்.

கடமைகளைச் செய்யாமலே உரிமைகளைத் தேடினால் அவை கானல் நீராகிவிடும்.

* * *

குறைபாடுகளைப் போக்கிக் கொள்ளாமல் உரிமைகளுக்கு மட்டும் போராடுவது எனக்குப் பிடிப்பதே இல்லை.

* * *

குழந்தைகள் எப்போதும் கண்களினால் கற்றுக் கொள்வதை விடக் காதுகளினால் தான் அதிகம் கற்றுக் கொள்கின்றன.

* * *

தாய்மொழிகளுக்குரிய உன்னத இடம் கொடுக்காத எந்தக் கல்வித் திட்டமும் கல்விப் பிரச்சினையின் விளிம்பைக் கூடத் தொடத் தகுதியற்றதாகும்.

* * *

மக்கள் அந்தந்த நாட்டுக்குரிய உயர்ந்த பண்புகளுடன் விளங்க வேண்டுமானால், அந்த நாட்டு இளைஞர்களுக்கு உயர் கல்வியை மட்டுமின்றி எல்லாக் கல்வியையும் தாய்மொழி வாயிலாகவே கற்பிக்க வேண்டும்.


* * *

எல்லையற்ற துன்பத்தைச் சமாளிப்பதற்கு எல்லையற்ற பொறுமையும், உண்மையே இறுதியில் வெல்லும் என்பதில் கொழுந்து விட்டெரியும் நம்பிக்கையுமே தேவையாகும்.

* * *

திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றால் பணம் தர வேண்டும் என்று கேட்கும் எந்த இளைஞனையும் திருமணம் செய்து கொள்வதற்குப் பெண் மறுத்துவிட வேண்டும்.

# அண்ணலின் வாழ்விலே...!



தமிழ்ப்பித்தன்

அகமதாபாத்தில் சத்தியாக்கிரக ஆசிரமம் நிறுவிய புதிது. ஒரு பானையை எடுத்துக்கொண்டு அருகில் இருந்த கிணற்றிலிருந்து நீர் கொண்டுவரப் புறப்பட்டார் ஒரு முதியவர்.

அந்தப் பக்கமாக ஒரு வாணிகர் வந்து கொண்டிருந்தார். அவர், முதியவரின் அருகில் வந்து, ''ஐயா, நான் காந்தியடிகளைப் பார்க்க வந்திருக்கிறேன், அவரது ஆசிரமம் எங்கே இருக்கிறது?'' என்று கேட்டார்.

''பொறுங்கள், நான் உங்களை அவரிடம் அழைத்துச் செல்கிறேன்'' என்று முதியவர் சொல்லிவிட்டு, நீர் இறைத்துக் கொண்டிருந்தார். வாணிகரோ பொறுமையிழந்து கொண்டிருந்தார்.

''நான் காந்தியை அவசரமாகப் பார்க்க வேண்டும்; புரிந்ததா இல்லையா?'' என்று அடித்தொண்டையில் கேட்டார் வாணிகர்.

உடனே அந்த முதியவர்,

''நான்தான் காந்தி; என்ன பேச வேண்டும்?'' என்று கேட்டார். மறுவினாடி அந்த வாணிகர் ஆச்சரியத்தில் ஊமையாகிவிட்டார். உலகப் புகழ் பெற்ற காந்தியடிகள் அவ்வளவு எளிமையாக இருப்பார் என்று அந்த வாணிகர் எண்ணவே இல்லை.

* * *

காந்தியடிகள் இளைஞராக இருந்த பொழுது இலண்டன் மெட்ரிக் தேர்வு எழுதினார். அந்தத் தேர்வில்—பொது அறிவுக் கேள்வித் தாளில் ஒரு வினா தரப்பட்டிருந்தது. அதற்கு அவர் விடுத்த விடை—அப்போதே அவரது புனித உள்ளத்தை எடுத்துரைத்தது.

வினா: தங்கத்தை விடத் தங்கமானது எது?

காந்தியடிகள் தந்த விடை: உண்மை.

* * *

காந்தியடிகள் தமிழ் நாட்டுக்கு வருகை தந்திருந்த சமயம். இராமநாதபுர மாவட்டத்தில் அமராவதிபுதூரில் ஒரு தமிழன்பர் இல்லத்தில் மாலை உணவு ஏற்பாடாகியிருந்தது. அடிகள் உண்பதற்கு அமர்ந்தார்.

அப்போது அவரைக் காண வேண்டுமென்று ஓடோடி வந்தார் ஒரு கைரேகை நிபுணர். தனக்குக் கிடைத்த நற்சான்று இதழ்களை எல்லாம் அள்ளி எடுத்துக்கொண்டு வந்து, வாசலில் நின்றார். வீட்டினுள் நுழைவதற்கு முயன்றார். எந்த நேரமும் பொதுமக்களை அன்போடு காணும் அண்ணல் உண்ணும் போதாவது நிம்மதியாக இருக்கட்டும் என்ற எண்ணத்துடன், எவரும் அவரை அணுகாது அன்பர்கள் காவல் செய்துகொண்டிருந்ததால் கைரேகை நிபுணரை உள்ளே போகவிடாமல் தடுத்து நிறுத்தி ''ஐயா உமக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டனர்.

''நான் கைரேகை நிபுணர். பல்லாயிரம் கைரேகைகளைப் பார்த்துப் பயிற்சி பெற்றவன். காந்தியடிகளின் கைரேகையைப் பார்க்க வந்திருக்கிறேன்'' என்றார்.

அவரது ஆர்வத்தை வீணடிக்க வேண்டாம் என்ற உணர்வுடன் ஒரு தொண்டர், வீட்டினுள் சென்று, காந்தியடிகளிடம் தெரிவித்தார்.

''ஆயிரம் ரூபாய் கொடுத்தால் என் கைரேகையை அவர் பார்க்கலாம் என்று சொல்லுங்கள்'' இவ்வாறு தெரிவித்தார் காந்தியடிகள்.

தொண்டர், காந்தியடிகளின் கருத்தைக் கைரேகை நிபுணரிடம் தெரிவித்தார். கைரேகை நிபுணருக்கு ஒன்றும் புரியவில்லை. அவர்தான் இது வரை பணம் வாங்கியிருந்தாரே தவிர, அவரிடம் யாரும் பணம் கேட்டதில்லை. அடிகளின் பதில் அவருக்கு வியப்பாகவும் இருந்தது. வேதனையாகவும் இருந்தது.

''ஐயா! நானோ பிச்சைக்காரன். என்னிடத்தில் ஒரு காசுகூட இல்லை. ஆனாலும் மகாத்மாவின் கைரேகைகளைப் பார்த்தே தீர வேண்டும் என்ற பைத்தியம் எனக்குத் தலைக்கு ஏறிவிட்டது. அவரது கைரேகையைப் பார்க்காமல் நான் இந்த இடத்தை விட்டுப் போகமாட்டேன் என்று அண்ணலிடம் கூறுங்கள்''—கைரேகை நிபுணர் இவ்வாறு சொல்லியபடி அங்கே உட்கார்ந்துவிட்டார்.



தொண்டர் மீண்டும் வீட்டினுள் சென்று, கைரேகை நிபுணர் சொல்லிய கருத்தைக் காந்தியடிகளிடம் சொன்னார்.

‘‘அப்படியா! ஆயிரம் ரூபாய் வாங்கியே தீர வேண்டும் என்ற பைத்தியம் என் தலைக்கு ஏறி விட்டதென்று சொல்லிவிடு’’— அடிகள் கண்டிப்புடன் கூறினார்.

தொண்டர், கைரேகை நிபுணரிடம் வந்தார்; அடிகள் சொல்லியதை எடுத்துரைத்தார். பாவம், கைரேகை நிபுணர்! தனது முயற்சி காந்தியடிகளிடம் பலிக்காது என்பதைத் தெரிந்து கொண்டு நடையைக் கட்டி விட்டார்.

* * *

காந்தியடிகள் ஏரவாடாச் சிறையில் இருந்த சமயம்; குடல்வால் நோயினால் தொல்லைப் பட்டார். அறுவைச் சிகிச்சைக்காக மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கே ஓர் ஆங்கிலச் செவிலி, அடிகளுக்கு அன்புடன் பணிவிடை செய்தாள்.

அடிகள் சிறிது குணமடைந்தவுடன் மருத்துவ மனையில் வேறொரு பகுதிக்கு அவரை மாற்றினார்கள். அவரை அழைத்துச் செல்லும் போது, அந்தச் செவிலி காந்தியடிகளிடம் கேட்டாள்.

‘‘நீங்கள் பிரிட்டிஷ் பொருள்கள் பலவற்றை வெறுக்கிறீர்கள். ஆனால் இன்று பிரிட்டிஷ் மருந்துகள், அறுவைக் கருவிகள், முதலியவற்றைப் பயன்படுத்தி ஒரு பிரிட்டிஷ் டாக்டர்தான் உங்களுடைய உயிரைக் காப்பாற்றினார். இப்போது உங்கள் மீது வெய்யில் படாமல் மறைத்து வந்த குடைகூடப் பிரிட்டிஷ் தயாரிப்பு என்பது உங்களுக்குத் தெரியுமா?’’—செவிலி கேட்டாள்.



‘‘நிலைமையைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் நீங்கள் பேசுகிறீர்கள். பிரிட்டிஷ் தயாரிப்பு என்பதற்காக நான் எந்தப் பொருளையும் வெறுக்கவில்லை. எங்களுடைய தொழிலை அழித்துக் கோடிக் கணக்கில் மக்களை ஏழைகளாக்கும் அந்நியத் துணி இறக்குமதியைத்தான் நான் வெறுக்கிறேன்’’— காந்தியடிகள் பதில் தந்தார்.

ஆங்கில மக்களிடம் காந்தியடிகளுக்கு வெறுப்புக் கிடையாது. ஆங்கில ஆதிக்கத்திடம் தான் வெறுப்பு என்பதைத் தெரிந்து கொண்டதும் அந்தச் செவிலி மகிழ்ச்சி அடைந்தாள்.

* * *

உப்புச் சத்தியாக்கிரகம் நடைபெற்ற காலம்.


1930-ஆம் ஆண்டு சூன் மாதம் குசராத்தில் கராடி என்ற இடத்தில் அறப்போர்த் தொண்டர்களின் முதற்படை தங்கியிருந்தது. ஒரு மாந்தோப்பில் சிறிய குழுவில் காந்தியடிகள் தங்கினார். அந்தக் குடில் அவருக்காகவே அமைக்கப்பட்டது.

ஒருநாள் காலையில், சிற்றூர் மக்கள் சிலர் மகிழ்ச்சியுடனும் பாட்டுப்பாடியபடியும், கைகளில் மாலை, பழம், பணம் ஆகியவற்றை ஏந்தியவாறும் அண்ணலின் குடிலை நாடி வந்தனர். அவரது கால்களில் அவற்றை வைத்துப் பணிந்தனர். அடிகளுக்குக் குழப்பமாக இருந்தது. அந்தக் கூட்டத்தில் இருந்த ஒருவர், அடிகளைப் பார்த்து,

‘‘அண்ணலே! எங்கள் ஊர்க் கிணற்றில் எத்தனையோ ஆண்டுகளாகத் தண்ணீரே இல்லாமல் இருந்தது. நேற்றுத் தங்கள் புனிதத் திருவடி இந்த நிலத்தில் பட்டது. இன்று கிணற்றில் நீர் நிரம்பி விட்டது. அதனால்தான் தங்களை வழிபட வந்தோம்’’—என்றார்.

‘‘இதெல்லாம் பைத்தியக்காரத்தனம்! இது தற்செயலாக நிகழ்ந்த நிகழ்ச்சி.

‘‘கடவுள் என்னிடம் மட்டும் அதிகக் கருணையுடையவர் என்று நினைக்காதீர்கள். உங்களுக்கு எவ்வளவு கருணை செய்கிறாரோ அவ்வளவுதான் எனக்கும் செய்கிறார். என்னால் நிகழ்ந்த அற்புதம் என்று இதனைக் கூறாதீர்கள். காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போன்றது இது. காக்கையா பனம் பழத்தைப் பறித்துப் போட்டது?



இதுபோன்ற பைத்தியக்கார எண்ணங்களை எல்லாம் விட்டுவிட்டு, உங்கள் ஊருக்குச் சென்று, நூல் நூற்றுத் துணி நெய்யுங்கள். இந்தியத் தாய்க்கு அந்தத் துணி வேண்டியிருக்கிறது’’—என்று காந்தியடிகள் கூறினார்கள்.

அதற்குப் பிறகும் அங்கே நின்று கொண்டிருக்க அந்தச் சிற்றூர்க்காரர்களுக்குப் பைத்தியமா என்ன? அடிகளுக்கு வணக்கம் செலுத்தியபடி ஓடோடிச் சென்றார்கள்.

* * *

ஒருமுறை காந்தியடிகளின் பேனா காணாமற் போய்விட்டது. எங்குத் தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை. விலையுயர்ந்த பொருட்களை இனிமேல் வைத்துக்கொள்ளக் கூடாது’’ என்று அப்போது காந்தியடிகள் முடிவு செய்தார். தொட்டெழுதும் பேனாக் கட்டையைப் பயன்படுத்தத் தொடங்கினார்.

‘‘ஒருநாள் பேனாக் கட்டையினால் எழுதிக் கொண்டிருக்கும் போது எப்படியோ அதன் ‘நிப்’ வளைந்துவிட்டது. புதிதாக வேறொன்று வாங்கி வரச் சொல்லலாம் என்று நினைத்தார். ஆனால், வாங்கி வருவதற்குள் நேரம் வீணாகி விடுமே என்ற கவலை அவருக்கு ஏற்பட்டது. மறு வினாடி........ பேனாக் கட்டையின் முனையைக் கூராகச் சீவி அதில் மையைத் தொட்டு எழுத ஆரம்பித்தார்’’.

‘‘இதனால் நேரமும் மிச்சம். பணமும் மிச்சம்! வேலையும் முடிந்தது’’—இவ்வாறு எண்ணி மகிழ்ந்தார் காந்தியடிகள்.

அவ்வாறு உருவாக்கப்பட்ட பேனாவால் முதல் கடிதம் மவுண்ட்பேட்டன் பிரபுவுக்குத்தான் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுகமான வாழ்வு பெற 'சோயா' மொச்சை பயிரிடுவீர்




'சோயா பீன்ஸ்' எனப்படும் சோயா மொச்சை இருபதாம் நூற்றாண்டின் விந்தை உணவாக (Wonder food of the 20th Centuary) விளங்குகிறது. சோயா மொச்சை, உலகின் முன்னேறிய நாடுகளிலெல்லாம் நெடுங்காலமாக நிலவிவந்த சாகுபடி முறையை, சமீப காலத்தில் புரட்சிகரமாக மாற்றி அமைத்துள்ளது. சோயா மொச்சை, பயறு வகையைச் சார்ந்த ஒரு பயிராகும். இப்பயறு ஊட்டச் சத்து மிகுந்ததாகவும், சிக்கனமான முறையில் சாகுபடி செய்வதற்கு ஏற்றதாகவும் இருக்கிறது. ஆயினும் உணவுப் பற்றுக்குறையும், ஊட்டச்சத்துப் பற்றுக்குறையும்பெரும் பிரச்சினையாக உள்ள இந்தியாவில் சோயா மொச்சையைப் பெருமளவில் சாகுபடி செய்யாதிருப்பது வருத்தப்படுவதற்குரிய செயலேயாகும். இந்திய மக்களின் உடல்நலம் செழிக்கவும், இந்தியாவின் தொழில் வளம் பெருக்கவும் உறுதுணையாக அமைய வல்லது சோயா மொச்சையே!

சோயா மொச்சையின் பிறப்பிடம் கிழக்கு ஆசியா. இதன் விதைகள் வடிவிலும், வண்ணத்திலும் மாறுபடுகின்றன. சோயா மொச்சையில் ஏறத்தாழ 1,500 ரகங்கள் உள்ளன.

சைனாவில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே சோயா மொச்சை பயிரிடப்பட்டு வந்துள்ளது. சோயா மொச்சையை முக்கிய உணவாகப் பயன்படுத்தும் நாடுகளில் முதலிடம் வகிப்பது சைனாவே! பொதுவாக ஆசிய நாடுகளில் சோயா மொச்சையை அதிக அளவில் உணவாக உபயோகிக்கின்றார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் முக்கிய பயிர்களுள் 5-ஆவது இடத்தைச் சோயா மொச்சை பெற்றுள்ளது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குத் தற்பொழுது 'டாலர்' சம்பாதித்துக் கொடுக்கும் வேளாண்மைப் பொருள்களில் முதலிடம் வகிப்பது சோயா மொச்சையே! பரப்பளவையும், உற்பத்தியையும் பொறுத்தவரையில், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கோதுமைக்கு மிக நெருங்கிய நிலையில் சோயா மொச்சை இடம் பெற்றுள்ளது. இதே நிலைமை தான் ஜப்பான் முதலிய அநேக நாடுகளில் இருந்துவருகிறது.

ஆனால் இந்தியாவில் இதுவரை சோயாமொச்சை, குறிப்பிடத் தகுந்த அளவுக்குப் பரவவில்லை. இதன் காரணமாகவே சோயா மொச்சையின் தேவைக்கு நாம் பிற நாடுகளை எதிர்பார்த்திருக்க வேண்டிய அவல நிலையில் இருக்கிறோம்.



**ரூபாய் 35 இலட்சம் மதிப்புள்ள சோயா மொச்சை, ஆண்டுதோறும் சோவியத் யூனியனிலிருந்து இந்தியாவின் பென்சிலின் போன்ற தடுப்பு மருந்துத் தொழிற்சாலைகளுக்காக இறக்குமதி செய்யப்படுகிறது. அண்மையில் நடத்தப்பெற்றசோதனைகளிலிருந்து, இந்தியாவில் விளையும் சோயா மொச்சையை, ஒரு தனிச் சிகிச்சை செய்த பின்பு, பென்சிலின் போன்ற தடுப்பு மருந்து தயாரிக்கப் பயன்படுத்தலாம் என்பது தெரிய வந்துள்ளது.**

தற்பொழுது இந்தியாவில் மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாகவும், தொழிற்சாலைகளின் தேவை நாளும் பெருகுவதாலும் தாவர எண்ணெய் (Vegetable Oil) பற்றுக்குறை நிலவுகிறது. இப் பற்றுக்குறையைப் போக்க இந்திய அரசு, வெளி நாடுகளிலிருந்து சோயா மொச்சை எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் ஆகியவைகளைப் பெருமளவில் இறக்குமதி செய்து வருகிறது. 1966—67 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் 1970-ஆம் ஆண்டுவரை 59.54 கோடி ரூபாய் மதிப்புள்ள எண்ணெய் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

சமீப காலத்தில் இந்திய வனஸ்பதி தொழிற்சாலைகளுக்காக ஆண்டுதோறும் ஏறத்தாழ 1,00,000 மெட்ரிக் டன் சோயா மொச்சை எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

'பென்சிலின்', 'ஸ்ட்ரெப்டோமைசின்' போன்ற நோய் தடுப்பு மருந்துகள் (Antibiotics) தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்காக ரஷியா மற்றும் இதர வெளிநாடுகளிலிருந்து ஆண்டுதோறும் சற்றேறக்குறைய 12,000 மெட்ரிக் டன் சோயா மொச்சை விதைகளை இறக்குமதி செய்து வருகிறோம்.

இவ்வாறு சோயாமொச்சை எண்ணெய், சோயா மொச்சை விதை அல்லது சோயா மொச்சை மாவு ஆகியவைகளை இறக்குமதி செய்வதற்காக, பலகோடி ரூபாய் அந்நியச் செலாவணியை இந்தியா இழந்து வருகிறது. அத்துடன் சோயாமொச்சையின் தேவைக்கு, முழுக்க முழுக்க வெளிநாடுகளையே நம்பி இருக்க வேண்டிய இக்கட்டான நிலையில் இந்தியா இருக்கிறது. எனவே

இறக்குமதியைத் தவிர்ப்பதற்காகவும், இறக்குமதி மூலமாகப் பாழாகும் அந்நியச் செலாவணியை மீதப்படுத்துவதற்காகவும் இந்திய அரசு சோயா மொச்சை, சூரிய காந்தி ஆகிய புதிய பயிர்களை இந்தியாவில் பரப்பிடப் பெருமுயற்சி மேற்கொண்டு வருகிறது. 1973—74-ஆம் ஆண்டிற்குள் 4,00,000 ஹெக்டேர் நிலப் பரப்பில் சோயா மொச்சையைப் பயிரிட இந்திய அரசு திட்டமிட்டுள்ளது.

### அதிசயத் தங்க மொச்சை!

சோயா மொச்சையை, இருபதாம் நூற்றாண்டின் 'அதிசயத் தங்க மொச்சை' (Miracle Golden Beans) என்று கூறப்படுகிறது. சோயா மொச்சையில் உள்ள அதிசயம் என்னவென்றால், இதில் உள்ள எண்ணெய், புரதச் சத்து, ஆகியவைகளின் தரம் உயர்ந்ததாக இருப்பதுடன், சோயா மொச்சை எண்ணெய் ஆயிரக்கணக்கான வழிகளில் பயன்படுகிறது; சோயா மொச்சையில் உள்ள புரதச் சத்து, உலகெங்கணும் உள்ள கோடிக் கணக்கான மக்களின் வாழ்வை வளமாக்குகிறது.

இந்தியாவில் புரதச்சத்துப் பற்றாக்குறை நிலவுகிறது. இதைப் போக்க, புரதச்சத்து மிக்க வேளாண்மை விளை பொருள்களின் மகசூலைப் பெருக்குவதுடன், புரதச்சத்தின் தேவையை ஈடுசெய்ய மாற்று உணவுப் பொருள்களை (Substitutes in food) உற்பத்தி செய்ய வேண்டியதும் மிகவும் இன்றியமையாததாகும். இப்பெரும் பணிக்குச் சோயா மொச்சை உறுதுணையாக அமையும் என்பது திண்ணம்.

மேலை நாடுகளில் பால் பெருமளவில் கிடைக்கிறது. ஒவ்வொரு வேளை உணவின் போதும், பாலைப் பல்வேறு வகையில் மேலை நாட்டினர் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் கீழ்த் திசை நாடுகளில் அதுவும் குறிப்பாக இந்தியாவில் போதுமான அளவு பால்கிடைக்கவில்லை. அதன் காரணமாகவே இந்தியாவில் வாழும் பெரும்பாலான மக்கள் ஊட்டச் சத்துக் குறைவினால் வலிவு குன்றி, நலிவுற்று வாழுகிறார்கள். எனவே, உடனடியாக இந்தியாவில் பாலுக்குப் பதிலாக ஒரு மாற்றுணவு காண வேண்டியது மிகவும் விரைவாக மேற்கொள்ள வேண்டிய முக்கிய பணியாகும். சோயா மொச்சையிலிருந்து தயாரிக்கப்படும் பால், கீழ்த் திசை நாடுகளின் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. சுவையின் அடிப்படையிலும், சத்தின் அடிப்படையிலும் சோயா பால் மனித இனத்திற்கு மிகவும் ஏற்றதாக விளங்குகிறது. உணவுச் சத்து அடிப்படையில் சோயாபால் தாய்ப்பாலுக்குச் சமமானது. சோயா பாலில் குழந்தையின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா மூலகங்களும் அடங்கியுள்ளன. குழந்தையால் எளிதில் செறிக்கப்படுவதற்கு ஏற்றதாக சோயாபால் அமைந்துள்ளது. சோயா பால், உடல்வளர்ச்சிக்குத் தேவையான புரதம், தாது உப்புகள், உயிர்ச் சத்துகள் (Vitamins) ஆகியவற்றை அளித்து, காப்புத்துணை உணவாக (Protective food supplement) விளங்குகிறது.

வாலிபத்திற்கேற்ற நல்ல செழிப்பான உடலை வளர்ப்பதே, வாழ்நாளைக் குறைக்கும் இளமை முதிர்ச்சி, உடலை அழிக்கும் நோய் ஆகியவற்றிற்கு எதிராக நாம் ஏற்படுத்திக்கொள்ளும் மாபெரும் தற்காப்பு ஆகும். இத் தற்காப்பினை நமக்கு நாமே ஏற்படுத்திக்கொள்ள, இந்தியர் அனைவரும் எவ்வகையிலாவது சோயா மொச்சையை அன்றாட உணவில் உபயோகிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.



எனக்கு நிகர் எந்தத் தானியமும் கிடையாது

சோயா மொச்சை ஒரு எண்ணெய் வித்தாக (Oil Seed) வகைப்படுத்தப்பட்டுள்ள போதிலும், எல்லா வகையான காய்கறி புரதச் சத்துக்கும் (Vegetable protein) மேலான, உயர்தரமான புரதச் சத்து மிகுந்த உணவுப் பொருளாகவும் மதிக்கப்படுகிறது.

சோயா மாவில் உயர்ந்த தரமான புரதச் சத்து உள்ளதுடன், மற்றெல்லா எண்ணெய் வித்துக்களையும் விடக் குறைந்த அளவு நார்ப் பொருள்களைக் (Fibre) கொண்டுள்ளது. இதனால் சோயா மாவு, எளிதாகச் செறிக்கக் கூடியது. சோயா மாவில் 78.4 சத அளவுக்குச் செறிக்கப்படக் கூடிய ஊட்டச் சத்துள்ளது. மற்றெல்லாத் தானியங்களிலும் உள்ளதை விட, சோயா மாவில் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாத 'பான்டோதீனிக் அமிலம்' ( Pantothenic Acid ) 'ரிபோபிளேவின்' ( Riboflavin ) ஆகியவை அடங்கியுள்ளன. அதுபோலவே மற்றெல்லாத் தானியங்களிலும் உள்ள அளவுக்குச் சமமாக, உடல் வளர்ச்சிக்குத் தேவையான 'நியாசின்' (Niacin) 'தையாமின்' ( Thiamine ) ஆகியவை சோயா மாவில் உள்ளன. சோயா மாவு மனித இனத்திற்கு மட்டுமல்ல, கால்நடைகளுக்கும், கோழியினங்களுக்கும் மட்டுமல்ல, குதிரைகளுக்கும் சிறந்த உணவாகும்.

பொதுவாக புரதச்சத்தை விலங்கின புரதச்சத்து ( Animal protein ), தாவர புரதச் சத்து ( Vegetable protein ) என இருவகையாகப் பிரிக்கப்படுகிறது. விலங்குகளிலிருந்து

**உடல் நலம் செழிக்கவும்**
**தொழில் வளம் பெருக்கவும்**
**உதவிடும் சோயா மொச்சை**



உடல் பருத்து விட்டது என்ற கவலை வேண்டாம்

கிடைக்கும் புரதச் சத்தே முழுமையானதாக (complete) உள்ளது. தாவரங்களிலிருந்து கிடைக்கும் புரதச்சத்து பொதுவாக முழுமையற்றதாக (In-complete) இருக்கிறது. ஆனால், சோயா மொச்சையில் உள்ள புரதச்சத்து, தாவர அடிப்படையானதே ஆயினும், அது பெரும்பாலும் விலங்குகள் புரதச் சத்துக்கு ஒப்பானதாக உள்ளது.

### கிளைகளில் வளரும் இறைச்சி!

மக்கள் அல்லது மாக்களின் உணவில் இன்றியமையாததாக இருக்கவேண்டிய அமினோ அமிலங்கள் (Amino acids) உச்ச அளவாக சோயா மொச்சையில் உள்ளது என்பது இரசாயனப் பகுப்பாய்வின் மூலம் தெரிய வருகிறது. இதிலிருந்து அதிகப்படியான காலத்திற்கு உயிர் வாழ வைக்க வல்ல முழுமையான உணவு, சோயா மொச்சையே என்பது புலனாகின்றது.

தாவரப் புரதச்சத்துப் பெறச் சிறந்த ஆதாரமாகத் திகழ்வது சோயா மொச்சையே! எனவே சோயா மொச்சையைக் 'கிளைகளில் வளரும் இறைச்சி' (Meat that grows on wines) என்று கீழ்த்திசை நாடுகளில் விந்தையாகக் கூறப்படுகிறது.

### எலும்பில்லா இறைச்சி!

ஆசிய மக்கள், சோயா மொச்சையிலிருந்து எடுத்த பால், பாற் கட்டி ஆகியவைகளையும், சோயா மொச்சைக் கலந்த ரொட்டி, சாஸ், எண்ணெய் ஆகியவைகளைப் பெரும் அளவில் பயன்படுத்துகின்றார்கள். எனவேதான், ஆசிய மக்கள் சோயா மொச்சையை 'எலும்பில்லா இறைச்சி!' (Meat without bones) என்று குறிப்பிடுகின்றார்கள்.

### சோயா மொச்சையில் உள்ள சத்துக்கள்

சோயா மொச்சையில் ஊட்டச் சத்துக்கள் செறிந்துள்ளன. ஊட்டச்சத்துக்களைப் பெற்றிருப்பதில் சோயா மொச்சைக்கு இணையாக வேறெந்தத் தானியமும் இருப்பதாகத் தெரியவில்லை. 100 கிராம் சோயா மொச்சையில் கீழ்க்கண்ட அளவு ஊட்டச்சத்துக்கள் உள்ளன.

புரதச்சத்து—43.20 கிராம்.
கொழுப்புச்சத்து—19.50 கிராம்
மாவுப்பொருள்—20.90 கிராம்.
சுண்ணாம்புச் சத்து—0.24 கிராம்
பாஸ்பரஸ் சத்து—0.69 கிராம்.
இரும்புச் சத்து—11.50 மில்லி கிராம்.

சக்தி—432 கலோரிகள்.

உயிர்ச்சத்து-'ஏ'—710 ஐ.யு.(I.U.) (Vitamin.A.)

உயிர்ச்சத்து-'பி. 1'—0.73 (Vitamin.B.1.) மில்லி கிராம்

உயிர்ச்சத்து-'பி. 2'—0.76 (Vitamin.B. 2.) மில்லி கிராம்

நிக்கோட்டினிக் அமிலம்—2.40 மில்லி கிராம்.

சோயா மொச்சையில் உள்ளதைப் போல் மற்றெந்தத் தானியங்களிலும் மேற்கண்ட அளவில் ஊட்டச் சத்துக்கள் செறிந்து காணப்படவில்லை. சோயா மொச்சையை முளைக்க வைக்கும் போது உயிர்ச்சத்து-'சி' மிகுந்து காணப்படுகிறது.

சோயா மொச்சையில் மாவுப் பொருள்கள் (Carbohydrates) குறைந்த அளவில் இருப்பதால், நீரிழிவு (Diabetes) நோயினால் அவதிப்படுவோருக்கும், அதிகப் பருமனாகி விட்டோம் என்று கவலைப் படுவோருக்கும், ஊட்டச் சத்து மிக்க உணவு தேவைப்படுவோருக்கும் சோயா மொச்சை மிகவும் பயனளிக்கக் கூடியதாகும்.

ஒரே சம எடையுள்ள சோயா மொச்சை, இறைச்சி, பாற்கட்டி, மீன், முட்டைகள், கோதுமை முதலிய இதர தானியங்கள், ரொட்டி, பால், ஆகியவைகளை எடுத்துக்கொண்டு அவைகளிலுள்ள புரதச்சத்தைக் கணக்கிட்டால், சோயா மொச்சையில் பின்கண்ட அளவில் புரதச்சத்து அதிகமாக இருப்பது தெரிய வருகிறது.

இறைச்சியில் உள்ளதைவிட 2 மடங்கு.

பாற்கட்டியைவிட 2 மடங்கு.
மீனைவிட 2 முதல் 3 மடங்கு.
முட்டைகளைவிட 4 மடங்கு.
கோதுமை முதலிய இதர தானியங்களைவிட 4 மடங்கு.

ரொட்டியில் உள்ளதைவிட 5 முதல் 6 மடங்கு.

பாலைவிட 12 மடங்கு.

ஒரு பவுண்டு (454 கிராம்) சோயா மொச்சை மாவில் உள்ள புரதச்சத்து 2½ பவுண்டு இறைச்சி அல்லது 54 முட்டைகள் அல்லது 2 காலன் பாலில் உள்ள புரதச்சத்துக்குச் சமமாகும். ஒரு பவுண்டு சோயா மாவின் விலை, ஒரு பவுண்டு இறைச்சியின் விலையில் நான்கில் ஒரு பங்காகவே (கால்பாகம்) இருப்பதால், சோயா மாவினை இறைச்சிக்குப் பதிலாகப் பயன்படுத்தி, நலம் பெறலாம்.

### ஏழையின் இறைச்சி!

சோயா மொச்சை ஏழை எளிய மக்களின் வாழ்வை வளப்படுத்தவல்லதாக அமைந்துள்ளது. எனவேதான் சோயா மொச்சைக்கு 'ஏழையின் இறைச்சி '(Poor Man's Meat) என்ற பெயரும் ஏற்பட்டுள்ளது. குறைந்த செலவில் உடல் நலத்தை மேம்படுத்திக் கொள்ள, ஏழை எளிய சாதாரண மக்களுக்குக் கிடைத்துள்ள அரிய உணவாகச் சோயா மொச்சை விளங்குகிறது.

### சோயா மொச்சையன் பயன்கள்

நன்கு முதிர்ந்த சோயா மொச்சை விதைகளிலிருந்து தயாரிக்கப்படும் மாவைக் கொண்டு கீழ்க்கண்ட உணவுப் பொருள்களைத் தயாரிக்கலாம்.

' நூடில் ' (Noodles) எனப்படும் மக்கரோணி.


சூப் (Soup),

இனிப்புகள்,

பல பயன் உணவு (Multi-purpose food),



ஊட்டச் சத்தளிப்பதில் சோயா மொச்சைக்கு நிகர் இல்லை.



காஸ்நடைகளுக்கும் குதிரைகளுக்கும் கூட ஏற்றது சோயா மொச்சை.

இறைச்சிக்கு மாற்றுப் பொருள்கள் (Meat substitutes),

சோயா பால்,

தயிர்,

பாற்கட்டி,

ரொட்டி, 'சாஸ்' (Sauce)

மற்றும் பல்வேறு உணவு கள்.

சோயா மொச்சை எண்ணெய் மற்றும் அதன் இதர தயாரிப்பு கள் சமைப்பதற்குரிய கொழுப் புப் பொருகள்(Cooking fats), மார் கரின் (Margarin) போன்றவைக ளாக உபயோகப்படுவதுடன், பின் கண்ட பொருள்கள் தயாரிக்கவும் பயன்படுகின்றன.

'பெயிண்டு'கள்,

'பிளாஸ்டிக்',

'லினோலியம்',

செயற்கை ரப்பர்,

ஐஸ்கிரீம் பவுடர்,

சோப்புகள்,

'குளு', (Glue),

'பீர்'

வழவழப்பாகும் கிரீஸ்,

இரசாயன உரம்,

தொற்றுநோய்த் தடுப்பு மருந்துகள் (Disinfectants)

எண்ணெய்த் துணிகள்,

அச்சிடும் மைகள்,

தண்ணீர் உட்செல்லாத துணிகள்,

மருந்து எண்ணெய்கள்,

தண்ணீரால் கெடாத சிமெண்டு,

துணி நெய்வதற்கான நூல்கள்,

மற்றும் அநேக பொருள் கள்.

சோயா மொச்சையின் இளங் காய்களில், பெரும்பாலான காய்கறிகளில் உள்ளதைவிட, புரதம், சுண்ணும்பு, பாஸ்பரஸ், இரும்பு, கலோரி ஆகியவை நிறைந்து காணப்படுவதால், அவைகளைக் காய்கறிகளாகப் பயன்படுத்தலாம். இளங் காய்களைக் காய்கறிகளைப்போல் சமைத்தால் எல்லாத்தரத்தினரு க்கும் ஏற்ற சுவையான, ஊட்டச் சத்து மிக்க உணவாக அமையும்.

சோயா மொச்சையின் விதை களை முளைக்க வைத்து உண்ண லாம். அதில் உயிர்ச்சத்து—சி மிகுதியாகக் காணப்படுகிறது. சோயாமொச்சையின் விதை களைத் தண்ணீரில் ஊற வைத்து எடுத்து, மசாலாத் தூளுடன் கலந்து வறுத்துச் சாப்பிடலாம். இதைப் பெரும்பாலோர் பெரி தும் விரும்புகின்றூர்கள்.

சோயா மொச்சையில் உள்ள ஒரே ஒரு குறை என்னவென் றல், அதிலிருந்து எழும் ஒரு வகை வாடையை மக்கள் விரும்புவதில்லை. இதன் காரண மாகவே சோயா மொச்சை இந்தியாவில் பெருமளவில் பரவ வில்லை. 'சோயா மொச்சையை முளைக்க வைத்து உண்ணும் பொழுது இவ்வாடை தெரிவ தில்லை. சோயா மாவைத் தனி யாக உணவுப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுத்தாமல், இதர தானிய மாவுகளுடன் கலந்து உணவுப் பொருள்களா கத் தயாரித்தால், சோயா மொச் சைக்கே உரியவாடை தெரியாது.

மேலும், சோயா மொச்சை ஊட்டச்சத்து நிறைந்த உணவுத் தானியமாக இருப்பதால்— பொதுவாக மனித உணவுக்காக இருப்பினும் சரி, அல்லது கால் நடைத் தீனிக்காக இருப்பினும் சரி—மற்ற உணவுத் தானியங்க ளுடன் சோயா மொச்சைத் தயாரிப்புகளைக் கலந்து உப யோகிக்குமாறு பரிந்துரைக்கப் படுகிறது.

சப்பாத்தி, ரொட்டி போன்ற தயாரிப்புகளுக்கு 2 அல்லது 3 பங்கு வழக்கமாகப் பயன் படுத்தும் மாவையும், ஒரு பங்கு சோயா மொச்சை மாவையும், பயன்படுத்தினல், அவை வெகு சுவையாக இருப்பதுடன், ஊட்டச்சத்து மிகுந்ததாகவும் இருக்கும்.

கோதுமை மாவிலிருந்து தயா ரிக்கப்படும் ரொட்டியில் 12 சத புரதச்சத்து மட்டுமே உள்ளது. ஆனுல் ஒரு பங்கு சோயா மொச்சை மாவையும், 3 பங்கு கோதுமை மாவையும் சேர்த்து ரொட்டி தயாரித்தால், ரொட்டியில் உள்ள புரதச்சத்து 20 சதமாக உயருகிறது. அது போலவே, ரொட்டியில் உள்ள சுண்ணும்பு, பாஸ்பரஸ், இரும்பு, உயிர்ச்சத்து—'ஏ' உயிர்ச் சத்து—'பி' ஆகிய சத்துக் களும், அதிகமாகின்றன. கோதுமை மாவினல் தயாரிக்கப் பட்ட 100 கிராம் ரொட்டியில்

## சோயா மொச்சை

கி.மு. 2838-ஆம் ஆண்டில் சைனுவை ஆண்ட அரசன், வெகு தொலைவில் இருந்த வணிகன் ஒருவனிடம் ஒப்படைக்குமாறு கூறி விலை மதிக்க முடியாத பொருள்களைத் தன்னுடைய பணியாட்கள் மூலம் அனுப்பி வைத்தான். அரசன் கொடுத்த விலைமதிக்க முடி யாத பொருள்களை எடுத்துக்கொண்டு, தகுந்த பாதுகாப்புடன் அப் பணியாட்கள் ஒரு கணவாய் வழியே சென்று கொண்டிருந்த போது, கொள்ளைக்காரர்கள் அவர்களை வழி மறித்து, அவர்களிடம் இருந்த பொருள்களையும், அவைகளைச் சுமந்து சென்ற விலங்குகளையும், அவர் கள் வைத்திருந்த அரிசி, கருவாடு ஆகிய உணவுப் பொருள்களையும் பறித்துக் கொண்டனர்.

கொள்ளைக்காரர்களிடம் எல்லாவற்றையும் பறிகொடுத்த பணியாட் கள் திரும்பி வந்து அரசனிடம் நடந்தவற்றைக் கூறினர்கள். அப் பொழுது அவர்களுடைய ஆடைகள் கிழிந்து கந்தல்களாகக் காணப் பட்டன. ஆனுல் பயணம் துவங்கியபொழுது இருந்ததைவிடப், பொருள்களைப் பறி கொடுத்துவிட்டு திரும்பி வந்த பொழுது, பணி யாட்கள் நல்ல உடல்வாகுடன் காணப்பட்டதால், அவர்கள் கூறியதை அரசனும், அமைச்சர்களும் நம்பவில்லை.

"அடிமைகளே! உண்மையைச் சொல்லுங்கள்! உங்க ளுடைய முகம் வட்ட நிலாவைப்போல் வடிவழகுடன் காணப்படு கிறது! நீங்கள் வெண்ணெய் கலந்த தேநீர் சாப்பிட்டவர்களைப் போல் காணப்படுகின்றீர்கள்! வேட்டையாடுவதற்குக் கூட உங்களிடம் கருவி இல்லாத பொழுது எப்படி உங்களுக்கு உணவு கிடைத்தது?" என்று அரசன் அதட்டினுன்.

355 கலோரி சக்தி மட்டுமே நமக்குக் கிடைக்கிறது. 3 பங்கு கோதுமை மாவுடன், 1 பங்கு சோயா மொச்சை மாவைக் கலந்து தயாரிக்கப்பட்ட 100 கிராம் ரொட்டியில் 374 கலோரி சக்தி கிட்டுகிறது. எனவே, நாம் வழக்கமாகப் பயன் படுத்தும் மாவுடன், சோயா மாவைக் கலந்து உணவு தயாரித்து உண்பதே, சோயா மொச்சையைப் பழக்கத்திற்குக் கொண்டு வருவதற்கு அடிப்படை வழியாகும்.

### கால்நடைகளுக்கும் ஏற்ற தீவனம்!

சோயா மொச்சை விதைகளை உடைத்து பொடியாக்கி தீனியுடன் கலந்துக் கறவை மாடுகளுக்குக் கொடுத்தால் பால் அதிகமாகக் கிடைக்கும், சோயா மொச்சையின் பிண்ணுக்கில் நல்ல சத்து இருப்பதால், இது கால்நடைகளுக்குச் சிறந்த தீவனமாக அமைகிறது.

சோயா செடிகளைப் பால்மாடுகளுக்குக் கொடுத்தால், அவைகள் ஊட்டம் பெறுவதுடன், அதிக பாலையும் கொடுக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கால்நடை, மற்றும் கோழியினங்களின் தீவனத்திற்காகவே பெரும்பகுதியில் சோயா மொச்சை பயிரிடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சோயா மாவை வேக வைத்து, சுண்ணும்புச் சத்து, (கால்சியம்), 'ரிபோபிளேவின்' ஆகிய சத்துக்களைச் சேர்த்தால் கோழிகளுக்குத் தேவையான சமநிலைத் தீவினம் கிடைக்கும். வளரும் கோழிக் குஞ்சுகளுக்குச் சோயா மாவு புரதச்சத்து மிகுந்த தனி உணவாகும். சோயா மாவைக் கோழிகளுக்குக் கொடுத்தால், கோழிகளின் முட்டையிடும் காலம் நீடிப்பதுடன், அதிகமான முட்டைகள் கிடைக்கும். இறைச்சிக்காக வளர்க்கும் கோழிகளுக்குச் சோயா மொச்சைக் கலந்த தீனி கொடுத்தால் அதிக அளவு இறைச்சி கிடைக்கும். சோயா மொச்சை மாவினை கோழிகளுக்குப் பயன்படுத்தினுல், கோழி வளர்ப்பவர்களுக்கு மிகுந்த செலவு குறைவதுடன், குறைந்த செலவில் முட்டைகள் அல்லது இறைச்சி கிடைக்கிறது. இதனுல், அவைகள், நுகர்வோருக்கும் (Consumers) குறைந்த செலவில் கிடைக்கின்றன. கோழி வளர்ப்போரின் ஆண்டு இலாபமும் கூடுகிறது.

மாவாக அரைப்பதற்குச் சோயா மொச்சை விதையின் மேலே மூடிய தோலை அகற்ற வேண்டியது அவசியமில்லை.

சோயா மொச்சை ஊட்டச் சத்துள்ள உணவையும், எண்ணெய்யையும் அளிப்பதுடன், பின்கண்ட சிறப்பியல்புகளையும் கொண்டுள்ளது.



[கவலையைப் போக்கும் அருமருந்து சோயா மொச்சை]

சோயா மொச்சை மற்ற பயிர்களைவிட மிகவும் நம்பகமான பயிராக உள்ளது. இந்தியாவில் வறட்சி, அதிக மழை அல்லது பருவம் தவிர்த்த மழை ஆகியவை அடிக்கடி பயிர்களை முழு அளவில் அல்லது ஒரு பகுதியைக் கெடுத்து விடுகின்றன. ஆனுல் அவைகளாலும் சோயா மொச்சைக்குப் பெரும் தீங்கு ஏற்படுவதில்லை. எனவே, இதை வறட்சியைத் தாங்கும் புரட்சிகரமான பயிர் என்று கூறுவதில் தவறில்லை!

### சிக்கனமான பயிர்!

சோயா மொச்சையின் பெரும்பாலான ரகங்கள் 3 அல்லது 4 மாதங்களில் அறுவடைக்கு வந்து விடுகின்றன. சோயா மொச்சை சாகுபடிக்காகும் செலவும் குறைவு. மத்திய இந்தியாவில் சோயா மொச்சைப் பயிரிட ஏக்கருக்கு ரூ. 31·50 மட்டுமே செலவாகிறது. அதே அளவு நிலக் கடலை உற்பத்தி செய்ய ரூபாய் 85 செலவாகிறது. எனவே சோயா மொச்சையைக் குறைந்த செலவில் பயிரிடலாம். சோயா மொச்சைக் குறுகிய காலத்தில் பயனளிப்பதாலும், உள்ளூர் ரக சோளம், பருத்தி, பயறு ஆகியவைகளைக் காட்டிலும் 2 அல்லது 3 மாதங்களுக்கு முன்பாகவே அறுவடைக்கு வந்துவிடுவதாலும் நீண்ட நாட்களுக்குப் பயிர்களைப் பாதுகாப்பதற்கு ஏற்படும் செலவில், கணிசமான அளவையும் உழவர்கள் சிக்கனப்படுத்த இயலும்.

### அதிக மகசூல் அளிக்கும் அற்புதப் பயிர்!

இந்தியாவில் சாகுபடி செய்யப்பட்டு வரும் பெரும்பாலான முக்கிய பயிர்கள் கொடுக்கும் ஏக்கர் மகசூலைவிட, சோயா மொச்சை அதிக மகசூல் கொடுக்கவல்லது. சராசரி உழவர்கள் இந்தியாவில் மற்ற

## அறிமுகமான கதை

"நாங்கள் கடவுள் சாட்சியாக உண்மையைத்தான் சொல்கின்றோம்.' தரையில் தானுகவே முளைத்துப் படர்ந்து கிடந்த ஒருவகைச் செடியின் காய்களைத் தவிர, வேறெந்த உணவும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. 'பீச்' பழத்தின் மேல் காணப்படுவது போன்று, நுண்ணிய உரோமம் போன்ற ஒருவகைப் பொருள்கள் அச்செடிகளின் கிளைகளில் வளர்ந்திருந்தன. அச்செடிகளின் குறுகிய இலைகளுக்கும், அரசர் அணிந்திருக்கும் உடையில் பின்னப்பட்டிருக்கும் பூக்களைப் போன்ற சாம்பல்நிறப் பூக்களுக்கும் கீழே, கருமானின் உலைக்களத்தில் தெறிக்கும் நெருப்புப் போன்ற பொன்னிற விதைகள் நெருக்கமாகப் பொருந்திய காய்கள் காணப்பட்டன. அக்காய்களின் விதைகளைத் தின்றே எங்கள் வயிற்றை நிரப்பிக் கொண்டு நீண்ட தூரம் நடந்து வந்துள்ளோம்!" என்று அரசனின் பணியாட்கள் பயத்துடன் கூறினுர்கள்.

"நீங்கள் கூறுவதற்குச் சாட்சியாக அச்செடியின் விதைகளைக் கொண்டு வாருங்கள்!" என்று அரசன் ஆணையிட்டான்.

அரசன் ஆணைக் கிணங்கப் பணியாட்கள் அச்செடியின் விதைகளைக் கொண்டு வந்து அரசனிடம் காட்டித் தண்டனையிலிருந்து தப்பித்தனராம்.

இது ஒரு சீனத்துக் கதை. இக்கதையில் வரும் விந்தைச் செடி, சோயா மொச்சையே என்று வரலாறு கூறுகின்றது. இந் நிகழ்ச்சிக்குப் பிறகே, சோயா மொச்சை சைனுவின் ஐந்து புனித உணவுகளில் ஒன்ருக ஆகியதாம்.

தானியப் பயிர்களைச் சாகுபடி செய்து ஏக்கருக்கு 7 முதல் 20 மணங்குத்தானியமகசூலை பெற்று வருகின்றனர். ஆனால்அவர்களே, சோயா மொச்சைப் பயிரிட்டு, ஏக்கருக்கு 20முதல் 30 மணங்குத் தானிய மகசூல் பெற்றுள்ளனர். சோயா மொச்சை விதைகளுடன் 'பேக்டீரியல் கல்சர்' கலந்தும், தகுந்த இடைவெளி விட்டும் விதைத்தால் அதிக மகசூல் கிடைக்கும். அதிக மகசூல் அளிக்கும் அற்புதத் தன்மையைப் பெற்றிருப்பதால் சோயா மொச்சை பயிரிட்டு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைய முடியும்.

### மண்வளம் பெருக்கும் மகத்தான பயிர்!

சோயா மொச்சைக்குள்ள மகத்தான சக்திகளில் ஒன்று மண் வளம் பெருக்கும் சக்தியாகும். சோயா மொச்சை பயிரிடும் நிலத்தில் 'பேக்டீரியல் கல்சர்' தெளிப்பதனால், இப் பயிர் ஒரு ஹெக்டேர் நிலத்தில் 60 முதல் 80 கிலோ தழைச் சத்தை நிலைநிறுத்தி, அச் சத்தை அடுத்த பயிருக்குக் கிடைக்கச் செய்கிறது என்பது பல இடங்களில் நடத்தப்பெற்ற சோதனைகளின் மூலம் தெளிவாகியுள்ளது. இதனால் தழைச்சத்து தேவையில் 2 மடங்குச் சிக்கனப்படுத்த முடிகிறது. எனவே இரசா



[உடல் நலத்திற்கு ஏற்றது சோயா மொச்சை]

யன உரப்பற்றாக்குறை நிலவும் நாடுகளைச் சேர்ந்த உழவர்களுக்குச் சோயா மொச்சை ஓர் உற்ற நண்பனாக அமைந்துள்ளது. எனவே மண்வளம் பெருக, சோயா மொச்சையை அறுவடை செய்த பின் அடிக் கட்டைகளையும், அதன் வேர்களையும், செடிகளையும் மண்ணிலிருந்து அகற்றாமல் அப்படியே விட்டு விடுமாறு பரிந்துரைக்கப் படுகிறது.

### களைகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும்!

சோயா மொச்சையை விதைக்கும் பொழுது வரிசைக்கு வரிசையும், வரிசையில் விதைக்கு விதை தகுந்த இடைவெளி கொடுத்து விதைத்தால், 2 முறை களையெடுத்தபின், செடிகள் நன்கு வளர்ந்து பூமியை மூடிவிடுவதால் களைகளின் வளர்ச்சிக் கட்டுப் படுத்தப்படுகிறது. எனவே வளர்ந்த சோயா மொச்சையில் களையெடுக்க வேண்டிய அவசியமில்லை.

### இந்தியாவுக்குக் கிடைத்த தங்கம்!

விதர்ப்ப நாட்டிலுள்ள 'யோட்மால்' ( Yeotmal ) என்ற இடத்தில் 28 வகை சோயா மொச்சைகளைக் கொண்டு நடத்தப்பெற்ற சோதனைகளிலிருந்து, சோயா மொச்சையினை 'இந்தியாவுக்குக் கிடைத்த தங்கம்' ( Gold for India ) என்று கூறப்படுகிறது. இதைப் பயிரிட்டால் இந்திய கிராம மக்கள் சிக்கன முறையில் தங்கள் உணவின்

## ஊட்டச் சத்தளிப்பதில் உயர்ந்தது சோயா மொச்சையே

சோயாபீன்ஸ், மற்ற உணவு தானியங்களை விட ஊட்டச்சத்து மிகுந்தது என்பதைப் பின்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

[100 கிராம் எடையில் அடங்கியுள்ள சத்துக்கள்.]

| உணவு தானியத்தின் பெயர். | புரதச் சத்து (கிராம்). | கொழுப்புச் சத்து (கிராம்). | மாவுப் பொருள் (கிராம்). | சுண்ணாம்புச் சத்து (கிராம்). | பாஸ்பரஸ் சத்து (கிராம்). | இரும்புச் சத்து (மில்லி கிராம்). | கலோரிகள். |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| அரிசி (பச்சையாக அரைத்தது) | 6·90 | 0·70 | 79·20 | 0·01 | 0·11 | 1·00 | 348 |
| சோளம் | 10·40 | 1·90 | 74·00 | 0·03 | 0·28 | 6·20 | 355 |
| கம்பு | 11·60 | 5·00 | 67·01 | 0·05 | 0·35 | 8·80 | 360 |
| கோதுமை | 11·80 | 1·50 | 71·20 | 0·05 | 0·32 | 5·30 | 348 |
| துவரம் பருப்பு | 22·30 | 1·70 | 57·20 | 0·14 | 0·26 | 8·80 | 333 |
| மொச்சை | 24·90 | 0·80 | 60·10 | 0·06 | 0·45 | 2·00 | 347 |
| சோயா பீன்ஸ் | 43·20 | 19·50 | 20·90 | 0·24 | 0·69 | 11·50 | 432 |

மேற்கண்ட அட்டவணையிலிருந்து, மாவுப் பொருள் தவிர மற்றெல்லாச் சத்திலும் சோயா மொச்சையே மற்றத் தானியங்களை விட அதிக ஊட்டச் சத்துக்கள் கொண்டுள்ளது என்பது புலனாகின்றது.

தரத்தினையும், கால்நடைகளின் உற்பத்தித் திறனையும் உயர்த்திக் கொண்டு சீரோடும், சிறப்போடும், வளமோடும் வாழலாம்.

எனவே, கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொண்டு சோயா மொச்சை பயிரிட்டுப் பயனடையுமாறு தமிழ்நாட்டு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

சாகுபடி முறைகள்

தமிழ்நாட்டில் இறைவையாகவும், மானாவாரியாகவும் சாகுபடி செய்ய சோயா மொச்சை ஏற்றது. அதுவும் குறிப்பாக கோவை மாவட்டத்திற்கு மிகவும் ஏற்றது. இ.சி. 39821 என்ற சோயா மொச்சை ரகம் தமிழ் நாட்டிற்கு மிகவும் ஏற்றது. இதன் வயது 90 முதல் 100 நாட்களே.

மண்வளம்: பொதுவாக எல்லா வகையான மண்களும் சோயா மொச்சைக்கு ஏற்றது. ஆனால், களர், உவர் நிலங்களும், தண்ணீர் தேங்கும் நிலமும் ஏற்றதல்ல.

விதைக்கும் பருவம்: ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரையான காலமே விதைப்பதற்குச் சிறந்தது.

நிலம் தயாரித்தல்: நிலத்தை நன்குஉழுது, ஏக்கருக்கு 20வண்டி (10 டன்) தொழு எரு அல்லது கம்போஸ்ட் இட வேண்டும். நிலத்தில் பாத்திகள் அல்லது $1\frac{1}{2}$ அடிக்கு ஒரு பார் வீதம் அமைத்துக் கொள்ளவும்.

அடியுரம்: ஏக்கருக்கு 25 கிலோ தழைச்சத்து (125 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 56 கிலோ யூரியா), 50 கிலோ மணிச்சத்து (312.5 கிலோ சூப்பர் பாஸ்பேட்), 30 கிலோ சாம்பல் சத்து (50 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ்) ஆகியவைகளை கடைசி உழவில் அடியுரமாக இட வேண்டும்.

விதையளவு: ஏக்கருக்கு 35 கிலோ முதல் 45 கிலோ விதை தேவைப்படும்.

விதைத்தல்: சோயா மொச்சை விதையின் மேல் தோல் கெட்டியாக இருக்குமாதலின், விதைகளை மணலுடன் சேர்த்து, உரலில் இட்டு, இலேசாகக் குத்திய பிறகே விதைப்பது நல்லது. சோயா மொச்சைக்கு ஏற்ற 'பெக்டீரியல் கல்ச்சர்'களை வேளாண்மைத்துறையின் கிடங்குகளிலிருந்து பெற்று விதைகளுடன் கலந்து விதைத்தால் தான், மகசூல் அதிகமாகக் கிடைக்கும். 10 கிலோ விதைகளுக்கு 1 குடுவை 'பேக்டீரியல் கல்ச்சர்' வீதம் கலந்து விதைக்க வேண்டும். பேக்டீரியல் கல்ச்சர்' அடங்கிய குடுவையுடன் கொடுக்கப்படும் குறிப்பில் கண்டுள்ளவாறு முறைபடி கலந்து, உடனடியாக விதைத்துவிட வேண்டும். களிமண் நிலத்தில் ஒரு அங்குல ஆழத்திலும், செம்மண், மணல் முதலிய நிலத்தில் 2 அங்குலம் ஆழத்திலும் விதைகளை ஊன்ற வேண்டும்.



இடைவெளி: வரிசைக்கு வரிசை 1 அடியும், விதைக்கு விதை 2 அல்லது 3 அங்குலமும் விட்டு விதைப்பது சிறந்தது.

நீர்ப்பாசனம்: ஆரம்ப வளர்ச்சியின்போது சோயா மொச்சை வறட்சியைத் தாங்கிக் கொள்ளும். பூக்கும் தருணத்தில் வறட்சி நீடித்தால் காய்ப்புக் குறைந்துவிடக் கூடுமாதலின், பூக்கும் சமயத்திலும், அதற்குப் பிறகும் சற்று அதிக அளவு நீர் கட்ட வேண்டும். ஆனால் தண்ணீர் தேங்கி நிற்கக் கூடாது. அளவான நீர் கட்ட வேண்டும்.

> **வாடை இல்லாத சோயா மொச்சை!**
>
> உடலுக்கு இன்றியமையாத ஊட்டச் சத்துக்கள் மிகுந்திருப்பினும், சோயா மொச்சையில் உள்ள வாடை காரணமாகச் சோயா மொச்சையை இதுவரை இந்திய மக்கள் விரும்பவில்லை. இக்குறையைப் போக்கிடப் பந்த்நகரில் உள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகம், ஒரு புதிய சோயா மொச்சை ரகத்தைக் கண்டுபிடித்துள்ளது. இப்புதிய ரகத்தின் சுவை, கொண்டைக் கடலையின் (Bengal gram or Channa) சுவையை ஒத்துள்ளது. எனவே, இந்த ரகம் இந்திய மக்களால் விரும்பப்படும் என்பது உறுதி.

களையெடுத்தல்: இளம் செடிகளாக இருக்கும் பொழுது களை எடுத்து விட வேண்டும். பின்பு செடிகள் களைகளை வளர விடுவதில்லை.

பயிர்ப்பாதுகாப்பு: செதில் பூச்சி, பேன், தத்துப்பூச்சி, வெள்ளை ஈக்கள், செம்பேன்கள் ஆகியவை தாக்கினால் 'டைமெதோடு (ரோகார்) 30 சதவீதம் இ. சி. 0.03 சதவீதம் அல்லது தையோமெடான் (இகாடின்) 25 சதவீதம் இ.சி. 0.025 சதவீதம் மருந்தில் 100 மில்லி லிட்டர் எடுத்து, 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். அல்லது 100 மில்லி லிட்டர் பாஸ்பாமிடான் (டைமெக்ரான்) மருந்தை 200 லிட்டர் கலந்து தெளிக்கலாம்.

சிவப்புச் சிலந்திகள் காணப்பட்டால் 300 மில்லி லிட்டர் கார்போ பிளோதையான் (டிரைதியான்) 20 சதவீதம் இ.சி. 0.06 சத மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

இலைத் தின்னும் புழுக்கள் தாக்கினால் பாரத்தியான் 50 சதவீதம் இ.சி. 0.025 சதவீதம் மருந்தில் 100 மில்லி லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். அல்லது 100 மில்லி லிட்டர் மாலத்தியான் 50 சதவீதம் இ.சி. 0.05 சதவீதம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

சோயா மொச்சைக்கு என்ட்ரின், கார்பரில், டி.டி.டீ. மருந்து தெளிப்பதைக் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

ஏதேனும் நோய்கள் தோன்றினாலும் அல்லது வருமுன் காக்கவும் 'டைத்தேன்' மருந்து தெளிக்க வண்டும்.

அறுவடை: செடிகள் முதிர்ச்சி அடைந்தவுடன் இலைகள் பழுத்து உதிர்ந்துவிடும். காய்களின் நிறமும் பழுப்பாக மாறிவிடும். இந்நிலையில் செடிகளை அறுத்து, சற்று காய வைத்துத் தடி கொண்டு அடித்து விதைகளைப் பிரித்தெடுக்கலாம்.

மகசூல்: ஏக்கருக்கு 900 முதல் 1,200 கிலோ.

### நல்ல தொண்டு

ஊட்டச்சத்துக்களைப் பெற்றிருப்பதில் சோயா மொச்சைக்கு இணையாக வேறெந்த தானியமும் இருப்பதாகத் தெரியவில்லை! இன்று மனிதனுக்குத் தெரிந்த ஊட்டச்சத்து நிறைந்த, அடர்த்தியான உணவு சோயா மொச்சையே! சத்தற்ற உணவையும் சோயா மொச்சை சத்துள்ள உணவாக ஆக்குகிறது: நல்ல உணவையும் சிறந்த உணவாக மாற்றுகிறது. சோயா மொச்சையை உணவில் கலப்பதால் உண்பதில் ஆர்வமும் (Zest), பல்வேறு வகையும் (Variety) கிட்டுகிறது. அதிக பட்ச ஊட்டச்சத்து, அதிக மகசூல் ஆகியவைகளைக் குறைந்த செலவில் சோயா மொச்சை கொடுப்பதால், தமிழ்நாட்டு மக்களின் உடல் நலம் செழிப்படையவும், தமிழ்நாட்டு கால் நடைகளின் உற்பத்தித் திறனைப் பெருக்கவும், தமிழ்நாட்டின் தொழில் வளம் கொழிக்கவும் சோயா மொச்சையைப் பயிரிடும் முயற்சியில் ஈடுபடுமாறு தமிழ்நாட்டு உழவர் பெருமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம். இந்த விந்தைப் பயிரை தமிழ்நாட்டில் புகுத்தி மேம்படுத்திட நாம் எல்லா வகையான முயற்சிகளையும் எடுத்துக் கொள்வோமேயானால் அதுவே நாட்டிற்குச் செய்யும் நல்ல தொண்டு ஆக அமையும்.

ஆர். எம்.

## சோயா மொச்சை ஓர் அரிய மருந்து

சோயா மொச்சை ஊட்டச்சத்து மிக்க உணவாக விளங்குவதுடன், மனித இனத்தின் உடல் நலம் பேணும் அருமருந்தாகவும், பயன்பட வல்லது என்பது சைனாக்காரர்களின் நம்பிக்கை. அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளில் மேற்கொண்ட அறிவியல் ஆராய்ச்சியின் பயனாக, சைனாக்காரர்களின் நம்பிக்கையில் தவறு இல்லை என்பது உலகிற்குத் தெரியவந்துள்ளது.

கி.பி. 450-ஆம் ஆண்டில் சைனா மருத்துவ நூல் (Materia Medica) ஒன்றில், இருதயம், ஈரல், சிறுநீர்ச் சுரப்பிகள் (Kidneys), இரைப்பை, குடல் ஆகியவை சரியான முறையில் இயங்குவதற்குச் சோயா மொச்சையே சரியான சிறந்த மருந்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது !

சோயா மொச்சைக்கு மேலும் பல மருந்துக் குணங்களும் அமைந்துள்ளன.

மனித இனத்தின் மலச்சிக்கலைப் (Constipation) போக்கவும், நுரையீரலின் இயக்கத்தைத் தூண்டவும், உடலின் உட்சென்றுள்ள நஞ்சை (Poison) அகற்றவும், தோலில் உள்ள தூய்மையின்மையைப் போக்கித் தோலின் வனப்பைக் கூட்டவும், உரோமங்களின் வளர்ச்சியைத் தூண்டி நல்ல தோற்றத்தைக் கொடுக்கவும் சோயா மொச்சை உபயோகமாகிறது.

சோயா மொச்சைச் செடியின் புதிய பசுமையான இலைகளும் மருந்தாகப் பயன்படுகிறது. உடலின் எந்த பாகத்திலாவது நீர் சேர்ந்து விடுதலை (dropsical affections), இரைப்பை தொடர்பான கோளாறினால் ஏற்படும் காய்ச்சல் (Gastric fever), சிறுநீரகக் கோளாறு (Bladder trouble), முறையற்ற குருதியோட்டம், கண்புரை, இருதயம், ஈரல், சிறு நீர்ச்சுரப்பிகள், இரைப்பை முதலிய முக்கிய உறுப்புகளில் சுரக்கும் நீர்கள் முறையின்றிச் சுரத்தல் ஆகியவைகளை அகற்றும் அருமருந்தாகச் சோயா மொச்சையின் இலைகள் பயன்படுகின்றனவாம்.

மஞ்சள் நிற சோயா மொச்சை விதைகள் நுரையீரலின் சக்தியை அதிகப்படுத்தவும், உடலைப் பருக்க வைக்கவும், தோல் அமைப்பை அழகுபடுத்தவும், உடல் அமைப்பைக் குளிர்ச்சி பெறச் செய்யவும் பயன்படுத்தப்பட்டனவாம்.

நீண்டதூரப் பயணம் மேற்கொள்ளும் பொழுது குதிரைக்கு வலுவூட்டவும், அதன் நுரையீரல் சக்தி பெறவும் கருப்பு நிறச் சோயா மொச்சையைத் தீனியாகக் கொடுப்பது பழக்கமாக இருந்துள்ளது.

## பத்திரிகைத் தருமம்

டில்லியிலுள்ள ஒரு முக்கியமான செய்தித்தாள், வைசிராயினுடைய முடிவுகளையும், காங்கிரஸ் செயற் குழுவினரின் தீர்மானங்களையும் அவர்கள் வெளியிடுமுன் தானாகத் தெரிந்து வெளியிட முயன்றிருப்பதைக் காண வருத்தமாயிருக்கிறது; அந்தமாதிரி நடப்பது 'பத்திரிகா தருமத்திற்கு' இழுக்கு உண்டாக்குவதாகும்.

நானும் பல ஆண்டுகள் ஒரு செய்தித்தாளின் ஆசிரியனாக இருந்து வருகிறேன். அதனால் 'பத்திரிகா தருமம்' எப்படியிருக்க வேண்டுமென்று கூற எனக்கு உரிமையுண்டு.

வைசிராயும், காங்கிரஸ் தலைவரும் தங்கள் தீர்மானங்களைச் செய்தித் தாள்களுக்கு அனுப்புமுன் அங்குமிங்குமாகச் செய்திகளைச் சேகரித்து மக்களிடையே பரபரப்பு உண்டாக்குவதற்காக வெளியிடுவது, மறைந்திருந்து குத்துவதற்குச் சமமாகும். இப்படிச் செய்வது மக்களிடையே தவறான கருத்தை உண்டுபண்ணிக் காரியத்தைக் கெடுப்பதாக இருக்கிறது.

செய்தித்தாள் விற்பனையை அதிகரிப்பதற்காகவும், மின்னல் வேகத்தில் செய்திகளை வெளியிடுவதாகப் பேர் வாங்குவதற்காகவும் இத்தகைய தவறான முறையைப் பின்பற்றக் கூடாது.

— காந்தியடிகள்.

['ஹரிஜன்' 1-6-1947 இதழில்.]

# வெண்பாப் போட்டி

## 41. அண்ணல் வழியே அழகு

'' செய் அல்லால் செத்துமடி ''; ''சேரிமக்கள் சோதரரே;''
'' பொய்யாமை நெஞ்சில், புலனடக்கம்—மெய்வாழ்வில் ;
'' மண்ணில் உரிமைப்போர் மாவேள்வி '' என்றுரைக்கும்
அண்ணல் வழியே அழகு.

—சிவ. கிருட்டிணன், கணியூர்.

சத்தியத்தின் பாதைச் சமாதான வீதியில்
நித்தம் உழைப்பு நெடுநாட்கள்—தத்தளித்தும்
உண்மைவழி நேர்மை எனவுலகம் போற்றவைத்த
அண்ணல் வழியே அழகு.

—கா. கோதண்டம், சென்னை-35.

உண்மைக் கடவுள் ; உழைப்பு வழிபாடு ;
திண்மையே நோன்பு ; செயலாற்றும்—நுண்மையால்
எண்ணமீ டேற இனிய நெறிகாட்டும்
அண்ணல் வழியே அழகு.

—சாரதா ஆறுமுகம், இலப்பைக்குடிக்காடு.

முடியரசு போனதும் மூதறிஞர் எம்மான் !
குடியரசின் வித்திட்டார்; கோமான்—கொடியோனின்
குண்டுபட்டும் மன்னித்த் கொற்றவ னார்காந்தி
அண்ணல் வழியே அழகு.

—சு. கா. சுந்தரராசன், நாரைக்கிணறு.

அஞ்சுவதற் கஞ்சல் அடிமைதனைச் சாடுங்கால்
துஞ்சாமை, மாற்றான்முன் தூங்காமை—எஞ்சியநல்
மண்பொறுமை தண்ணமைதி மாந்தர்க்குக் காட்டியநம்
அண்ணல் வழியே அழகு.

—சோ. முத்துமாணிக்கம், பி.எஸ்சி., வேலூர்-7.

தூக்குக் கயிற்றுக்கும் துப்பாக்கிக் குண்டுக்கும்
தாக்கும் பகைவர்க்கும் தான்அஞ்சா(து)— ஊக்கமுடன்
எண்ணும் விடுதலையை ஈங்களித்த நம்காந்தி
அண்ணல் வழியே அழகு.

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

தோட்டாவைக் காட்டாமல் துப்பாக்கி நீட்டாமல்
நாட்டினார் நாட்டின் சுதந்தரத்தை—ஓட்டினார்
அந்நியரை அன்புவழி தான்நின்றே நம்காந்தி
அண்ணல் வழியே அழகு.

—சீனி. சௌந்தரராசன், திருக்கோயில்பத்து.

வாட்டும் வறுமையினால் வாழ்விழந்து பெற்றதாய்
நாட்டுரிமை இன்றி நலிந்தவர்க்(கு)— ஊட்டமுடன்
மண்ணின் விடுதலையை மாண்புடனே பெற்றளித்த
அண்ணல் வழியே அழகு.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

நண்ணார்க்கும் நல்வழியை நல்கிவிடும் நம்முதல்வர்
அண்ணா வழியில் அரசோச்சித்—திண்மையாய்க்
கண்ணில்லா ஏழைக்குக் கண்ணீயுந் தன்மையால்
அண்ணல் வழியே அழகு.

—கே. பரமசிவம், பி.எஸ்சி.,பி.டி., பழனி.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:—

திரு சிவ. கிருட்டிணன்,
1/32, அக்கிரகாரம், கணியூர் அஞ்சல்,
கோவை மாவட்டம்.

அன்பின் வடிவாய் அமைதிச் சுடரெனவே
என்பினையும் நாட்டிற்காய் ஈந்திட்டு—நன்மைதனை
எண்ணி எளியோர்க்கென் றின்னலுற்றே ஏற்றமிகும்
அண்ணல் வழியே அழகு.

—புலவர் நா. சோமசுந்தரம், வாணியம்பாடி.

' எண்ணம் செயலெல்லாம் என்றும்என் நாட்டிற்கே '
திண்ணம் ' திருநாடு சீர்பெறுமே—என்றுரைத்துக்
கண்ணும் சுதந்தரத்தைக் காண்பதற்கே தானுழைத்த
அண்ணல் வழியே அழகு.

—அழகாபுரி இளங்கோவன், அண்ணாமலை நகர்.

வன்முறையால் நம்முரிமை வாரா தெனக்கருதி
அன்புநெறி கொண்டே அகற்றினார்—அந்நியரை
எண்ணம் செயலாக்கி ஏற்றமுடன் நாம்வாழ
அண்ணல் வழியே அழகு.

—துரையன், கிருட்டிணாபுரம்.

'' போரிட்டுத் துஞ்சும் புரட்சிவழி தீதென்றே
போரில் அகிம்சைப் புதுவழியால்—பாரறிய
அன்னியனும் வெள்ளைய ராட்சிவெளி யேறென்ற
அண்ணல் வழியே அழகு.

—த. தனராசன், பி.ஏ., பி. அழகாபுரி.

பிச்சை எடுப்போரைப் பேணிநல் வாழ்வமைத்தே
இச்சையொடு கண்ணிழந்தோர் ஏற்றமுற—அச்சமின்றி
எண்ணிலாப் பேறுபெற ஏழ்மையை நீக்கிடவே
அண்ணல் வழியே அழகு.

—பழ. கந்தசாமி, சத்திரப்பட்டி.

எண்ணத்தால் பேச்சால் எழுத்தால் செயலால்நம்
அண்ணலாம் காந்தி அடிகளார்—கண்களுக்குள்
கண்மணிபோல் சத்தியத்தைக் காத்துநின்று வாழ்ந்துவந்தார்
அண்ணல் வழியே அழகு.

—வை. இரத்தினசாமி, தேத்தாக்குடி.

நாட்டிலுள்ள ஏழையின் நல்வாழ்வுக் காகத்தன்
வீட்டில் சுகத்தை விரும்பாது—பாட்டாளி
மண்ணில் உயர்ந்திட வாழ்வெல்லாம் அர்ப்பணித்த
அண்ணல் வழியே அழகு.

—நாராயணன், மீனாட்சிபுரம்.

தண்ணீரின் தண்மை தணலைத் தணிப்பதுபோல்
கண்ணீரும் கோபக் கனல்தீர்க்கும்—மண்ணுலகில்
உண்மை வழிநடந்தால் உண்டுவெற்றி யென்றுரைத்த
அண்ணல் வழியே அழகு.

—கு. பாலசுப்பிரமணியம், அருப்புக்கோட்டை.

ஏழ்மை அகன்றிடவு மில்லாமை ஏகிடவும்,
கீழ்மை யனைத்துமே கெட்டிடவும்—தாழ்வின்றி
எண்ணியன யெல்லா மிசைந்திடவும் நம்காந்தி
அண்ணல் வழியே அழகு.

—புலவர் சு. முத்துக்கருப்பன், நகரம்.

'' பாட்டுப் பெரும்புலவர் பாடிய நூலழகும்,
நாட்டில் அறஞ்செய்தோர் நல்லழகும்—கேட்டிடிலோ
மண்ணில் அழகல்ல ; மக்கட் குழைத்துயர்ந்த
அண்ணல் வழியே அழகு !''.

—புலவர் பரசுராமன், க. புதுக்கோட்டை.

உண்மை, பொறுமை, உளமார்ந்த நற்றூய்மை,
திண்மை யமைந்த செயல்திறமை—எண்மையுடன்
நண்ணலரும் போற்றும் நயவுரையும் கொண்டுநின்ற
அண்ணல் வழியே அழகு.

— நக்கீரன் நாச்சிமுத்து, தேனி.

பொன்னே கிடைத்தாலும் பொய்சொல்லா நன்னெஞ்சால்
இன்னல் பலவாழ்வில் ஏற்றமகான்—இன்னாசெய்
நண்ணாரும் வெட்க நலம்அவர்க்குக் காட்டும்நம்
அண்ணல் வழியே அழகு.

—சி. செள. கருப்பன், திருச்சி-15.

முல்லை வழியிலங்க முள்வழியை நாடுவதோ ?
தொல்லை அகற்றுகிற தூயவழி—நல்லணங்கே !
எண்ணம் சிறந்தவழி இன்பவழி அன்புவழி
அண்ணல் வழியே அழகு.

—புலவர் முத்துவேங்கடேசன், திருமயம்.

கன்னல் மொழியே கனிச்சுவையே, காலமெலாம்,
எண்ணில் துயரம் எவர்தரினும்—மன்னித்தே
எண்ணல் பிறர்நலமே ! என்றுயர்ந்த அண்ணாவாம்
அண்ணல் வழியே அழகு.

—புலவர் செ. வரதராசன், கள்ளக்குறிச்சி.

## வெண்பாப் போட்டி

எளியோர் நிலைபோக்க என்னவழி என்றால்
எளிமையாய் வாழ்வதே என்றார்—எளிமையாய்க்
கண்முன்னே வாழ்ந்துமே காட்டினார்! காந்தியாம்
அண்ணல் வழியே அழகு.

—மா. ஆறுமுகம், மலைப்பட்டு.

வேட்டுமுறை யால்வெற்றி வேட்டல் விரும்பவொணாக்
காட்டுமுறை யாமென்றே கைவிட்டு—நாட்டவர்க்குக்
கண்ணாம் அறநெறியைக் காட்டிக் கடைப்பிடித்த
அண்ணல் வழியே அழகு.

—க. இரத்தினம், தஞ்சை.

இருளில் அகல்விளக்காய் இன்னலில் பேரன்பாய்
மருளில் அருந்துணிவாய் வாய்த்தே—அருளென்னும்
கன்னல் மழைச்சாற்றைக் கண்ணால் பொழிந்திட்ட
அண்ணல் வழியே அழகு.

—த. ச. தவசிமணி. அருப்புக்கோட்டை.

வாய்மை யோடன்பு வற்றாப் பெருங்கருணைத்
தூய்மை நெறிநின்றே தொண்டாற்றி—ஓய்வின்றி
மண்ணகத்தே சண்டையிடும் மாந்தருக்குக் காந்தியாம்
அண்ணல் வழியே அழகு.

—த. ம. இராமசாமி, திருப்பத்தூர்.

அண்ணா நடந்தவழி ஆர்ப்பாட்ட மற்றவழி
கண்ணீர் துடைக்கும் கருணைவழி—பெண்ணுரிமை
சொன்னவழி ஆதிக்கக் கோடில்லா நேர்வழியாம்
அண்ணல் வழியே அழகு.

—புலவர் மு. சிக்கந்தர், பழனி.

அடுபகையைத் தூளாய் அகிம்சையினால் மாற்றிக்
கடுமொழியை இன்பக் கனிச்சொல்லால்—பொடியாக்கித்
தண்ணார் உழைப்பாலே தாழ்வகற்றி வாழ்வளித்த
அண்ணல் வழியே அழகு.

—கு. மருதமணி, அரக்கோணம்.

வள்ளுவனார் வாழ்க்கை வழிவகுத்துத் தந்தமைக்குத்
தெள்ளியதோர் சான்றாய்த் திகழ்ந்ததுடன்—உள்ளத்தில்
எண்ணும் கருத்துகளை ஏற்றிச் செயல்முடித்த
அண்ணல் வழியே அழகு,

—மணிவண்ணன், விழுப்புரம்.

கண்ணிழந்த மாந்தர்க்குக் கண்ணும் வறியவர்க்
கெண்ணரிய வீடும் எழுப்பித்துப்—பண்புடனே
அண்ணன் வழியினிலே ஆளும் திருவாரூர்
அண்ணல் வழியே அழகு.

—நாவரசு, விழுப்புரம்.

சாதி யொழித்துச் சமதர்ம மென்கின்ற
வேதஞ் சமைக்க விழைவோர்க்கு—மேதினியில்
எண்ணந் தனிலே இனிமை பயக்கின்ற
அண்ணல் வழியே அழகு.

—ப. சண்முகானந்தம், தே. காளிப்பாளையம்.

'' வாய்மையே வெல்லும்; வளம்குன்றும் தன்னலத்தில்
தோய்வின்றி யாரும் தொழில்புரிந்தால்—மாய்தலிலா
வண்ணம் வளமுற்று வாழ்திடலாம் '' என்றுரைத்த
அண்ணல் வழியே அழகு.

—எல். மல்லிகா, முணுகப்பட்டு.

' சத்தியமே தன்மூச்சாய்ச் சாந்தமே தன்உருவாய்
இத்தரையில் ஏழைக்கும் ஏழையாய்—நித்தமும்
எண்ணிச் செயலாற்றி என்பையும் ஈந்திட்ட
அண்ணல் வழியே அழகு.

—சாலத்தூரன், மொங்கநல்லாம் பாளையம்.

கொல்லாமை நல்லறமும் கொள்கைவிடாச் சொல்லறமும்
எல்லாரும் ஒன்றெனும் இன்னுணர்வும்—வல்லமையால்
எண்ணிக் கொன்றார்க்கும் இன்னருளைச் செய்ததனால்
அண்ணல் வழியே அழகு.

—சிவகாமி கணேசன், காரைக்குடி,

அன்பின் வலிமையினால் ஆற்றல் பெருக்கெடுக்கத்
துன்பத் திரையின் துயர்மாயப்—பொன்போன்ற
மண்ணின் விடுதலையால் மாந்தர் நலங்காண
அண்ணல் வழியே அழகு.

—சோ. வேணுகோபாலன், சென்னை-39.

சொல்லும் செயலும் சொந்தமுறத் தான்நடந்து
வெல்லும் வழிகாட்டி வென்றவராம்—நல்லறஞ்செய்
எண்ணம் எளிமை இரக்கமொடு வாய்மைசேர்
அண்ணல் வழியே அழகு.

—நெற்குப்பை கதி. கணேசன், காரைக்குடி.

# வெண்பாப் போட்டி

'' வாய்மை ! அகிம்சை ! வழியில் நடந்துதுயர்
தாய்மை மனத்துடனே தாங்கிஉளத்—தூய்மையுடன்
இன்னல் விடுதலைக்காய் ஏற்றுயர் தொண்டுசெய்த
அண்ணல் வழியே அழகு .''

—வித்துவான் நெல்லை ஆ. கணபதி, சென்னை-15.

தீயவற்றைப் பாராமை தீயவற்றைக் கேளாமை
தீயவற்றைச் சொல்லாமை திட்டமுடன்—ஆயஇவை
திண்மையுறப் பூண்டு திகழ்ந்திருந்த நம்முடைய
அண்ணல் வழியே அழகு.

—ஒளிதிலகன், கரூர்.

அன்பு வழிமூலம் ஆற்றும் பணியெல்லாம்
பண்பு பெருக்கிப் பயனளிக்கும்—வன்முறையை
என்றும் ஒழித்துவிடல் ஏற்ற செயலென்ற
அண்ணல் வழியே அழகு.

—தி. பொன்னுச்சாமி, தூத்துக்குடி.

தோள்புடைத்து மார்துடித்துத் துள்ளிவந்து கையிலே
வாளெடுத்து வேல்பிடித்து மாய்ந்துகண்ட—தோல்வியால்,
அந்நிய ரோட்ட ''அகிம்சை'' நெறிசென்ற
அண்ணல் வழியே அழகு.

—வே. குருநாதன், மதுரை.

நாட்டின் நலம்காண நாமெல்லாம் நன்றாக
நாட்டம் செலுத்துவோம் நற்பணியில்—நாட்டோரின்
எண்ணம் நிறைந்திடவே எந்நாளும் சென்றிட நம்
அண்ணல் வழியே அழகு.

—எஸ். முருகேசன், ஆணையாம்பட்டி, சேலம்.

சாதி சமயத்தைச் சாய்க்கவந்த நல்லவழி
ஆதிக் குறளார் அறிந்தவழி—நீதிவழி
பின்னிக் கிடக்கும் பெருமைவழி எந்நாளும்
அண்ணல் வழியே அழகு.

—சீ. சக்குபாய், உடுமலை.

நாட்டு விடுதலையை நாமடைய நல்லவழி
காட்டி அமைந்த கருணைவழி—நீட்டுலகில்
எண்ணியெண்ணிப் பாராட்டும் ஏற்றமிகு நம்காந்தி
அண்ணல் வழியே அழகு.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலை.

துப்பாக்கி ஏந்தாமல் தோள்தட்டிப் போகாமல்
தப்பேதும் தம்வாழ்வில் தான்புரியா—இப்புவியில்
கண்போல் விடுதலையைக் காக்கும் நிலைதந்த
அண்ணல் வழியே அழகு.

—பாபநாசம் குறள்பித்தன், திருப்பாலத்துறை.

துப்பாக்கிக் குண்டேந்தித் தூளாக்கிப் போட்டுவிடும்
சிப்பாய்க்கு முன்னே திடமாக்கி—இப்போரில்
கண்ணீரும், செந்நீரும் காணா விடுதலைக்கு
அண்ணல் வழியே அழகு.

—கோவி. தமிழேந்தி, புலவன்காடு.

வன்முறைகள் செய்திங்கே வாழ்வமைக்க எண்ணாமல்
நன்முறைகள் தேர்ந்தே நலங்காண்க—இன்முறையாம்
மண்ணில் அகிம்சையே மாந்தருக்கு வேண்டுமென்ற
அண்ணல் வழியே அழகு.

—எஸ். சுந்தரம், வெண்பாவூர்.

எக்குலமும் ஓர்குலமாய் எம்மதமும் சம்மதமாய்
எக்காலும் ஏற்றிடவே இந்நாட்டில்—திக்கெல்லாம்
பண்புடனே ஓதிட்ட பாரதத்தின் தந்தையெனும்
அண்ணல் வழியே அழகு.

— பாக்கியமணாளன், மட்டப்பாரை.

கங்கைமுதல் கன்னிக் குமரிவரை ஒற்றுமை
பொங்கிப் புரளப் புதுமைசெய்வோம்—தங்கமே
மண்ணில் அதற்கு மகாத்மாவாம் காந்தியெனும்
அண்ணல் வழியே அழகு.

—முத்தமிழ்த்தாசன், சிறுகூடல்பட்டி.

இன்னல் விளைத்தார்க்கும் இன்பம் விளைந்திடவே
நன்னயம் செய்வதுதான் நம்வழியாம் !—எண்ணுங்கால்
மண்ணில் நலம்விளைய வன்முறையால் இல்லைபயன் !
அண்ணல் வழியே அழகு.

—சிவ. மு. சிவா, வேடசந்தூர்.

ஆண்டான் அடிமையெனும் அந்நிலை தானொழித்துத்
தீண்டாமைக் கொள்கையினைத் தீய்த்ததனால்—மூண்டெழும்
எண்ணிலாத் தீங்கெலாம் இல்லாமற் செய்திட்ட
அண்ணல் வழியே அழகு.

—கோ. ப. முருகநாதன், பி.ஏ., கோவை-22.

# முதல்வரின் கண் சிகிச்சை முகாம் நிதி

## நன்கொடை வழங்கியோர் பட்டியல்

| | ரூ. காசு |
|---|---|
| சென்ற இதழ்த் தொடர்ச்சி | |
| வணிக மின்கம்பி-ஆணிகள் தொழிற்கூடம், கதிரேசன் தொழிற்பேட்டை. | 201.00 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர். | 3,27,088.46 |
| செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர். | 55,726.00 |
| சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர். | 2,87,412.00 |
| ஏ. எம். எம். அறக்கட்டளை, சென்னை-1. | 17,500.00 |
| குடிசை மாற்றுவாரியத் தலைவர். | 176.00 |
| மதுரை மில்ஸ் .. .. | 3,000.00 |
| மைலம் ஊராட்சி ஒன்றியம் .. | 1,000.00 |
| திரு ஒ. கோவிந்தசாமி கலைக் கல்லூரி திறப்பு விழாவில். | 31.00 |
| கடலூரில் பெரியார் சிலை திறப்பு விழாவில். | 39.00 |
| திரு ஜே. கே. கே. சுந்தரம், சுந்தரம் நூற்பு ஆலை, குமாரபாளையம். | 7,145.00 |
| கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர். | 25,243.00 |
| திரு கருணாநிதிபுரம் குடியிருப்போர் நலசங்கம், சென்னை-61. | 15.00 |
| திரு எல். ஏ. லோகநாதன், தி.மு.க. புழுதிவாக்கம். | 5.00 |
| மதுரை தி.மு.க. மாநாட்டில் திரு எம்.ஜி. யாரிடம் வழங்கியது. | 10.01 |
| மின்வாரிய கணக்காயர் சங்கம், சென்னை-2. | 2,165.00 |
| டி. யு. சி. எஸ்., திருவல்லிக்கேணி | 1,001.00 |
| தக்கம்மாபேட்டை, தி.மு.க. | 2.00 |
| ஸ்டாண்டர்ட் பயர் ஒர்க்ஸ், நாகரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி. | 25.00 |
| மோகினி ஸ்டோர்ஸ், சென்னை-6. | 51.00 |
| கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6. | 1,168.00 |
| வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர். | 68.00 |
| சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர். | 94,557.00 |
| குமரி மாவட்ட ஆட்சித்தலைவர். | 8,072.00 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர். | 1,01,743.00 |
| அறநிலைய அமைச்சர் வழியாக. | 1,001.00 |
| செம்பனார்கோயில் வட்டார வளர்ச்சி அலுவலர். | 100.00 |
| திரு டி. ஜி. ரெங்கசாமி நாயுடு, ஸ்ரீராம்புரம். | 10.00 |
| திரு பாலசுந்தரம், குகைநல்லூர். | 10.00 |
| திரு கே. பி. சுப்பிரமணிய முதலியார், குகைநல்லூர். | 10.00 |
| திரு எஸ். இ. ராஜவேலு நாயுடு, ஸ்ரீராம்புரம். | 10.00 |
| திரு கே. எஸ். வடிவேலு முதலியார். | 10.00 |
| மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி, மதுரை. | 350.00 |
| திருப்புவனம், ஊராட்சி ஒன்றிய ஆணையர். | 4,000.00 |
| திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர். | 2,30,000.00 |
| ராதாபுரம் ஊராட்சி ஒன்றிய ஆணையர். | 492.00 |
| திரு ராமச்சந்திரன் | 25.00 |
| பொதுக் கூட்டத்தில் வரவு .. | 13.00 |
| முதல்வர், அறிஞர் அண்ணா கலைக்கல்லூரி, செய்யாறு. | 996.17 |
| மதுரை மில்ஸ், மதுரை-1 | 2,000.00 |
| முதல்வர், வி. வி. வன்னியப் பெருமாள் மகளிர் கல்லூரி, விருதுநகர். | 595.40 |
| மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர். | 3,13,058.00 |
| குமரி மாவட்ட ஆட்சித் தலைவர். | 20,752.50 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர். | 2,800.50 |
| வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு. | 500.00 |
| திரு வி. மாணிக்கம், மேற்கு தாம்பரம். | 10.00 |
| திரு கே. என். தண்டாயுதபாணி பிள்ளை, சென்னை. | 501.00 |
| தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர். | 65,794.50 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர். | 2,00,030.00 |
| செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர். | 22,431.00 |
| நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய ஆணையர். | 20.00 |
| கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர். | 200.00 |
| திருத்தணி எஸ். எஸ். அரசினர் கலைக்கல்லூரி. | 237.65 |
| இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர். | 94,517.50 |
| திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி. | 5,001.00 |
| காட்பாடி கூட்டுறவு நகரமைப்பு லிமிடெட். | 50.00 |
| நெல்லை, திருச்சி பொதுக் கூட்டங்களில் வசூல். | 110.00 |
| திரு என். எஸ். நடராஜ், சாராபாய் கெமிக்கல்ஸ், மைசூர். | 15.00 |
| திரு டி. என். பி. சாரதி ஊராட்சி ஒன்றிய மருந்தகம். | 25.00 |




**பலதரப்பட்ட பூச்சிகளிடமிருந்து உங்கள் பயிர்களை முழுமையாகப் பாதுகாக்கும் விரிவாற்றல் படைத்த (ப்ராட் ஸ்பெக்ட்ரம்) பூச்சிக்கொல்லியாகிய ஆம்பிதியான், தீங்கில்லாத பண்பும், திறமை குன்ருத நெடுநேர ஆற்றலும் ஒருங்கிணைந்தது.**

கிடைக்கும் ப்ராட்-ஸ்பெக்டரம் பூச்சிக் கொல்லிகளிலே ஒப்பற்ற வன்மை வாய்ந்தது ஆம்பிதியான்... கொல்லக் கடினமான எவ்வித முரட்டுப் பூச்சிகளையும் கொன்றுவிடக்கூடிய ஒன்றுதிரண்ட பேராற்றல் படைத்தது.

தீங்கு நேரும் வாய்ப்பு மிக மிகக் குறைவு ஆதலால் ஆம்பிதியான் மருந்தடிப் போருக்கு யாதொரு பிரச்சினையும் இராது; தவிர, இட்டு நெடுநேரம் ஆனபின்னும் மட்டற்ற வீரியமுடன் செயல்படும் ஆதலால், ஓயாமல் அடிக்கடி மருந்தடிக்கத் தேவையில்லை.

பணம, நேரம், சிரமம எல்லாமே மிச்சமாகும். பல நாடுகளில் பரிட்சிக்கப்பட்ட ஆமபிதியான், இலாபம்தரும் செழிப்பான பயிர் விளைச்சலுக்கு உறுதுணையெனப்பரிசோதிக்கப்பட்டு நிரூபணம்பெற்றபூச்சிக் கொல்லியாகும்.




CYANAMID

உலகெங்கும் விவசாயத்திற்கு ஊழியம் புரிந்துவருவோர்

அக்ரிகல்சரல் டிவிஷன்,
ஸயனமைட் இந்தியா லிமிடெட்
பி. ஓ. பாக்ஸ் நம்பர் 9109, பம்பாய் 25

அமெரிக்கன் ஸையனமைட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.



# கொய்தவை

திருச்சியை அடுத்த டால்மியாபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள இலவசக் கண் சிகிச்சை முகாமில், 10 மணி நேரத்தில் 1,208 கண் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன.

இவ்வளவு குறுகிய நேரத்தில் இத்தனை அறுவைச் சிகிச்சைகள் உலகத்தில் இது வரை எங்குமே செய்யப்பட்டதில்லை என்று கூறப்படுகிறது.

திருச்சியிலிருந்து 20 மைல் தொலைவிலுள்ளது டால்மியாபுரம். இங்குள்ள டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட் நிறுவனத்தினர் இலவசக் கண் சிகிச்சை முகாமிற்கு ஏற்பாடு செய்துள்ளனர். மதுரையைச் சேர்ந்த கண் டாக்டர் வெங்கடசாமியின் தலைமையில் 16 டாக்டர்கள் இந்த முகாமில் பணியாற்றுகின்றனர். அவர்கள் 10 மணி நேரத்தில் 1,208 அறுவைச் சிகிச்சைகளைச் செய்து முடித்தனர்.

இதற்கு முன்பு கோபிசெட்டி பாளையம் இலவசக் கண் சிகிச்சை முகாமில்தான், ஒரே நாளில் ஏறக்குறைய 961 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன.

* * *

நோயாளியின் இருதயம் சுருங்கி விரியும் இயக்கம், அவரது இரத்த அழுத்தம், நாடித் துடிப்பு ஆகிய எல்லாவற்றையும் துல்லியமாக அறிந்து கொள்ளப் புதிய சாதனம் ஒன்று பிரிட்டனில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தானியங்கு முறையில் வேலை செய்யும் இந்தச் சாதனம் மேற்கண்ட விவரங்களை அருகேயிருக்கும் 'டேப் ரிகார்டரில்' பதிவு செய்து விடுகிறது.

நோயாளியின் உடலில் இந்தச் சாதனத்தை வைப்பதால் எந்த வித இடையூறும் உணரப்படுவதில்லை. தான் பரிசோதனை செய்யப்படுகிறோம் என்ற எண்ணங்கூட அவருக்கு வருவதில்லை. சிறிது நேரம் இந்தச் சாதனத்தைப் பொருத்திக்கொண்டு அவர் தனது பிற வேலைகளைக் கவனிக்கலாம். இயந்திரம் வேலை செய்து தகவல்களைச் சேகரித்துக் கொண்டு விடுகிறது.

இலண்டன் மருத்துவமனை ஒன்றைச் சேர்ந்த நிபுணர்கள் இந்தக் கருவியைப் பயன்படுத்தி 25 நோயாளிகளைச் சோதித்துப் பார்த்தனர். நோயாளிகள் பற்றிய முக்கியமான மூன்று விவரங்களையும் இந்தச் சாதனம் தானியங்கு முறையில் மிகவும் விரைவாகவும் தெளிவாகவும் பதிவு செய்துவிட்டது.

* * *

81 நாய்களின் பெயரில் ரூ. 10 கோடியே 22 இலட்சம் மதிப்புள்ள சொத்து எழுதி வைத்திருக்கிறார் ஒரு பெண்மணி. அந்த விந்தைப் பெண்மணி யார் தெரியுமா?

அமெரிக்காவில் உள்ள புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த எலினர் ரிட்சி என்பவர்தான் அவர். இறப்பதற்கு முன் தன்னுடைய சொத்துக்களை 150 நாய்களுக்கு உயில் எழுதி வைத்தார். இதில் 69 நாய்கள் செத்துவிட்டன. மீதி 81 நாய்கள் பெயரில் அந்தச் சொத்து இருக்கிறது!

இந்த நாய்களும் இறந்த பிறகு அலபாமா மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகத்துக்கு இந்தச் சொத்து சேரவேண்டும் என்றும், உயிலில் எலினர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சொத்தில் தங்களுக்குப் பங்கு வேண்டும் என்று எலினரின் உறவினர்கள் நால்வர் தகராறு செய்தார்கள். இதைத் தொடர்ந்து அவர்களுக்குச் சொத்தில் தலா 5 சதவீதம் அளிப்பது என்று உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

* * *

அமெரிக்க அரசியல் கட்சிகளில் குடியரசுக் கட்சிக்கு யானையையும், ஜனநாயகக் கட்சிக்கு கழுதையையும் சின்னங்களாகக் குறிப்பிடுவது வழக்கம். இந்தச் சின்னங்கள் எப்படித் தோன்றின தெரியுமா?

அமெரிக்காவில் அரசியல் கட்சிகளுக்கு ஆதிகாரப் பூர்வமான சின்னங்கள் ஒன்றும் கிடையாது. இந்த இரண்டுச் சின்னங்களும் ஒரு கேலிச் சித்திரக்காரரின் கை வண்ணமாகும். இவர் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவர். பெயர் தாமஸ் நாஸ்ட். இவர் தந்தை ஜெர்மானிய ராணுவத்தில் இசைவாணர்.

கட்சிகளைக் குறிப்பிடுவதற்கு யானையையும் கழுதையையும் நாஸ்ட் தெரிந்தெடுத்தது ஏன்? நாஸ்ட் கையில், கழுதை ஜனநாயகக் கட்சியினரையும் யானை குடியரசுக் கட்சியினரையும் குறிப்பவை ஆயின. அப்படியே பொது மக்களும் அதை ஏற்றுக் கொண்டுள்ளனர்; இது நாஸ்ட்டின் அரசியல் கேலிச்சித்திரத் திறமைக்கு ஒரு சிறந்த சான்றாகும்.

முதலில் அவர் குடியரசுக் கட்சியைக் குறிக்கக் கழுதை ஒன்றை வரைந்து வெளியிட்டது 1870 துவக்கத்தில் ''ஹார்ப்பர்ஸ் வீக்லி'' என்ற பத்திரிகையில்தான். அப்படம் முன்னாள் போர்த் துறை அமைச்சரைப் பாராட்டி அவரைத் தாக்கியவர்களைக் கேலி செய்தது.

கார்ட்டூன் வெளியான சமயம் அந்த அமைச்சர் காலமாகி விட்டார். படத்தில் அமைச்சரை நாஸ்ட் ஒரு சிங்கமாகக் காட்டி, அதை ஒரு கழுதை உதைப்பதாக வரைந்திருந்தார். ''உயிரோடிருக்கும் கழுதை, இறந்த சிங்கத்தை உதைக்கிறது. என்ன சிங்கம்! என்ன கழுதை!'' என்பது கார்ட்டூன் வாசகம். அதன் பின் நாஸ்ட் வரைந்த கார்ட்டூன்களில் கழுதையை ஜனநாயகக் கட்சியின் ஒரு பகுதிக்கு மட்டுமல்லாமல் கட்சி முழுமைக்குமே சின்னமாக்கினார்.

குடியரசுக் கட்சியைக் குறிப்பதற்கு நாஸ்ட் யானையைக் கையாண்டது 1874 இறுதியிலாகும். அவரது கார்ட்டூனில் ஒரு காட்டில் யானை முதலிய விலங்கினங்கள் இருந்தன. அவை பலப்பல பத்திரிகைகளையும் மாநிலங்களையும் அரசியல் சிக்கல்களையும் குறித்தன. அங்கு சிங்கத்தின் தோலைப் போர்த்துக் கொண்டு ஒரு கழுதை ''ஸீஸரிஸம்'' என்று கூக்குரலிட்டது; அதைக் கேட்டு மற்றெல்லா விலங்குகளும் நடுங்கிக் கொண்டிருந்தன. அதிபர் யுலீஸஸ் எஸ். கிராண்ட் மூன்றாவது தடவையும் அதிபராகச் சூழ்ச்சி செய்து வருகிறார் என்று ஜனநாயகக் கட்சியினர் குற்றம் சாட்டியதையே நாஸ்ட் இவ்வாறு சித்திரித்தார்.

# காலக் கண்ணாடி

[illegible] அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகும் திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே, சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

மெத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த ஏடு' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ!

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்.**

பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா





91 நாட்கள் 4¾%

6 மாதங்கள் 5¼%

12 மாதங்கள் 6¼%

2 வருடங்கள் 6¾%

தமிழ்நாடு கூட்டுறவு வங்கியில் முதலீடு செய்வது மிகவும் சிறந்தது. எங்கள் வட்டி விகிதங்கள் மிகவும் கவர்ச்சிகரமானதென்பதுடன் உங்களுக்கு அதிக வருமானத்தையும் தருகிறது. ரூ. 3,000 வரை உள்ள வட்டிக்கு வருமான வரி கிடையாது. எங்கள் வங்கியில் செலுத்தும் முதலீடுகள் விவசாயிகளுக்கு விதைகள், உரம் முதலியவைகள் வாங்க உபயோகப்படுவதால் நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுகின்றன.

3 வருடங்கள் 7¼%

½% கூடுதல் வட்டி, மத, தர்ம கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு தரப்படும்.

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

இதர விவரங்களை எங்கள் கிளை அலுவலகங்களிடமிருந்து பெறலாம்.

# தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை-1.

போன்: 20367, 20368, 20369. தந்தி: "அர்பாங்க்"

டெலக்ஸ் எண்: MS 7225.

5 வருடங்கள் 7½%

தலைவர்: ஆர். கனகசபை. செயலர்: பி. என். டி. சாரி.

## செந்தமிழ்ச் செம்மல்கள்

## மாணவர் அரங்கம்

# அண்ணாமலை ரெட்டியார்



தென்பாண்டி நாட்டைச் சேர்ந்த திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஊர் கரிவலம் வந்தநல்லூர்.

இவ்வூரில்கோவில்கொண்டுள்ள பால்வண்ண நாதரைக்கரி(யானை) யொன்று நாள்தோறும் வலம் வந்து வழிபட்டு வணங்கியதால் கரிவலம் வந்தநல்லூர் எனப் பெயர் பெற்றது என்பர். இப்பெயர் கருவை நல்லூர் என்று மருவியும் வழங்குகிறது.

சங்கரநயினர் கோயிலுக்கு எட்டுக் கல் வடக்கே உள்ள கரிவலம் வந்த நல்லூரரின் புகை வண்டி நிலையத்திற்குத் தென் கிழக்கே அரைக் கல் தொலைவில் உள்ளது, சென்னிகுளம். சோழன் ஒருவன் இவ்வூரில் குளம் வெட்டினன். சோழனுக்குச் சென்னி என்ற பெயரும் உண்டு. ஆகவே, சென்னிகுளம் எனப் பெயர் பெற்றது என்பர்.

சென்னிகுளத்தில் வாழ்ந்து வந்த சென்னவ ரெட்டியார்—ஓவு அம்மாள் தம்பதியாருக்கு கி.பி. 1861-ஆம் ஆண்டில் அண்ணாமலை பிறந்தார். அண்ணாமலைக்கு உடன் பிறந்தவர்கள் ஐவரும் பெண்கள்.

கரிவலம் வந்தநல்லூரில்தான் அண்ணாமலை வாழ்ந்த காலத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் வரகுண இராமபாண்டியர் என்பவர் வாழ்ந்துள்ளார். இவர் திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருக்கருவை வெண்பா அந்தாதி, திருக்கருவைக் கலித்துறையந்தாதிஆகிய பாடல்களைப் பாடியுள்ளார். இவருடையதம்பி தான் நைடதம் பாடிய அதிவீரராம பாண்டியர். 'காசி காண்டம்' என்ற நூலையும் இவர் இயற்றியுள்ளார். இப்படித் தமிழ்ப் புலமை மிக்கவர்கள் வாழ்ந்த கரிவலம் வந்தநல்லூரில் ஒரு பகுதியாக விளங்கும்சென்னிகுளத்தில் பிறந்த அண்ணாமலை, தமிழ்ப் புலமையுடன் திகழ்ந்ததில் வியப்பில்லை.

சிவகிரியிலிருந்து சென்னிகுளத்திற்கு வந்து, திண்ணைப்பள்ளிக்கூடம் வைத்து நடத்திக் கொண்டிருந்தார் சுப்பிரமணியபிள்ளை என்பவர். அவரிடம் அண்ணாமலை வரிசை முறையாக அரிச்சுவடி முதலிய நூல்களையும், சங்கர சதாசிவ மாலை, இராச கோபால மாலை, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், கருவையந்தாதி, திருப்புகழ், நிகண்டு முதலிய ஏடுகளையும் படித்து இளமையிலேயே புலமை மிக்கவராய்த் திகழ்ந்தார்.

அண்ணாமலை ரெட்டியார் தமிழறிவு மிக்கவராக இருந்ததுடன் முரட்டுத்தனம் உடையவராகவும் தந்தைக்குப் பணியாதவராகவும் இருந்தார். இதனால் ஒரு நாள் தந்தையின் கோபத்துக்கு ஆளாகிய போது வேறு ஊருக்குச் சென்றுவிட முடிவு கட்டினார்.

அண்ணாமலை ரெட்டியார் சென்னி குளத்தைவிட்டுப் புறப்பட்டுச் சென்றபோது கரிவலம் வந்தநல்லூரில் கந்தசாமிக் கவிராயர் என்பவர் ஒரு வீட்டில் சிறு பெண்ணுக்கு இசை பயிற்றிக் கொண்டிருந்தார். அந்த இசையில் மயங்கிய அண்ணாமலை ரெட்டியார் அவரைச் சந்திக்கச் சென்றார். அண்ணாமலையைக் கண்டு கந்தசாமிக் கவிராயர் 'யார் நீ' என வினவியபோது அண்ணாமலை ரெட்டியார் 'மடக்குச் செய்யுளில்' ஒரு பாடல் பாடினார்.

மடக்குச் செய்யுள் என்பது வந்த முன்னணிச் சீர்கள், பின்னாலே வருகின்ற இரண்டு, மூன்று, நான்கு அடிகளிலும் மடங்கி வரப் பாடுவது. ஒவ்வொரு அடிக்கும் பொருள் வேறு வேறாக அமையும்.

மடக்குச் செய்யுளைக் கேட்ட கந்தசாமிக் கவிராயர் அண்ணாமலை ரெட்டியாரின் கவித்திறம் கண்டு மகிழ்ந்து நண்பரானார்.

அதன் பின்னர் அண்ணாமலை ரெட்டியார் அங்கிருந்து புறப்பட்டுச் சேத்தூரை அடைந்து மன்னர் சுந்தரராச பாண்டியரைக் கண்டு அவர் மீது அருமையான கவிதைகளைப் பாடினார். மன்னரும் அவரைத் தம் அரண்மனையிலேயே தங்கச் சொன்னார்.

சேத்தூர் அரசவைப் புலவராக இருந்த முகவூர்க் குருக்களையா என்பவரின் ஆதரவால் அண்ணாமலை ரெட்டியார் திருவாவடுதுறையை அடைந்து அங்குத் தலைவராக இருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிய மூர்த்திகளிடம் இலக்கண நுட்பங்களைக் கற்றார். அவர் அண்ணாமலை ரெட்டியாரை அங்குத் தம்மிடம் மாணவராக இருந்த உ. வே. சாமிநாதய்யரிடம் ஒப்புவித்தார். உ. வே. சாமிநாதய்யர் அண்ணாமலை ரெட்டியாருக்கு நன்னூலும் மாயூரப் புராணமும் பாடம் சொன்னார்.

ஓராண்டுக்குப் பின்னர் அண்ணாமலை ரெட்டியார் அங்கிருந்து விடை பெற்றுக்கொண்டு ஊர் திரும்பினார்.

ஊற்றுமலை மன்னர் மருதப்பத் தேவருக்கு மிகவும் வேண்டியவர் சென்னிகுளம் சுந்தர பரமதேசியார் என்பவர். அவர் அண்ணா

மலை ரெட்டியாரை ஊற்றுமலைக்கு அழைத்துச் சென்று அரசவைப் புலவராக்கினார். அண்ணாமலை ரெட்டியார் மருதப்பர் மேல் ஏராளமான பாடல்களைப் பாடியுள்ளார்.

அண்ணாமலை ரெட்டியார் இளம் வயதில் கொடிய நோய்க்கு ஆளானார். இவருக்கு 24-ஆம் வயதில் குருவம்மாள் என்ற பெண்ணை மணமுடித்து வைத்தனர். மணமுடிந்து இரண்டு ஆண்டுகளில் கி.பி. 1887-ஆம் ஆண்டில் மறைந்தார்.

அண்ணாமலை ரெட்டியார் பாடிய நூல்கள் காவடிச் சிந்து, வீரையந்தாதி, வீரைப்பிள்ளைத் தமிழ், கோமதியந்தாதி என்பன. இந்நூல்களில் மிகச் சிறந்ததாக விளங்குவது காவடிச் சிந்தே.

## வெண்பாப் போட்டி--44

"குழந்தை" எனத் தொடங்கி
"இனிது" என முடிக்க

முடிவு நாள் : 15—10—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி:—
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு :
அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

'' சந்தச் செய்யுளின் தந்தை' என்று அண்ணாமலை ரெட்டியார் புகழப்படுகிறார்.

அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்துக்கு ஈடும் இணையும் கிடையாது என்பது தமிழ் அறிஞர்களின் கருத்து.

—நம்பியின் தம்பி.




உள்ளம் பொய்யா தொழுகியதால்
உயர்வாம் அகிம்சை போற்றியதால்
உள்ளந் தன்னில் நிற்கின்றார் ;
உலகத் தந்தை நம்காந்தி!

எளிமை வாழ்வு வாழ்ந்தவராம் ;
ஏழையர் வாழ உழைத்தவராம் ;
தெளிவுறத் திட்டம் தந்தவராம் ;
தேச விடுதலை கண்டவராம் !

சத்திய சோதனை செய்தவராம் ;
தனிப்பே ராற்றல் கொண்டவராம்;
வித்தகர் காந்தி வழிசெல்வோம் ;
மேதினி போற்ற வாழ்ந்திடுவோம்.



—சாமி பழ.

# கண் அழுத்த நோய்

டாக்டர் ஜி.வெங்கடசாமி
(துணைமுதல்வர், மதுரை மருத்துவக் கல்லூரி)

இன்று வளர்ந்து வரும் மருத்துவ அறிவிற்கும், ஆராய்ச்சிக்கும் ஒரு சவாலாக விளங்கி மனிதனின் நுண்ணிய உறுப்பான கண்ணின் பார்வையைப் பயங்கரமாகப் பாதித்துக் கொண்டு வருகின்ற கொடிய நோய்தான் கிளாகோமா (Glaucoma) எனப்படும் கண் அழுத்த நோயாகும்.

இன்று உலகிலேயே அதிகமான குருடர்கள் ஆசியாவில் தான் இருக்கிறார்கள். அவர்களில் 62 சதவீதத்தினர் அதாவது 55 இலட்சம் பேர், இந்தியாவில் இருக்கிறார்கள். இவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் கண் அழுத்த நோயினால் பார்வையை இழந்திருக்கிறார்கள் என்றால், இந்த நோயின் கொடிய தன்மையை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். அவ்வளவு ஏன்? இன்று உலகிலேயே பணக்கார நாடு என்று கருதப்படும் அமெரிக்காவிலேயே எட்டுக் குருடர்களில் ஒருவர், கண் அழுத்த நோயாலேயே பார்வையை இழந்திருப்பதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

இந்தக் கண் அழுத்த நோய் மருத்துவ உலகிற்கே ஒரு மிகப் பெரிய சவாலாக இருப்பதற்கு மிக முக்கியமான அடிப்படைக் காரணம் என்னவென்றால் ஆரம்ப நிலையிலேயே இதைக் கவனிக்காமல் விட்டு விடுவதுதான். கண்பார்வை மங்க ஆரம்பித்த உடனேயே 'சாளேஸ்வரம்' வந்துவிட்டது, 'வயதாகிவிட்டது' என்ற எதேச்சையான எண்ணத்தில் நாம் பேசாமல் இருந்து விடுகிறோம். பின் நோய் முற்றிய பிறகு, கண்ணில் வலியுடன் கண் மருத்துவரைத் தேடி ஓடுகிறோம். அவர் '' இப்பொழுது வந்திருக்கிறீர்களே? முன்பே வந்திருக்கக் கூடாதா? '' என்று வருத்தத்துடன் உதட்டைப் பிதுக்கும் பொழுது, நாம் கண்ணீர் விட்டு, குடும்பத்திற்குப் பாரமாக நிற்க வேண்டிய சூழ்நிலையை எண்ணிக் கலங்குகிறோம்.

நமது நாடு ஏழை நாடு மட்டுமல்ல. கூட்டுக் குடும்பங்களைக் கொண்டதாகவும் இருக்கிறது. இந்நிலையில் கண்பார்வை இழந்தவர்களைப் பாதுகாக்கப் போதுமான சமுதாய இல்லங்கள் இல்லாத காரணத்தினால் ஒருவரது பிரச்சினை எல்லாரையும் கவலைக்குள்ளாக்கிக் குடும்பத்தில் மனக் கசப்பை உண்டு பண்ணுகின்றது. கண் பார்வை இழந்தவர் தனக்குத் தானே பாரமாகிப் பிறருக்கும் பாரமாகிறார். எனவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தப் பயங்கரமான கண் அழுத்த நோய் பற்றி எச்சரிக்கையாக இருந்து உடனே தகுந்த முன் நடவடிக்கை எடுப்பது அவசியமாகிறது.

### கண் அழுத்த நோயின் காரணம்

கண் விழியின் மேல் பாகத்தில் 'ஆகியூவஸ் ஹூமர்' என்ற திரவம் சுரந்து சுற்றிக் கொண்டே வந்து, பின் கண் உள் உள்ள ஒரு குழாய் மூலம் வடிந்து செல்கிறது. அப்படி வடிந்து செல்லும் குழாயில் கோளாறு ஏற்பட்டாலோ அல்லது தடைப்பட்டாலோ 'ஆகியூவஸ் ஹூமர்' என்ற அத்திரவம் வெளிச் செல்லாமல் தேங்கிவிடுகிறது. இதனால், கண் அழுத்தம் அதிகமாகிறது. நாளடைவில் 'கண் அழுத்தம்' அதிகரித்துக் கண் விழியின் பின்னால் உள்ள மெல்லிய நுண்மையான பார்வை நரம்புகளைப் பாதித்து அவைகளைச் செயலற்றதாக்குகிறது. கடைசியில் கண்பார்வை நிரந்தரமாக மறைந்து விடுகிறது. இதற்குப் பின் எந்தச் சிகிச்சை செய்தும் கண்ணைப் பாதுகாக்க முடியாது.

கண்விழியின் சாதாரண அழுத்தம் 20 மி.மீ. இதைவிடக் கண் அழுத்தம் அதிகமாவதாகத் தெரிந்தால் 'கண் அழுத்த நோய்' வருவதற்குச் சந்தர்ப்பம் உண்டு. எனவே கண் அழுத்த நோய் தனக்கு இருக்கிறதா, இல்லையா என்ற சந்தேகமுள்ள யாரும் உடனே தகுந்த கண் மருத்துவரை அணுகித் தனது கண் அழுத்தத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும். குறிப்பாக 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை கண் அழுத்தத்தைத் தெரிந்து கொள்வது ஒரு முன்னெச்சரிக்கையாக இருக்கும்.

### கண் அழுத்த நோயின் அறிகுறிகள்:—

கண் அழுத்த நோயில் இரு வகைகள் உண்டு.

### மெதுவாக வரும் கண் அழுத்த நோய்

இந்தக் கண் அழுத்த நோயில் பார்வை சிறிது சிறிதாக மங்கிக் கொண்டே வந்து, பின் பார்வை முழுவதையும் இழந்துவிட நேரிடும். இது சாதாரணமாக இரண்டு கண்களையும் பாதிக்கும்; பக்கப் பார்வையும் குறைந்து கொண்டே வரும். அடிக்கடி கண்ணாடியை மாற்ற நேரிடும்.

### திடீர் கண்அழுத்த நோய்

இந்தக் கண் அழுத்த நோயில் 'திடீர்' என்று கண்ணில் வலி ஏற்படும். கடுமையான தலைவலியும், வாந்தியும் ஏற்படுவதுண்டு. இந்தத் திடீர் கண்வலி வருவதற்கு முன்னால் சில சமயங்களில் இரவில் விளக்கைச் சுற்றி வண்ணக் கோடுகள் தெரியும். அப்படி வரும்போதே கண்ணை மருத்துவரிடம் காண்பித்தால் ரணசிகிச்சையின் மூலம் திடீர் கண்வலி வராமல் தடுக்க முடியும்.

### சில எச்சரிக்கைகள்

இதரக் கண் நோய்களினால் பார்வை மங்கினால் அல்லது பாதிக்கப்பட்டால் கண்ணாடி அணிவதனாலேயோ அல்லது சிகிச்சை அளிப்பதினாலேயோ திரும்பப் பெற்று விடலாம். ஆனால் கண் அழுத்த நோயினால் பார்வையை இழந்துவிட்டால் திரும்பப் பெறமுடியாது. எனவே, கண் அழுத்த நோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும், பாதிக்கப்படாமலிருந்தாலும் கீழ்க்கண்ட முன் எச்சரிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

1. 40 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் எல்லாரும் பயிற்சி பெற்ற கண் மருத்துவரிடம்சென்று ஆண்டிற்கு ஒருமுறை கண் அழுத்தத்தைச் சோதித்துக் கண் அழுத்தநோய் வருவதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

2. இந்தக் கண் அழுத்த நோய்க்கு ஒரே தடவையில் சிகிச்சை அளித்துவிட முடியாது. சில வாரங்கள், சில மாதங்கள் கழித்து மீண்டும் மீண்டும் கண்

அழுத்தத்தைப் பரிசோதித்துச் சிகிச்சை முறையை மாற்ற வேண்டியிருக்கும். தேவையானால் அறுவைச்சிகிச்சையும் செய்ய வேண்டியிருக்கும். எனவே கண் மருத்துவர் குறிப்பிடும் நாளில், தவறாமல் சென்று, சிகிச்சை பெறுவது அவசியம். சில வாரங்கள், சில மாதங்கள் சிகிச்சையை ஒத்திப் போடுவதால் கண் பார்வையை நிரந்தரமாக இழக்க நேர்ந்தாலும் நேரிடும்.

3. கண் அழுத்த நோய் சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பவர்களுக்கு நீரிழிவு, இரத்தக் கொதிப்பு முதலிய நோய்கள் இருந்தால் முன் எச்சரிக்கையாகக் கண் அழுத்த நோய்க்குச் சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கும் மருத்துவரிடம் அது பற்றிய விவரங்களைச் சொல்ல வேண்டும். கண் நோய்க்கும், இதர நோய்க்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று இருந்துவிடக்கூடாது.

அதேபோல் வேறு நோய்களுக்கு, வேறு மருத்துவரிடம் சென்று சிகிச்சை பெற நேர்ந்தால் அவரிடம் கண் அழுத்த நோய் பற்றிய விவரத்தைச் சொல்ல வேண்டும்.

4. எக்காரணம் கொண்டும் மருத்துவர்கள் பரிந்துரைக்கும் மருந்தை நேரம் தவறாமல் கண்களில் போடத் தவறக் கூடாது. குறிப்பிட்ட தேதியில் தவறாமல் வந்து, கண் அழுத்தத்தைப் பரிசோதித்துச் செல்வதுபோல், வேளை தவறாமல் மருந்தைப் போட்டுக் கொண்டு வருவதும் முக்கியமாகும். மருந்தினால் எந்தவிதப்பலனும் ஏற்படவில்லையென்று பொறுமை இழத்தல் கூடாது.

5. இரவில் வெகுநேரம் கண் விழித்துக் கொண்டிருக்கக் கூடாது. குறிப்பாகச் சினிமா பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

6. அன்றாட வாழ்க்கையில் ஆத்திரமும், அவசரமும் இல்லாமல் பொறுமையாக வேலைகளைச் செய்ய வேண்டும்.

7. புகையிலை, காபி, தேநீர் முதலிய பானங்களைக் குறைந்த அளவே பருக வேண்டும். ஒரே சமயத்தில் அதிகமான தண்ணீரையோ இதர பானங்களையோ அருந்தக் கூடாது.

இந்தக் கண் அழுத்த நோய் உள்ளவர்களும், இல்லாதவர்களும் மிகவும் முக்கியமாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய எச்சரிக்கை என்னவென்றால், கண் பார்வை மங்கிவரும் அறிகுறி தெரிந்த உடனே கண் மருத்துவரை அணுகுவதுதான்.

நமக்கு அன்றாட வாழ்க்கையில் ஆயிரம் சமூகப்—பொருளாதாரச் சிக்கல்கள் இருக்கலாம். ஆனால் முன் எச்சரிக்கையாகக் கையாள வேண்டிய முறைகளை விட்டு விட்டுக் கண் பார்வையை இழந்தபின் தனக்குத் தானே பாரமாக மட்டுமல்லாது, குடும்பத்துக்கும் பாரமாய்க் கண்ணீர் விட்டு முணங்கிக் கொண்டு காலம் கழிக்கும் மனிதர்களாக நீங்களும் இருக்க விரும்புகிறீர்களா? உடனே, உங்களுடைய கண்ணின் மீது கண்காணிப்பு இருக்கட்டும் என்று கண்சாடை காட்டுகிறோம்.





# சங்கர் சிமெண்ட்

தயாரிப்பாளர்களுக்கு 1968-69-ம் ஆண்டில் ஏற்றுமதியில் சிறப்புற்று விளங்கியதற்காக இந்திய அரசின் பாராட்டு இதழ் கிடைத்துள்ளது.

தரம், நீண்டகால சேவை, பாறை போன்ற உறுதி ஆகிய சிறப்பு அம்சங்கள் பொருந்திய சங்கர் சிமெண்ட் நாட்டின் அந்நியச் செலாவணி வருவாயைப் பெருக்குவதிலும் முன்னணியில் நிற்கிறது.

ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது

**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்**

**தன் பில்டிங், சென்னை 2**

**25 ஆண்டுகள் நிலைத்து, இன்னும் வளர்ந்து கொண்டே போகிறது!**

**இலவசத் தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்விஸ் பீரோ, குரோவ், சென்னை-18**

#DSIC1753THB



# காலத்திற்கேற்ற வகையில் காவிரியின் சீரமைப்பு

செக்கர் வானத்தில் செங்கதிரோன் மறைந்து கொண்டிருந்தான்! காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் கடற்கரை மணலில் அமர்ந்து, கையில் வைத்திருந்த குறிப்புத் தாள்களை அருகில் வைத்து, அவைகளின் மேல் பாரமாகச் சிறிது மணலை அள்ளிப் போட்டுவிட்டு, அன்றைய காவிரிப் பூம்பட்டினத்தைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். கரிகால் சோழன் காலத்தில் சீரோடும் சிறப்போடும் விளங்கிய காவிரிப்பூம் பட்டினக்காட்சிகள் என் மனத்திரையிலே ஓடிக் கொண்டிருந்தன. கற்பனை இன்பமும், கடற்காற்றின் சுகமும் உட்கார்ந்திருந்த என்னை மணலில் படுக்க வைத்துவிட்டன. கடற்காற்றின் குளிர்ச்சி என் கண்களை மூட வைத்துவிட்டன. என் உடல் கடற்கரை மணலில் கிடந்தாலும், என் உள்ளம் மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும் நிறைந்த காவிரிப்பூம் பட்டின வீதிகளிலே பெருமிதத்தோடு சுற்றுலாச் சென்று கொண்டிருந்தது.

''தம்பி!'' என்றொரு குரல் கேட்டது. இந்த உலகை மறந்த நிலையில் காவிரிப்பூம் பட்டினத்துக் காட்சிகளில் மனத்தைப் பறிகொடுத்துக் கொண்டிருந்ததால் அந்தக் குரல் கேட்டும், கற்பனை இன்பத்தை இழந்திட மனமின்றி, கண்களை மூடிக் கொண்டே இருந்தேன்.

''உன்னைத்தான் தம்பி!'' என்ற அண்ணாவின் குரல் மீண்டும் கேட்டது.

பேரறிஞர் அண்ணா தான் அடிக்கடி 'உன்னைத்தான் தம்பி!' என்று அழைத்து, சிந்தையைக் கிளறுவார்! அவர் கூறும் 'உன்னைத்தான் தம்பி' என்ற குரலைக் கேட்டுப் பலஆண்டு ஆகிவிட்டது. அதே 'உன்னைத்தான் தம்பி' என்ற குரல் கேட்டதும் அண்ணா வந்துவிட்டாரோ என்ற பேரார்வத்தால் என் கண்கள் தாமாகவே திறந்து கொண்டன. அதே நேரத்தில் உணர்வுகள் விழித்துக் கொண்டதால் என் உடல் துடித்து எழுந்தது.

அங்கு அண்ணாவைக் காணோம்! ஆனால் கம்பீரமான தோற்றத்தோடும் முறுக்கிய மீசையோடும் கூடிய ஒருவர் நின்று கொண்டிருந்தார். அண்ணாவைக் காணத் துடித்த என் கண்களில்—ஏமாற்றத்தின் காரணமாக—கண்ணீர் சுரந்தது!

''அண்ணாவின் குரலில் 'உன்னைத்தான் தம்பி!' என்று அழைத்து, கரிகால் சோழ மன்னனைக் காணச் சென்று கொண்டிருந்த என்னைத் தடுத்து நிறுத்திவிட்டீர்கள். எனக்கு இரு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்திவிட்டீர்கள். ஏன் என்னை அழைத்தீர்கள்?'' என்று வெறுப்புடன் கேட்டேன்.

''தம்பி! ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில், உன்னை எழுப்பவில்லை!'' என்று கூறினார்.

அண்ணாவின் அதே குரல்! என்னை என்னால் நம்ப முடியவில்லை! அண்ணாவின் உருவத்தைத்தான் என்னால் காண முடியவில்லையே தவிர, அண்ணாவுக்கே உரிய குரலில் அவர் பேசியதைக் கண்டு வியப்புடன் அவரை நோக்கினேன்.

''தம்பி! தமிழ்நாடு முதல் அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பெருமுயற்சியால் அமைக்கப் பெற்றுவரும் கற்புக்கரசி கண்ணகியின் சிலைக் கூடத்தைக் கண்டுவிட்டு அதைப்பற்றிய சிந்தனையுடன் கடற்கரை ஓரத்தில் நடந்து கொண்டிருந்த என் காலில் ஒரு காகிதத்தாள் வந்து சிக்கியது. அதை எடுத்துப் பார்த்தேன். 'காலத்திற்கேற்ற வகையில் காவிரியின் சீரமைப்பு' என்ற தலைப்பில் குறிப்புகள் எழுதப்பட்டிருந்தன. காகிதத் தாளில் உள்ள எழுத்து சற்று நேரத்திற்கு முன்பு எழுதப்பட்டதாக தெரிந்தது. இது எப்படி இங்கு வந்திருக்கும் என்று எண்ணிக் கடற்கரையை நோக்கினேன். உன்னைத்தவிர இங்கு யாரையும் காணவில்லை. எனவே இத்தாள் உன்னுடையதாகத் தான் இருக்கும் என்று எண்ணி உன் அருகில் வந்தேன். உன் அருகில் இதே தாளைப் போன்ற வேறு சில தாள்களும் கிடப்பது கண்டு அவைகளை எல்லாம் எடுத்துச்சேர்த்து விட்டேன். அதை உன்னிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்ல வேண்டுமென்பதற்காகவே உன்னை எழுப்பினேன். தவறெனின் மன்னித்துக் கொள் தம்பி!'' என்றார்.

''அண்ணாவின் குரலில் சிறிதும் மாற்றமின்றிப் பேசுகின்றீர்களே!'' என்று குறிப்பிட்டேன்.

''அண்ணாவின் குரலில் மட்டுமல்ல; நீ காண விரும்பிய கரிகால் சோழனின் குரலிலும் என்னால் பேச முடியும்!'' என்றார் அவர்.

''ஐயா! தாங்கள் யார் என்பதைத் தயவு செய்து கூறுகின்றீர்களா?'' என்று கேட்டேன்.

''நான் யார் என்பதைப் பிறகு கூறுகின்றேன். முதலில் நீ காண விரும்பிய கரிகால் சோழனின் குரலைக் கேட்க உனக்கு விருப்பமில்லையா?'' என்று வினவினார்.

''சரி! கரிகால் சோழனின் குரலில் பேசுங்கள்'' என்றேன்.

''தம்பி! நீ விரும்புகின்றபடி கரிகாலன் குரலில் பேசுகின்றேன். ஆனால், முதலில் நீ, எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்! செய்வாயா?''

''முடிந்தால் செய்கின்றேன்! என்னவென்று சொல்லுங்கள்''.

''கைம்மாறு எதிர்பார்த்துக் கேட்கின்றேன் என்று எண்ணிவிடாதே! 'காலத்திற்கேற்ற' வகையில் காவிரியின் சீரமைப்பு என்று குறிப்பு எழுதி வைத்துள்ளாயே அதன் விவரங்களை எனக்கு நீ, விளக்க வேண்டும். காவிரியை என் உயிராகக் கருதுகின்றேன். அதனால்தான் அதைப் பற்றித் தெரிந்து கொள்ளத் துடிக்கின்றேன்!''.

''ஓ! இதைத்தான் உதவி என்று கேட்டீர்களா? நீங்கள் எதைக் கேட்கப் போகின்றீர்களோ! அதைச் செய்ய என்னால் முடியுமோ, முடியாதோ! என்று பயந்து கொண்டிருந்தேன்''.

''ஒருவரால் முடியாத உதவியை, அவரிடமிருந்து எதிர்பார்ப்பது தமிழனின் பண்பல்ல தம்பி!''

''சரி! காவிரியின் சீரமைப்புப் பற்றி விளக்கட்டுமா?''.

"கடற்கரை ஓரத்தில் நடந்து கொண்டே பேசலாமோ?"

"தங்கள் விருப்பப்படி நடந்து கொண்டே பேசுவோம்."

அவர் முன்னே நடந்தார். நான் அவரைப் பின் தொடர்ந்தேன். அவருடைய உடை, அவரை ஒரு சாதாரண மனிதரைப்போல் காட்டினாலும், அவருடைய நடை 'ராஜ நடை' என்பார்களே அதுபோல் இருந்தது. என்னால் அவருடைய வேகத்திற்கு நடக்க இயலவில்லை. அவருடைய நடையழகைப்பார்த்துக் கொண்டே, சற்று தூரம் அவர் பின்னாலேயே நடந்தேன். சிறிது நேர மௌன நடைக்குப் பின், அவர் என்னைத் திரும்பிப் பார்த்தார். நான் சற்று வேகமாக நடந்தேன்.

"ஓ! நான் வேகமாகச் செல்கின்றேனா? இனிமேல் மெதுவாகச் செல்கின்றேன்" என்று கூறி அவர் நின்றார்.

"பரவாயில்லை! இதோ வந்துவிட்டேன்!" என்று கூறிக் கொண்டே சற்று வேகமாக ஓடி அவர் நின்ற இடத்தை அடைந்தேன்.

"தம்பி! காவிரி நதி பற்றியும், காவிரி சீரமைப்புப் பற்றியும் முழு விளக்கம் தருவாயா?" என்று கேட்டுக் கொண்டே மெதுவாக நடந்தார்.

"இதோ! துவங்குகின்றேன்' என்று கூறிவிட்டு அவர் பக்கத்திலேயே நடந்தேன். நான் விளக்கத் தொடங்கினேன்.

"ஐயா! நினைப்புக்கு எட்டாத நெடுங்காலமாகவே வேளாண்மையிலும், நீர்ப்பாசன முறையிலும் தஞ்சை மாவட்டம் தரணியே போற்றும் அளவுக்குச் சிறந்து விளங்கியுள்ளது. இயற்கை, தஞ்சை மாவட்டத்திற்கு நல்ல மழையை அளித்து வந்ததுடன், தென்மேற்கு, வடகிழக்கு ஆகிய இரு பருவக் காற்றாலும் நிரம்ப மழையைப் பெறும் காவிரி நதியையும், அதன் பல கிளை நதிகளையும் அளித்துள்ளது. அவைகள், பல நூற்றாண்டுகளாகத்தஞ்சை மாவட்டத்திற்கு நிலையான நீர்ப்பாசன வசதியை அளித்து வந்ததுடன், அவ்வப் பொழுது வெள்ளப் பெருக்கினால் ஏராளமான சேதங்களையும் ஏற்படுத்தி வந்துள்ளன.

"தஞ்சை மாவட்டத்தில், காவிரி நதியால் ஏற்படுத்தப்பட்டுள்ள கழிமுகப் பகுதி (டெல்டா) 10 இலட்சம் ஏக்கருக்கும் மேல் பரவியுள்ளது. விசிறி வடிவில் (Fan Shape) அமைந்துள்ள இக் கழிமுகப் பகுதி வடக்கில் கொள்ளிடத்தையும், கிழக்கில் வங்காள விரிகுடாவையும், தெற்கிலும், மேற்கிலும் தஞ்சை மாவட்டத்தின் மேட்டுப் பாங்கான பகுதிகளையும் எல்லையாகக் கொண்டுள்ளது. இக் கழிமுகப் பகுதி, நெல் சாகுபடிக்கேற்ற வளமான பகுதியாக விளங்குகிறது. 'தமிழகத்தின் நெற்களஞ்சியம்' என்று தஞ்சை மாவட்டம். அன்றும், இன்றும், வழங்கப்பெறுகிறது. எனவே, தஞ்சை மாவட்டத்தைத் 'தமிழகத்தின் இதயம்' என்றாலும் தகும்.

"பல நூற்றாண்டுகளாக காவிரிக் கழிமுகப் பகுதி-நீரைத் தேக்கி வைத்திருந்து தேவைக்கேற்ப பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பின்றி-நேரடியாகவே நீர் பெற்று வந்தது. கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்புவரை, காவிரி யாற்றிலோ அல்லது அதன் கிளை நதிகளின் குறுக்கிலோ நீர்த் தேக்கங்கள்அமைக்கப்படவில்லை.

"காவிரி நதியின் மேல் பாதியில் அமைந்துள்ள 31,000 சதுர மைல் பரப்பு கொண்ட நீர் வடி பரப்பு (Catchment area) பெரும்பாலும் மைசூரில் உள்ளது. இப்பகுதி தென் மேற்குப் பருவக்காற்று காலத்தில் (ஜூன்-அக்டோபர்) பெரும்பகுதி மழையைப் பெறுகிறது. காவிரியின் கீழ்ப் பாதியில் உள்ள நீர் வடி பரப்பு, தமிழ்நாட்டில் உள்ளது. இப்பகுதி வட கிழக்குப் பருவக் காற்று காலத்தில் (அக்டோபர்—டிசம்பர்) பெரும் பகுதி மழையைப் பெறுகிறது.

"மைசூர் மாநிலத்தில் உள்ள 'கிருஷ்ணராஜ சாகர்' அணையே காவிரி நதியில் கட்டப்பட்ட முதல் நீர்த் தேக்கமாகும்.

"காவிரிக்கழிமுகப்பகுதியின் பாசனத் தேவையை முக்கியமாக ஈடு செய்யவே, மேட்டூர் நீர்த் தேக்கம் (Mettur Dam) ஏற்படுத்தப்பட்டது. 1934-ஆம் ஆண்டில், மேட்டூர் அணை கட்டி முடிக்கப்பட்டது. மேட்டூர் அணையில் 93,500 மில்லியன் கனஅடி தண்ணீரைத் தேக்கி வைக்க முடியும். மேட்டூர் அணையின் நீர் வடி பரப்பு 16,300 சதுர மைலாகும்.

"திருச்சிராப்பள்ளிக்கு 10மைல் மேற்கே மேல்அணை(Upper Anicut) 1835-ஆம் ஆண்டில், கேப்டன் காட்டன் என்ற வெள்ளைக்காரப் பொறியாளர் ஒருவரால் கட்டப் பெற்றது. இவ்வணையே கழிமுகப் பகுதியின் தலைப்பாகும். இங்குக் காவிரி இரு பெரும் நதிகளாகப் பிரிந்து கொள்ளிடத்தை ஏற்படுத்துகிறது. கழிமுகப் பகுதியின் வடக்கெல்லையாக அமைந்துள்ள கொள்ளிடம், வெள்ளத்தை வடிக்கும் முக்கிய நதியாக அமைந்துள்ளது. மேல் அணையின் மேலே, கொள்ளிடத்தின் குறுக்கே, 1945-ஆம் ஆண்டில் ஒருபாலம் கட்டப்பெற்றது. வெள்ளத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக, மேல் அணையை 1899-ஆம் ஆண்டிற்கும், 1904-ஆம் ஆண்டிற்கும் இடையில் புதுப்பிக்கப்பட்டது.

"மேல் அணையிலிருந்து 17மைல் கிழக்கே, காவிரியாறு காவிரி, வெண்ணாறு, உள்ளாறு என்று மூன்று ஆறுகளாகப் பிரிகின்றது. இவ்விடத்தில் அமைந்துள்ள அணையே கல்லணை (Grand Anicut) எனப்படுகிறது. இக் கல்லணையே காவிரிக் கழிமுகப் பகுதியில் உள்ள முக்கிய நீர்ப் பாசன அமைப்பாகும். காவிரிக் கழிமுகப் பகுதியில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கட்டப் பட்டுள்ள பழமையான நீர்ப் பாசன அமைப்பு கல்லணையே என்று கூறப்படுகிறது.

"கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் உள்ளாற்றின் குறுக்கே, கரிகால் சோழன் கல்லணையைக் கட்டியதாக வரலாறு கூறுகின்றது. அந்த அணைக் கட்டப்பட்டதனாலேயே—உள்ளாற்றின் வழியாகக் கொள்ளிடத்தில் வீணாகச்சென்ற தண்ணீரைத் தடுத்து, காவிரியில் திருப்பிவிட்டு—தஞ்சை மாவட்ட நெல் சாகுபடிக்கு உறுதியான பாசனம் கிடைத்தது. அதனால் கரிகால் சோழனைத் தமிழகம் என்றும் மறக்காது" என்றேன்.



இவ்வாறு கூறிய உடனே அவர் "தம்பி!" என்று அழைத்துவிட்டு, தன் மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டு, ஒரு பெருமித கனைப்பு கனைத்துக்கொண்டார். அவரு

டைய செய்கை ''நான்தான் கல்லணையைக் கட்டியவன்!'' என்பதுபோல் இருந்தது.

''என்ன ஐயா?'' என்றேன்.

''கி.பி. 2-ஆம் நூற்றுண்டிலேயே, கரிகால் சோழன் கல்லணையைக் கட்டுவித்தான் என்று நீ கூறியதும், தமிழனின் திறமையை நினைத்து நான் பெருமிதமடைந்தேன். அந்தப் பெருமிதத்தில் நீயும் பங்கு கொள்ள வேண்டும் என்பதற்காகவே, ''தம்பி!'' என்று அழைத்து, உன் பேச்சைத் தடைப்படுத்தி விட்டேன். ஒரு செய்தியையும் விட்டுவிடாமல், எல்லாவற்றையும் தொகுத்துத் தொடர்புபடுத்தி நன்கு கூறுகிருய். தொடர்ந்து கூறு தம்பி!'' என்ருர். நான் என் விளக்கத்தைத் தொடர்ந்தேன்.

''கேப்டன் ஜே. எல். கால்டுவெல் என்ற வெள்ளைக்காரப் பொறியாளர் 1804-ஆம் ஆண்டில், கல்லணையைப் பழுது பார்த்து, அதன் மேல் 263 கல் தூண்களை நிறுவி புதுப்பித்துள்ளார். இச்செய்தி பற்றிய கல்வெட்டு இன்றும் கல்லணையில் காணப்படுகிறது. அக் கல்வெட்டில், 'Repaired this calingulah and erected the 263 upright stones by captain J.L. Caldwell A.D. 1804' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்லணையில் 1830-ஆம் ஆண்டு முதல் மேலும் பல மாற்றங்களும், திருத்தங்களும் செய்யப்பட்டு, 1939-ஆம் ஆண்டில், தற்பொழுதுள்ள உருவத்தைக் கல்லணை பெற்றது.


''காவிரி, வெண்ணுறு பிரியும் இடத்தில் தண்ணீரைத் தேக்கி காவிரியிலும், வெண்ணுற்றிலும் தண்ணீரை முறை படுத்திவிடவும், கட்டுப்படுத்த முடியாத வெள்ளத்தை ஒதுக்கிவிடவும் 1886—ஆம் ஆண்டில், காவிரி-வெண்ணுறு பொறிமதகு (Regulator) அமைக்கப்பட்டது. இந்த இடத்திலிருந்தே காவிரி-மேட்டூர் திட்டத்தின் கீழ் வெட்டப்பட்ட கல்லணைக் கால்வாய் துவங்குகிறது. இப்பகுதிக்குக் கிழக்கே காவிரியும், வெண்ணுறும் பிரிந்து, பிரிந்து, பல கிளை நதிகளாக உருபெற்று, கழிமுகப் பகுதி முழுமைக்கும் பாசன வசதி அளிக்கின்றன.



''காவிரிக் கழிமுகப் பகுதியில் 36 பெரிய ஆறுகள் உள்ளன. அவைகளின் மொத்த நீளம் 999 மைல். இப்பெரிய ஆறுகள் அல்லாமல், 14,891 மைல் மொத்த நீளமுள்ள 29,881 வாய்க்கால்கள் கழிமுகப் பகுதிக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கின்றன. சில வடிகால் ஆறுகள் மேல் பகுதியிலோ அல்லது கீழ்ப் பகுதியிலோ பாசன ஆறுகளாக பயன்படுவது இப்பகுதிக்கே உரிய தனித்தன்மையாகும்.

''மேல் அணையிலிருந்து 67 மைல் தூரத்தில் கொள்ளிடத்தின் குறுக்கே கீழ் அணை ( Lower Anicut ) கட்டப்பட்டுள்ளது. இதை 'சர் ஆர்தர் காட்டன்' என்பவர் 1836-ஆம் ஆண்டில்—மேல் அணை கட்டப்பட்ட காலத்திலேயே-கட்டியுள்ளார். மேல் அணை கட்டப்பட்டதால் கொள்ளிடத்தை நம்பியுள்ள தென்னுர்க்காடு மாவட்ட நிலங்கள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காகவும், தஞ்சை மாவட்டத்தின் வட் கிழக்குப் பகுதியில் காவிரியால் போதிய பாசன வசதி பெருதிருந்த நிலங்களுக்கு உறுதியான பாசனவசதி அளிக்கவும், கீழ் அணை கட்டப்பெற்றது. வடவாறு மற்றும் வீராணம் ஏரிக்குத் தண்ணீர் வழங்க-பழங்காலத்தில் மணலையும், கிளைகளையும் கொண்டு அமைக்கப்பட்டு வந்த தடுப்புச் சுவரை மாற்றியமைக்கவே-கீழ் அணை கட்டப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். கீழ் அணையின் மேல் 1855-ஆம் ஆண்டில் ஒரு பாலம் அமைக்கப்பட்டது. கீழ் அணை 1856—1957-ஆம் ஆண்டுகளில் விரிவு படுத்தப்பட்டு, 1899-ஆம் ஆண்டிற்கும் 1902-ஆம் ஆண்டிற்கும் இடையில், மேல் அணையைப் போலவே, புதுப்பித்துக் கட்டப்பட்டது. பிறகு கீழ் அணையின் தடுப்புச் சுவர் மட்டம் மேலும் 2 அடி தாழ்த்தப்பட்டு, வடவாறுக்கும், வீராணம் ஏரிக்கும் அதிக அளவு தண்ணீர் வழங்கப்பட்டது. கீழ் அணையின் தரைமட்டம் 1914-ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டு வலிவூட்டப்பெற்றன. வெள்ளம் வடிவதற்கு வசதியாக கீழ் அணையின் தெற்குப் பகுதியில், புதிதாக 10 கண்மாய்கள் 1929-ஆம் ஆண்டில் கட்டப்பட்டன. மேட்டூரிலிருந்து வரும் தண்ணீரில் ஒரு பகுதியைத் தனியாக கல்லணையிலிருந்து உள்ளாறு வழியாகக்கொள்ளிடத்திற்குத்திருப்பி விடுவதால், கீழ் அணையின் கீழுள்ள நிலங்கள் உறுதியான பாசனம் பெறுகின்றன.

''காவிரிக் கழிமுகப் பகுதியில் தற்பொழுது 9,34,150 ஏக்கர்



நிலப் பரப்பு நீர்ப்பாசன வசதி பெற்று வருகிறது. இப்பகுதியின் முக்கியப்பயிர் நெல். இப்பகுதியில் வழக்கமாக 6.5 இலட்சம் ஏக்கரில் ஒருபோக சாகுபடியும், 2.5 இலட்சம் ஏக்கரில் இருபோக சாகுபடியும் நடைபெற்று வந்து கொண்டிருந்தது. கல்லணைக் கால்வாய் மூலமாக 2.5 இலட்சம் ஏக்கர் பாசன வசதி பெற்று வருகிறது.

'' கீழ் அணைக்கட்டின் மூலம், தற்பொழுது 1,15,141 ஏக்கர் பாசனம் பெறுகிறது. அதில் 70,024 ஏக்கர் ஒரு போக நிலமாகவும், 45,117 ஏக்கர் இருபோக நிலமாகவும் உள்ளது.

இதுவரை காவிரியைப் பற்றிய விவரங்களைச் சொன்னேன். இது போதுமா? இன்னும் ஏதேனும் விவரம் தேவையா?'' என்றேன்.

''இதுவே போதும் தம்பி! காவிரியைச் சீரமைக்க வேண்டிய அவசியம் என்ன தம்பி?'' என்ருர் அவர்.

''வான் பொய்ப்பினும் தான் பொய்யா காவிரி!'' என்று ஒரு காலத்தில் புகழப்பட்ட காவிரியாற்றில் இன்று போதுமான வெள்ளம் வருவதில்லை. அப்படியே வெள்ளம் வந்தாலும், காலத்தில் வருவதில்லை! அதன் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் குறுவைச் சாகுபடியையும், முன் போக சம்பா சாகுபடியையும் காலத்தில் செய்ய முடிவதில்லை, தப்பித்தவறி காலத்தில் வெள்ளம் வந்து குறுவையையும், முன் போக சம்பாவையும் சாகுபடி செய்யத் தொடங்கிவிட்டால், ஒரு சில வாரங்களுக்குப்பிறகுத் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுகிறது அல்லது தாளடிப் பயிருக்குத் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுகிறது. தஞ்சை மாவட்டத்தில் ஏதோ சில ஆண்டுகளைத் தவிர, மற்றெல்லா ஆண்டுகளிலும் வழக்கமாக இந்நிலை ஏற்படுகிறது. இதனுல் தஞ்சை மாவட்ட உழவர்கள் தாங்கொணுத இன்னல் அனுபவித்து வருகின்றனர். தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் தட்டுப்பாடு என்ருல் தமிழகமே வருத்தப்படுகிறது. ஏனெனில், தமிழகத்தில் உற்பத்தியாகும் அரிசியில் நான்கில் ஒரு பங்கு தஞ்சை மாவட்டத்திலிருந்துதான் கிடைக்கிறது.

''இதே நிலைமையைத்தொடர்ந்து நீடிக்க விடக் கூடாதென்பதற்காகவும், தற்பொழுது தஞ்சை மாவட்ட பாசன முறையில் உள்ள பல சங்கடங்களைத் தவிர்த்து தஞ்சை மாவட்ட உழவர்கள் படும் இன்னலைப் போக்க வேண்டுமென்பதற்காகவும், இன்றையத் தமிழ்நாடு அரசு காவிரியாற்றை காலத்திற்கேற்ற வகையில் சீரமைப்பு செய்யும் திட்டத்தை (Modernisation of Cauvery system) துவக்கியுள்ளது'' என்றேன்.

''தஞ்சை மாவட்ட பாசன முறையில் பல சங்கடங்கள் உள்ளதாகக்கூறுகிறாயே, அதைப் பற்றி சற்று விரிவாக சொல் தம்பி!'' என்றார் அவர்.

''தீவிரச்சாகுபடித்திட்டம் என்றழைக்கப்படும் தீவிர வேளாண்மை மாவட்டத்திட்டம்(Intensive Agricultural District Programme) தஞ்சை மாவட்டத்திற்குப் பெரும் பயன் அளித்து வருவதால், பெரும் புகழும் பெற்று விளங்குகிறது. கடந்த சில ஆண்டுகளில் உயர் விளைச்சல் ரகங்களைப் புகுத்துவதிலும், இரசாயன உரங்களின் உபயோகத்தை அதிகப்படுத்துவதிலும், பாசன நீரைப் பயனுள்ள முறையில் பயன்படுத்துவதிலும் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வந்தது. சீரிய முறையில் பாசன நிருவாகத்தை மேற்கொள்ளுவதற்கு, தஞ்சை மாவட்டத்தில் நெடுநாட்களாக நின்று நிலைத்து வரும் பழமையான பாசன முறை, ஒரு முக்கிய இடையூறாக இருந்து வருகிறது.

''கல்லணைக் கால்வாய் மூலம் பாசனம் பெறும் பகுதியைத் தவிர, பழைய கழிமுகப்பகுதியில் உள்ள நீர் வழங்குமுறை நீண்ட நெடுநாட்களாகவே இருந்து வருகிறது. இப்பாசன முறையில் ஒரு சிறு அளவுக்கேனும் கட்டுப்பாடு ஏற்படுத்தி, நம் விருப்பத்திற்கேற்ப தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்வதென்பது இயலாததொன்றாக இருந்து வருகிறது. ஒரு வயலிலிருந்து மற்றொரு வயலுக்கு என்ற முறையில் பாசனம் செய்யப்படுகிறது. இதனால் கடைமடையில் உள்ள நிலங்கள் காலத்தில் தண்ணீர் பெற முடிவதில்லை. பல இடங்களில் நீரை வடிப்பதும், பாசனம் செய்வதும் ஒரே வாய்க்கால் மூலமாகவே நடைபெறுவதால், நீரை வடிப்பது மிகவும் கடினமாக உள்ளது. இவையெல்லாவற்றிற்கும் மேலாக, காவிரி கழிமுகப் பகுதி வெள்ளத்தில் அமிழ்ந்தும், அழிந்தும் குறிப்பிடத் தகுந்த அளவு சேதம் அடைகிறது.

''காலம் கற்றுக் கொடுத்த பாடத்தையும், உழவர் பெருமக்களின் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967–68-ஆம் ஆண்டில், பரம்பரை பரம்பரையாக ஒரு போகமே சாகுபடி செய்யப்பட்டுவந்த தஞ்சை மாவட்ட நன்செய் நிலங்களில், இரு போகம் சாகுபடி செய்யும் திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிட்டார். இன்றைய தமிழ்நாட்டு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், 1967–68-ஆம் ஆண்டிலே பொதுப் பணித்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த நேரத்திலே, தஞ்சாவூரில் நீர்ப்பாசன மாநாடு நடைபெற ஆவன செய்தார். அந்த மாநாட்டில் இரு போக சாகுபடித் திட்டத்தைப் பற்றி விரிவாக விவாதித்து முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவிற்கேற்ப இருபோக சாகுபடித் திட்டத்தைத் தீவிரமாக செயல்




படுத்திட பேரறிஞர் அண்ணா அவர்கள் தீவிர கவனம் செலுத்தினார். அதன் பயனாக அந்த ஆண்டில், தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் 2.1 இலட்சம் ஏக்கர் ஒருபோக சம்பா நிலத்தில், இருபோகம் சாகுபடி செய்யப்பட்டது. அதன் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் அந்த ஆண்டில் முதற் போகத்தில் மட்டும் 5.92 இலட்சம் ஏக்கரில் ஆடுதுறை-27 நெல் பயிரிடப்பட்டது. அதனால் 13.83 கோடி ரூபாய் மதிப்புள்ள 2,88,210 டன் அரிசி அதிகமாக உற்பத்தியாகியது. வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு முதல் போகத்தில் மட்டுமே 115·29 இலட்சம் ரூபாய் உபரி வருவாய் கிடைத்தது. இரண்டாவது போகத்தில் ஏறத்தாழ 6 கோடி ரூபாய் அதிக வருவாய் உழவர்களுக்குக் கிடைத்தது. இருபோக சாகுபடித் திட்டத்தின் காரணமாக நெல் உற்பத்தி அதிகமாகியதால், அந்த நெல்லை உடனடியாகக் காயவைத்துப் பதப்படுத்தி சேமித்து வைக்க 30 நெல் உலர்த்தும் ஆலைகள் தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டன. அத்துடன் தஞ்சை மாவட்டத்தில் அந்த ஆண்டில் மட்டும் 4.5 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டு, தமிழ்நாட்டில் நீண்ட நாட்களாக நிலவி வந்த உணவுப் பற்றாக் குறை நீக்கப்பட்டு, தன்னிறைவு அடைய முடிந்தது.

''தஞ்சை மாவட்ட இருபோக சாகுபடித் திட்டத்தின் வெற்றி உழவியல் சரித்திரத்திலேயே எங்கும், என்றும், கண்டும், கேட்டுமிராத மாபெரும் சாதனையாகும். இத் திட்டத்தினை அமெரிக்க நாட்டு 'லுக்' (Look) என்ற நாளேடு—நாளொன்றுக்கு 70 இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் இதழ்—'வேளாண்மையில் அமைதிப் புரட்சி' (Silent Revolution in agriculture) என்று வர்ணித்துள்ளது.

''பேரறிஞர் அண்ணா இருபோக சாகுபடித் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்பாக (1966–67 வரை), வழக்கமாக தஞ்சை மாவட்டத்தில் ஆண்டு தோறும் சுமார் 3 லட்சம் ஏக்கரில் குறுவையும், சுமார் 9 இலட்சம் ஏக்கரில் சம்பாவும், 2.70 இலட்சம்ஏக்கரில் தாளடியும் ஆக, மொத்தத்தில் 14·70 இலட்சம்ஏக்கரில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டு வந்தது. பேரறிஞர் அண்ணா கொண்டு வந்த இருபோக சாகுபடித் திட்டத்தின் காரணமாக, 1967–68-ஆம் ஆண்டில், தஞ்சை மாவட்டத்தின் மொத்த சாகுபடி பரப்பு 15.68 இலட்சம் ஏக்கராக உயர்ந்தது. அண்ணா வழியில் அரும்பணியாற்றி வரும் கலைஞரும் இருபோக சாகுபடி திட்டத்தில் பேரார்வம் காட்டி வருவதால், சென்ற ஆண்டு (1971–72), தஞ்சை மாவட்டத்தின் மொத்த சாகுபடி பரப்பு 16.72 இலட்சம் ஏக்கராக உயர்ந்தது. மிகுபயன்தரும் ரகங்களின் பயனாலும், இருபோக சாகுபடியின் பயனாலும், 1966–67-ஆம் ஆண்டில் 8·77 இலட்சம் டன்னாக இருந்த தஞ்சை மாவட்டத்தின் அரிசி உற்பத்தி, 1970–71-ஆம் ஆண்டில் 13.01 இலட்சம் டன்னாக உயர்ந்தது.

''இவ்வாறு சாகுபடி முறையில் பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருவதால், பாசன முறையில் ஏற்பட்டிருந்த சிக்கல்கள் தீவிர மடைந்தன''.

—ஆர். எம்.

(அடுத்த இதழில் முடியும்)


ஆராய்ச்சி மணி 11
கதை: இளவல்
படம்: கோபணிக்ஷ
குகைகள் பக்கம் சென்றுகொண்டிருந்த காரில் மணியும் மாணிக்கமும் தொடர்ந்து சிரித்தது சேகருக்குக் கோபத்தை மூட்டியது!
ஏண்டா இப்படிச் சிரிக்கிறீங்க!
என்ன சார்! மரியாதை குறையுது. நீங்க எழுதியிருக்கிற லெட்டரைப் படிச்சால் சிரிக்காமலா இருக்க முடியும். உங்க பையிலிருந்து விழுந்த லெட்டர் இந்தாங்க.... நீங்களும் படிச்சிட்டுச் சிரியுங்க!.!
கடிதத்தைப் பார்த்தவுடன் சேகர் பயத்தோடு பேச ஆரம்பித்தான்...
ஐயய்யோ! கயல்விழியிடம் கொடுக்க வேண்டிய லெட்டர் இது. தவறிப்போய் அந்தக் கடிதத்தைக் கொடுத்திட்டேனே!
அந்தக் கடிதத்தில் என்ன சார் எழுதி இருக்கு?
உங்கள் தலைவிதியை எழுதியிருந்தேன்! அது கொஞ்சம் மாறப் பாக்குது நான் மாற விடுவேனா?
என்னடா மணி! சேகர் சார் என்னமோ உளர்றாரு?
பயம் வந்துடுச்சு அவருக்கு! பாவம்!
டேய்! உங்க முடிவு நெருங்கி விட்டது. முதல்லே காரை விட்டுக் கீழே இறங்குங்க... உங்களை வேட்டையாட எங்கள் ஆட்கள் தயாராக இருக்கிறாங்க!
காரை விட்டு எல்லாரும் இறங்கினார்கள்
மணி! வகையா மாட்டிக்கிட்டோம்பா! கடவுள்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும்
டேய்! பொடிப் பயல்களா? எங்களையா நீங்க பயமுறுத்தறீங்க!
முதல்லே பொடியன்களின் கையையும் கண்ணையும் கட்டுங்க.


முதல்லே இந்தப் பையன்களைக் கொண்டு போங்க. நான் அவசரமாக ஒரு வேலையை முடித்துவிட்டு வருகிறேன்! டேய்! துப்பறியும் நிபுணு! நான் வர்றேன்.
சேகருடன் சென்ற மணியும் மாணிக்கமும் வராததினால் இருந்த கவலையுடன் திருஞானமும் கயல்விழியும் வீட்டில் இருக்கிறார்கள்
ஏன் அப்பா போலீசிலே ரிப்போர்ட் பண்ணினா என்ன?
சேகர் கூடத்தானே போயிருக்காங்க இன்னும் கொஞ்ச நேரம் பார்ப்போம்
அப்போது...
கயல்விழியின் தோழி செந்தாமரை அங்கு வந்தாள்..
மாணிக்கம் இருக்கானா கயல்விழி?
நீ எப்பொழுது செந்தாமரை சென்னையிலிருந்து மதுரைக்கு வந்தே?
இன்று காலையில்தான் இங்கு வந்தேன். அப்பா வடக்கே வியாபார விஷயமா போயிட்டாங்க. உடனே தம்பியை சென்னைக்கு அழைச்சிட்டு வந்திடுன்னு சொன்னாங்க. மணி மாணிக்கம் எங்கே?
சேகர் கூட அழகர் மலைக்குப் போய் இருக்காங்க
யாரது, சேகர்? இந்த ஊர்க்காரர்தானா?
நான்தான் சேகர். ஆமாம் மணியும் மாணிக்கமும் எங்கே?
உங்க கூடத்தானே வந்தாங்க?
என்கூட வரவில்லையே! அடுத்த தெருவில் கார் ரிப்பேராகிவிட்டது. நாளைக்கு வேறே காரிலே போகலாம்னு சொன்னேன். உடனே வீட்டுக்குக் கிளம்பினாங்களே.... இங்கே வரலியா?
இப்ப என்ன செய்யறது?
உடனே போலீசுக்குப் போன் பண்ணுங்க!
வேண்டாம் நாங்களே வந்து விட்டோம

# பிஞ்சுக்குழந்தைகளின் நெஞ்சங்கவர்ந்தவர்

செல்வி

"காக்கை குருவி எங்கள் சாதி —நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்"

அமுதன் இந்தப் பாட்டைச் சத்தமிட்டுப் பாடிக் கொண்டிருந்தான். அப்போது அங்கு வந்த தங்கை தேன்மொழி, "அண்ணா! பாரதியார் பாட்டுத் தானே இது!" என்றாள்.

"ஆமாம் தேன்மொழி! வேறு யார் இப்படிப் பாட முடியும்? காக்கையையும், குருவியையும், கடலையும், மலையையும் தனது இனம் என்று சொல்லக் கூடிய பெரிய மனம் வேறு யாருக்கு வரும்?"—அமுதன் சொன்னான்.

"போ அண்ணா! உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! ஒரு ஆட்டுக் குட்டியைத் தனது தம்பி என்று சொல்லி இருக்கிறார் ஒரு தாத்தா. அவரை உனக்குத் தெரியுமா?"—தேன்மொழி கேட்டாள்.

"யாரது? ... ... ... ... எனக்குத் தெரியவில்லையே!" என்றான் அமுதன்.

"அவர்தான் காந்தித் தாத்தா"—மகிழ்ச்சி அலை மோதத் தேன்மொழி சொன்னாள்.

"என்ன தேன்மொழி! எனக்குத் தெரியாத செய்தியெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது?"—அமுதன் வியப்புடன் பேசினான்.

"நேற்று எங்கள் ஆசிரியை காந்தித் தாத்தாவைப் பற்றி நிறையக் கதை சொன்னார்கள் அண்ணா!"

"அப்படியா! எங்கே ஒவ்வொன்றாகச் சொல்லு!"

"எல்லாக் கதைகளையும் சொல்ல முடியாது அண்ணா! நான் 7 மணிக்கு 'டியூசன்' படிக்கப் போக வேண்டும்! அதற்குள்ளாக எவ்வளவு சொல்ல முடியுமோ அவ்வளவையும் சொல்கிறேன்."

தேன்மொழி இவ்வாறு சொல்லியதும், அதுவரை நின்று கொண்டே பேசிக் கொண்டிருந்த அமுதன் தரையில் சம்மனம் போட்டு அமர்ந்தபடி, "சீக்கிரம் சொல்லு தேன்மொழி!" என்றான்.

தேன்மொழி காந்தித் தாத்தாவைப் பற்றிச் சொல்லத் துவங்கினாள்.

"காந்தித் தாத்தா ஆசிரமத்திலிருந்தார். அவர் எப்போதும் ஆட்டுப்பால் அருந்தி வந்தார். அதனால் அவரது ஆசிரமத்தில் ஆடு ஒன்று இருந்தது. அந்த ஆட்டுக்குக் குட்டி ஒன்று இருந்தது. தினமும் மாலையில் காந்தித் தாத்தா உலாவப் புறப்படுவார். அப்போது அந்த ஆட்டுக் குட்டியும் புறப்படும். ஒரு நாள் அவருக்கு முன்னும் பின்னும் சென்று தொல்லை கொடுத்தது. காந்தித் தாத்தா அப்போது என்ன செய்தார் தெரியுமா? ஆட்டுக் குட்டியின் காதைப் பிடித்து நிறுத்தினார்."

"இதோ பார்! நீ மிகவும் பொல்லாதவன். நீ எனக்குத் தொல்லை கொடுப்பது ஏன் என்று எனக்குத் தெரிந்துவிட்டது. உனது அம்மா தரும் பாலை நானும் பங்கு போட்டுக் கொள்கிறேனே என்கின்ற பொறாமையுணர்ச்சியிலே நீ இவ்வாறு செய்கிறாய்! நீயும் நானும் இனி அண்ணன் தம்பிகள்! ஒரு தாய்ப்பாலைக் குடித்து வளர்கிறோம் இல்லையா?"

என்று கூறி ஆட்டுக் குட்டியின் முதுகைத் தடவிக் கொடுத்தார். இப்போது புரிகிறதா அண்ணா, பாரதியார் மட்டுமல்ல, காந்தித் தாத்தாவும் விலங்குகளைத் தமது இனம் என்று பாராட்டிப் பேசியிருக்கிறார் என்ற செய்தி!"—தேன்மொழி இவ்வாறு கேட்டாள்.

"தேன்மொழி! நமது எதிர் வீட்டில் உள்ள சாமிநாதனும், கயல்விழியும் தாங்கள் உடன் பிறந்தவர்கள் என்பதையே மறந்துவிட்டு, ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்கிறார்களே ... ... ... ... ...! அவர்களிடம் போய் இந்தச் செய்தியைச் சொல்ல வேண்டும்—விலங்கையும் தன்னையும் அண்ணன் தம்பியாக எண்ணிக் கொண்ட காந்தித் தாத்தாவின் பெரிய மனத்தைத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும்; வருகிறாயா போவோம்!"—அமுதன் ஆர்வத்துடன் கேட்டான்.

"அண்ணா உன் ஆர்வம் நியாயமானதுதான், ஆனால் ... ... ... ... எதிர்வீட்டுக்காரர்கள் அனைவரும், வெளியூரில் உள்ள உறவினர் வீட்டுத் திருமணத்திற்குக் குடும்பத்துடன் சென்றிருக்கிறார்கள் என்பதை மறந்துவிட்டாயா?"

"ஆமாமா! இப்போதுதான் நினைவு வருகிறது ... ... ... சரி அடுத்த கதையைச் சொல்லு!"

"அண்ணா! குழந்தையும் தெய்வமும் ... ... ... ... ... ..."
"... ... ... ... ... கொண்டாடும் இடத்தில்; எனக்குத் தெரியும்!"

"உனக்குத் தெரியும். அந்தப் பழமொழி காந்தித் தாத்தா வாழ்க்கையில் அப்படியே உண்மையாக நடந்திருக்கிறது. ஒரு தடவை காந்தித் தாத்தா வட்டமேசை மாநாட்டுக்காக இலண்டன்

சிறுவர் அரங்கம்

சென்றார். கிங்ஸ்லி கூடம் என்ற கட்டடத்தில் தங்கியிருந்தார். அவரைப் பார்த்துச் செல்ல அரசியல் வாதிகள் வந்தார்கள்—பத்திரிகைக்காரர்கள் வந்தார்கள். அவர்கள் மட்டுமல்ல; எண்ணற்ற குழந்தைகளும் தாத்தாவைப் பார்க்க வந்தார்கள். அந்தக் குழந்தைகளோடு காந்தித் தாத்தா சலிப்பின்றிப் பேசினார்; விளையாடினார். அந்தக் குழந்தைகளும் காந்தித் தாத்தாவை விட்டுப் பிரியாமல் எப்போதும் சூழ்ந்து கொண்டே இருந்தார்கள். அப்போது குழந்தைகளிடம் காந்தித் தாத்தா ஒரு கேள்வி கேட்டார். அது என்ன தெரியுமா?''

''சொன்னாத்தானே தெரியும் தேன்மொழி! சொல்லாமலே என்னைக் கேட்டால் ... ... ... ..''

''சரி சொல்கிறேன்! காந்தித் தாத்தா என்ன கேள்வி கேட்டார் தெரியுமா? ஒரு டப்பா நிறையப் பட்டாணிக் கடலையை வைத்துக் கொண்டு 'இதில் எத்தனை பட்டாணிகள் இருக்கின்றன' என்றார். எந்தப் பையன் சொல்கிறானோ அவனுக்கு ஓர் அன்பளிப்பு தரப் போகிறேன் என்றும் கூறினார்''

''பையன்கள் சொல்லி விட்டார்களா?''— அமுதன் கேட்டான்.

''அதிலேதான் வேடிக்கையிருக்கிறது அண்ணா! ஒரு சிறுவன் நூறு பட்டாணி என்றான். மற்றோர் சிறுவன் இருநூறு என்று சொன்னான். இப்படி ஒவ்வொருவரும் தனக்கு உகந்ததைச் சொன்னார்கள். காலிக் என்ற பெயருள்ள ஒரு சிறுவன் காந்தித் தாத்தாவின் அருகில் வந்து நின்று, 'தாத்தா, தாத்தா! ஒரு டப்பா நிறைய பட்டாணி இருக்கிறது' என்று சொன்னான். அந்தச் சிறுவன் சாமர்த்தியமாகப் பதில் சொன்னதைக் கேட்ட காந்தித் தாத்தா மகிழ்ந்து போனார். அந்தச் சிறுவனுக்கு அழகான பரிசு ஒன்றினைத் தந்தார்''

''என்ன பரிசு தந்தார் தேன்மொழி?''

''அழகான-வெள்ளை வெளேரென்றிருந்த ஒரு முயல் குட்டியைப் பரிசு தந்தார்''

''அப்படியா! ஆமாம் ... ... ... அந்த முயல் குட்டி காந்தித் தாத்தாவுக்கு ஏது? நம்ம நாட்டிலிருந்தே கொண்டு போயிருந்தாரா?''

''இல்லை அண்ணா, இலண்டனுக்கு அவர் சென்றிருந்த சமயம் அவரது பிறந்தநாள் வந்தது. அங்குள்ள மக்கள் தாத்தாவைச் சந்தித்துப் பலவித அன்பளிப்புகளை அவருக்குக் கொடுத்தார்கள். அதிலே அந்த முயல் குட்டியும் அன்பளிப்பாக வந்து சேர்ந்தது. அந்த அன்பளிப்புப் பொருளைத் தான் சிறுவனுக்குக் கொடுத்தார் காந்தித் தாத்தா''

''தேன்மொழி! எனக்கு ஒரு கருத்துத் தோன்றுகிறது. 'வாழ்க்கை பிறருக்குக் கொடுப்பதற்காகத்தான், ஏற்றுக் கொள்வதற்கல்ல' என்று சொல்வார்களே அந்தத் தத்துவத்தை காந்தித் தாத்தா அப்படியே கடைப்பிடித்திருக்கிறார்''

''இதை எங்கள் ஆசிரியையும் சொன்னார்கள். நீயும் அப்படியே சொல்கிறாய் அண்ணா!'' தேன்மொழி சொன்னாள்.



''இதிலிருந்து உனக்கு என்ன விளங்குகிறது? சொல்லு பார்ப்போம்!''

''ஒன்றும் விளங்கவில்லையே?''

''அதாவது ... ... ... ... ... எதிர்காலத்தில் நானும் ஒரு பள்ளி ஆசிரியர் ஆகப் போகிறேன் புரிந்து கொள்!'' — அமுதன் சொன்னான்.

''உயர்ந்த பணி; உன்னதமான பணி; காந்தித் தாத்தா கூட ஆசிரியர் வேலை செய்ய நினைத்திருக்கிறார் அண்ணா; ஆனால் அந்த ஆசை நிறைவேறவில்லை.''

''அப்படியா! அந்த விவரம் எனக்குத் தெரியாது; கொஞ்சம் சொல்லு தேன்மொழி!''

''ஏன் அண்ணா? உண்மையிலேயே தெரியாமல்தான் கேட்கிறாயா? என்னைக் கிண்டல் செய்வதற்காகக் கேட்கிறாயா?''

''தெரிந்திருந்தால் நானல்லவா உனக்குச் சொல்லியிருப்பேன்! உன்னிடம் நான் கேட்டுக் கொண்டிருக்க மாட்டேனே!''— அமுதன் சொன்னான்.

''சரி, சொல்கிறேன். மணி 6.50 ஆகிவிட்டது. இன்னும் பத்து நிமிடத்திற்குள் சொல்லி முடித்துவிட்டு நான் டியூசனுக்குப் போகவேண்டும் அண்ணா!''

''சீக்கிரம் சொல்லு, நீ தானே நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறாய் ... ... ...?''

''கேளு அண்ணா! காந்தித் தாத்தா வெளிநாடு சென்று சட்டக் கல்வி படித்து வந்தார். சட்டப் படிப்பில் அவருக்குக் கொஞ்சம் கூட விருப்பமில்லை, ஆனாலும் பெற்றோர்களின் விருப்பத்திற்காகப் படித்தாராம்; பிறகு வழக்கறிஞராகத் திரும்பி வந்து ராஜகட்டத்தில் தொழில் நடத்தினார். அங்குத்தொழில் சரிவர நடக்காததால், பம்பாய் சென்று தொழில் நடத்தினார். அங்கேயும் அந்தத் தொழில் சரிவர அவருக்கு நடைபெறவில்லை. சலிப்புடனேயே இருந்தார். அந்தச் சமயத்தில் தான் ஒருநாள் ஒரு பத்திரிகையில் வெளி வந்த விளம்பரம் அவரது கண்ணில் பட்டு விட்டது''

''என்ன விளம்பரம் தேன்மொழி?''

''அதாவது தனிப்பட்ட ஒருவர் தனது குழந்தைக்கு ஆங்கிலப் பாடம் சொல்லித்தர வேண்டும்; மாதம் 75 ரூபாய் தரப்படும்; தகுதியுடையோர் உடனே வருக, என்று ஒரு விளம்பரம் செய்திருந்தார். அந்த விளம்பரத்தைக் கண்ணுற்ற காந்தித் தாத்தா அதில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டுக்குச் சென்று விளம்பரம் செய்தவரைச் சந்தித்துத் தனது தகுதியை எடுத்துச் சொன்னாராம். அப்படியிருந்தும் காந்தித் தாத்தா இந்தியர் என்பதால் அவருக்கு அந்த அலுவல் கிடைக்கவில்லை! பாவம்! ஏமாற்றத்துடன் திரும்பி விட்டார்.''

''அதனாலென்ன தேன்மொழி! காந்தித் தாத்தாதான் நமது இந்திய நாட்டுக்கே ஆசிரியராக விளங்கியிருக்கிறாரே!''—அமுதன் சொன்னான்.

அப்போது கடிகாரம் ஏழு மணியை உதிர்த்தது. உடனே, தேன்மொழி ''அண்ணா நான் டியூசனுக்குப் போகிறேன்'' என்று ஓடிச் சென்று விட்டாள்.

அமுதன், காந்தித் தாத்தாவின் கதையை அழகாக எடுத்துச் சொன்ன தன் தங்கையின் திறமையைஎண்ணி மனத்துக்குள் பாராட்டிக் கொண்டிருந்தான்.

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக